# யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி

# தமிழ் அலைகள் – 4



## தமிழ்ப்பேரவை

2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அலைகள் - 04

## 2012

மெய்ப்பொருள் காண்பது அறிவு

ஸ்ரீமா வைத்தீஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாணம்

EST 1913

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

தமிழ்ப்பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

இராகம் :- மோகனம் தாளம் :- ஆதி

வீறுகொண்ட விவேகானந்த வேதஞானக் களஞ்சியத்தைப்
பேறுகொண்ட இராமகிருஷ்ண பேரருட் செல்வத்துடனே
சாறுகொண்டு பார்முழுவதும் தானம் செய்த வேறுலகை
மாறுகொள்ளா வைத்தீஸ்வரராக் கல்லூரி வாழியவே

சாதிமத பேதமற்ற சமரசன்மார்க்க நெறி
மேதினியிற் கால்கொளவே மெச்சுகாவி பச்சை நீலம்
நீதிவளர் மூவர்ண நீள் கொடியுங் குண்டலியென்
றாதியுள இலாஞ்சனையும் அடிகளாரும் வாழியவே

நன்னெறியோர் ஏத்துகின்ற நாகமுத்து செய்தவமும்
தன்னடிசேர் சர்வானந்தா விபுலானந்தா இதயபூர்வப்
பொன்னருளும் கல்லூரி பொழிவெய்த முதல்வருடன்
இன்னருளுள் வைத்தீஸ்வரன் இருங்கருணை வாழியவே

இயற்றியவர்
வித்துவான் பொ.கனகசபை
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினால் பிரசவிக்கப்படும் "தமிழலைகள்-4" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வைத்தீஸ்வராக் கல்லூரி பழமையும், பெருமையும் வாய்ந்த பாடசாலைகளிலொன்று. புகழ் பெற்ற கல்விமான்களை எம்மண்ணுக்கு ஈந்த பெருமை இக்கல்லூரிக்குண்டு. இத்தகு பெருமைகளைக் கொண்ட வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்பேரவையினால் வெளியிடப்படும் மலர் கனதி வாய்ந்த கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முப்பரிமாண ஊடகங்களின் வளர்ச்சியால் மாணவரிடத்தே அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த வேண்டியது எம்மனைவரதும் கடமையாகும்.


"தமிழலைகள் - 4" மாணவர்கள், கல்வியலாளர்களது பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழலைகள் ஓயாது இம்மண்ணில் ஒலிக்க வாழ்த்துகின்றேன்.

**வ.செல்வராசா**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



யாழ் மண்ணில் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றான வைத்தீஸ்வராக் கல்லூரியின் முத்தமிழ் மன்றத்தின் "தமிழ் அலைகள் - 4" என்னும் சஞ்சிகை மலர வாழ்த்துவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

அறிவுக்கடலில் அறிவுத்தேடல் ஒருசுவை அதை கொண்ட கல்லூரியில் அறிவு அலை அலையாக மாணவர் மனங்களில் பாய்ந்து சமூகத்திற்கு பொருத்தமான தகைமையை இட்டுச் செல்லும்.

அவ்வழியில் இச்சஞ்சிகை மிளிர்ந்து மாணவர்களுக்கு அறிவுக்கண்ணைத்திறக்க எல்லாம் வல்ல வைத்தீஸ்வரனை வணங்கி வாழ்த்துகின்றேன்.


*சு.சண்முககுமார்* M.Ed

***கோட்டக்கல்விப்பணிப்பாளர்***

***யாழ்.கல்விக்கோட்டம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் கல்விப் பணிப்பாளரின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண கல்வி வலய புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றான யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப்பேரவை வருடாவருடம் வெளியிட்டு வரும் "தமிழ் அலைகள் - 4" சஞ்சிகை இவ் வருடமும் சிறப்பாக வெளிவருகின்றமை எனக்கு மட்டற்ற மகிழச்சியைத் தருகின்றது. தமிழ்த் துறையிலே மாணவர்கள் மத்தியில் மொழித்திறன் விருத்தியும் படைப்பாற்றல் திறனும் குறைந்து வருகின்ற இந்தக்காலகட்டத்தில் சஞ்சிகைகள் வெளிவர வேண்டியது கட்டாயமானதாகும். அந்தக் கட்டாயமான காலத்தின் தேவையைக் கருதி தமிழ் அலைகள் சஞ்சிகை வெளிவருவது மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தி மேம்படுவதற்கு உதவுகின்றது என்றே கூறலாம் இந்தச் சஞ்சிகையிலே வெளிவருகின்ற பல்வேறு ஆக்கங்கள் மிகவும் காத்திரமானவை. இவ்வாறனதொரு அரும்பணியை செய்து வருகின்ற தமிழ்ப் பேரவைக்கும், அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அதிபர், ஆசிரியர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் தமிழ் அலைகள் சஞ்சிகை ஓயாது வருடந்தோறும் வெளிவந்து கல்லூரி அன்னையின் மடியில் தவழ்ந்து மெருகூட்ட வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

*திருமதி. மீரா. அருள்நேசன்*
BA(SP)MA PGD
*உதவிக்கல்விப் பணிப்பாளர்*
*தமிழ்த்துறை*
*யாழ் கல்வி வலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்ற வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினால் தமிழ் அலைகள் - 4 என்ற பெயரில் வெளிவருகின்ற தமிழ்ச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த சங்ககாலம் முதல் இற்றை வரை தமிழை வளர்ப்பதற்கு அதன் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கு எத்தனையோ தமிழ் அமைப்புக்கள் அரும் பாடுபட்டு உலக அரங்கில் தமிழ்மொழியை இனிய மொழி என்று பறைசாற்றி நிற்கின்றன. இந்த வகையில் எமது தமிழ்ப் பேரவையும் முத்தமிழை வளர்ப்பதற்காக அதன் இருப்பை நிலை நிறுத்துவதற்காகத் தமிழ் அலைகள் என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுத் தமிழ் அன்னையை அழகுபடுத்துவது கண்டு பெருமையடைகின்றேன்.

இச் சஞ்சிகை வெளியீடானது மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியின் பிரதான அங்கமாக விளங்குகின்றது. மாணவர்களின் ஆற்றல், ஆர்வம் என்பவற்றிற்கேற்ப மொழித்திறன்களை உயர்மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதாகவும் மாணவர் மையப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக முயன்று தேடிக்கற்கும் மாணவர் முயற்சிக்கு வழி அமைத்துக் கொடுக்கும் கைங்கரியமாகவும் இதனைக் காண்கின்றேன்.

எமது கல்லூரியின் தமிழ்ப்பேரவைப் பொறுப்பாசிரியர்கள் கல்லூரியின் தமிழ்ப் பாரம்பரியங்களைக் கட்டிக்காப்பதில் முனைப்புடன் செயற்படுவதோடு மாணவர்களைத் தம்பால் ஈர்த்து இம்மலரினை ஆவணமாக்குவதில் அரும்பாடுபட்டிருப்பது கண்கூடு. எனவே பேரவைப் பொறுப்பாசிரியர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிப்பதோடு மேலும் இப்பேரவையானது தமிழ்ப் பணியைச் சிறப்புற ஆற்றவும் இது போன்ற மலர்கள் தொடர்ந்து வெளிவரவும் வாழ்த்துகின்றேன்.

*மு.மகேந்திரன்*
*அதிபர்*
*யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரி தமிழ்ப் பேரவையினால் வெளியிடப்படும் தமிழ் அலைகள் 4வது இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு கல்லூரியின் சிறப்பியல்புகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், மாணவர்களின் ஆக்க முயற்சிகள் என்பவற்றைச் சமூகத்திற்கு எடுத்துக் காட்டுபவை அக்கல்லூரியினால் வெளியிடப்படும் சஞ்சிகைகளே அத்துடன் வரலாற்று ஆவணங்களாக மிளிர்பவைகளும் சஞ்சிகைகளே என்றால் மிகையாகாது.

மாணவர்களினது செயல்திறன்களையும் அவர்கள் அடைந்துள்ள தேர்ச்சிகளையும் இச்சஞ்சிகை மூலம் சமூகம் அறியக்கூடியதாக உள்ளது. கல்லூரியில் கற்கும் காலங்களில் தான் மாணவர்கள் கட்டுரை, கவிதை, சிறுகதை இலக்கிய ஆக்கங்களைப் படைக்கும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்கிறார்கள்.

அந்த வகையில் இம் மாணவர்களின் முயற்சி பல்வேறு பரிமாணங்களில் பரிணமித்து வெற்றிபெற வேண்டும் என வாழ்த்துவதுடன் அவர்களை வழி நடத்திய பொறுப்பாசிரியர் திருமதி.வி.சடாட்சரம் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் அவர்களின் சிறப்பான கல்விப்பணி தொடர நல்லாசி கூறி இச் சஞ்சிகை தடை இன்றி ஒவ்வொரு வருடமும் வெளிவர வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

*செல்வி. ச. சின்னத்துரை*
*பிரதி அதிபர்*
*யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேரவைப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



கல்விக் கடலின் கலங்கரை விளக்காகத் திகழும் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினால் வெளியிடப்படும் தமிழ் அலைகள் - 04 சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மொழி என்பது தனியொரு தொடர்பாடல் ஊடகமாக மாத்திரமன்றிப், பண்பாட்டுச் செழுமையும், காலாசார விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டதாய் தனியாள் ஒருவரிடம் ஒருமைப்பாடுடைய ஆளுமை விருத்தியினை உருவாக்கும் அரும்பெருஞ் சாதனமாகவும் விளங்குகின்றது. இந்த வகையிலே தான் நமது தாய்மொழியாம் தமிழ் மொழியும் சிறப்பும் உயர்வும், உயிர்த் துடிப்பும் கொண்ட வாழும் மொழியாகத் திகழ்ந்து வருகின்றது.

அத்தகைய சிறப்பையும், தனித்துவத்தையும் செழுமையையும் கொண்ட தமிழ் மொழியைத் தொடர்ந்து வாழ வைப்பது மாணவ சமுதாயத்தின் தலையாய பணியாகும். அந்த வகையில் எமது மாணவர்கள் கற்கும் போதே தமது சிந்தனைகளைத் தூண்டி கற்பனையில் மிதந்து அதனூடு தமது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தத் தமிழ் மொழியை ஊடகமாக்கி ஆக்கங்களைத் தந்திருப்பது பாராட்டுக்குரியதும் பெருமைக்குரியதுமான காரியமாகும்.

இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கு எமது கல்லூரி அதிபர், பிரதி அதிபர் ஆகியோரின் ஊக்குவிப்பும் வழிகாட்டலும் எமது தமிழ் பேரவை உறுப்பினரது அயராத முயற்சியுமே மூல காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

தீந்தமிழ் நாசும் திக்கெட்டும் பரவ விளங்கச் செய்வதில் மாணவர்களின் சஞ்சிகை ஆக்க முயற்சி பேருதவியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் பதித்துச் செல்லும் பாதச் சுவடுகளை இனிவரும் மாணவர்களும் தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். கல்லூரியில் மட்டுமன்றித் தாம் செல்லும் இடமெல்லாம் இலக்கியப் பணியைத் தொடர எனது நல்வாழ்த்துக்கள்

இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்ற வேண்டும்.

*பொறுப்பாசிரியர்*
*தமிழ்ப்பேரவை*
*திருமதி. வி. சடாட்சரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து



யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் வருடாந்த வெளியீடான தமிழ் அலைகள் - 4 என்னும் சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இச்சஞ்சிகையானது மாணவர்களது அயராத முயற்சியினாலும் ஆசிரியர்களது ஊக்குவிப்பினாலும் உங்கள் மனங்களைக் கவரக்கூடிய விதத்திலே படைப்பாக்கம் பெற்று வருகின்றது.

இச்சஞ்சிகை கட்டுரை, சிறுகதை, கவிதை, பாட்டு, நாடகம், சிந்தனைத் துளிகள், தமிழறிவு, வினாவிடை போன்ற பல்வேறு ஆக்கங்களை தன்னகத்தே கொண்டதாக வெளி வருவது மாணவர்களது அறிவுப் பசிக்கு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.


மேலும் இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தந்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கும், எமது கடும் முயற்சிக்குப் பின்புலமாக இருந்த அதிபர், உப அதிபர், பொறுப்பாசிரியர் ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ் அலைகள் என்னும் நூலானது தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றேன்.

*தலைவர்*
*தமிழ்ப் பேரவை*
*செ.சந்தியா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் சிந்தனையிலிருந்து...



யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் வருடாந்த வெளியீடான தமிழ் அலைகள் - 04 என்னும் சஞ்சிகையினூடாக உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சஞ்சிகையானது எமது பேரவை உறுப்பினர்களின் அயராத முயற்சியினாலும், பேரவை ஆசிரியர்களின் ஊக்குவிப்பினாலும் உங்கள் உள்ளத்தை கவரக்கூடிய விதத்திலே படைப்பாக்கம் பெற்று வருகின்றது.

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்"**

என்ற பாரதியாரின் கூற்றிற்கிணங்க உலகின் மூத்த மொழியாகிய தமிழ் மொழியின் இனிமையையும் செழுமையையும் இத் தமிழ் அலைகள் - 04 பறைசாற்றி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் இச்சஞ்சிகைக்குக் கருத்துச் செறிவு மிக்க ஆக்கங்களைத் தந்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கும் எமது கடும் முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், உபஅதிபர், பொறுப்பாசிரியர் ஏனைய ஆசிரியர்களுக்கும் இந்நூல் சிறப்புற வெளியீடு செய்வதற்கு உறுதுணையாக இருந்த விளம்பரதாரர்களுக்கும், மற்றும் இம் மலருக்குச் செயல் வடிவம் கொடுத்து உங்கள் கரங்களிலே தவழவிட்ட யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் மேலும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

*செயலாளர்*
*தமிழ்பேரவை*
*சி.வசந்தகுமார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பத்திராதிபர்களின் பேனாவிலிருந்து...



நவீன கல்வி உலகில் ஆக்கத்திறன் பெரும் வரவேற்பைப் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது. இவ் வளர்ச்சியில் தமிழ் அலைகளின் பங்களிப்பு அளப்பரியது. புதிய புதிய அணுகுமுறையிலான கல்வித் திட்டங்கள் புகுத்தப்பட்டு வரும் இக்கால கட்டத்தில் மாணவர்களிற்கு அறிவை ஊட்டும் சஞ்சிகையாக இத் தமிழ் அலைகள் வெளிவருகின்றது.

இச்சஞ்சிகையானது கட்டுரை, கவிதை, சிறுகதை, சிந்தனைத்துளிகள் போன்ற பல்வேறு ஆக்கங்களையும் மாற்றமுறும் சமூகத்திற்குத் தேவையான விழுமியக் கருத்துக்கள் போன்றவற்றையும் தாங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மேலும் தமிழ் அலைகள் - 04 என்ற சஞ்சிகையானத தொடர்ந்து நான்காவது வருடமாக வெளிவருவதற்குப் பெரிதும் உதவிய எம் பேரவையின் பொறுப்பாசிரியர் திருமதி வி.சடாட்சரம் அவர்களுக்கும் மற்றும் எம் கல்லூரி அதிபர், உப அதிபர் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும், பேரவையின் உறுப்பினர்களுக்கும், மன்றத்தின் பத்திராதிபர்கள் என்ற ரீதியில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பத்திராதிபர்கள்*
*தமிழ்ப் பேரவை*
*மு.சாளினி*
*எ.வயிலைற்வனஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பேரவை நிர்வாகிகள்

## 2012

போஷகர் :- திரு.மு.மகேந்திரன் (அதிபர்)

பொறுப்பாசிரியர் :- திருமதி விக்னேஸ்வரி சடாட்சரம்

பெரும் பொருளாளர் :- திருமதி.க.வரதலோஜன்

ஆசிரிய ஆலோசகர்கள் :- திரு.வே.கமலேஸ்வரன்

திரு.ரவிச்சந்திரன்

திருமதி.ஞானசம்பந்தன்

திருமதி.வே.றொ.அ.யூட்

தலைவர் :- செல்வி.செ.சந்தியா

உபதலைவர் :- செல்வன்.ச.கிரிதரன்

செயலாளர் :- செல்வன்.சி.வசந்தகுமார்

உப செயலாளர் :- செல்வி.ம.நிதுஷாளினி

பொருளாளர் :- செல்வன்.உ.டயந்தன்

பத்திராதிபர்கள் :- செல்வி.மு.சாளினி

செல்வி.எ.வயிலட்வனஜா

நிர்வாக உறுப்பினர்கள் :- செல்வி.ச.கிரிஜா

செல்வி.ச.கனுசியா

செல்வன்.நை.மு.அப்துல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)**

திருமதி.வே.றொ.அ.யூட்(ஆசிரிய ஆலோசகர்), திருமதி.க.வரதலோஜன்(பெரும்பொருளாளர்), செல்வி.ச.சின்னத்துரை(பிரதி அதிபர்), செல்வன்.சி.வசந்தகுமார்(செயலாளர்), திரு.ம.மகேந்திரன்(அதிபர்), செல்வி.செ.சந்தியா(தலைவர்), திருமதி.வி.சடாட்சரம் (தமிழ்ப் பேரவை பொறுப்பாசிரியர்), திருமதி.அ.சம்பந்தன்(ஆசிரிய ஆலோசகர்), திரு.வே.கமலேஸ்வரன்(ஆசிரிய ஆலோசகர்)

**இடமிருந்து வலம் (நிற்பவர்கள்)**

செல்வி.ச.கிரிஜா(நி.உ), செல்வி.ம.நிதுஷாளினி(உப செயலாளர்), செல்வன்.ச.கிரிதரன்(உப தலைவர்), செல்வன்.உ.டயந்தன்(பொருளாளர்), செல்வன்.நை.மு.அப்துல்லாஹ்(நி.மு), செல்வி.மு.சாளினி(பத்திராதிபர்) செல்வி.எ.வயிலற்வனஜா(பத்திராதிபர்), செல்வி.ச.கனுசியா(நி.உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கண்ட புதுமைப் பெண்

பாரதி கண்ட புதுமைப் பெண் அற்புதமானவள் அவள் பெண் உலகின் விடி வெள்ளியாகத் திகழ்கின்றாள். மாதர் தம்மை அடக்கி வைக்கும் மடமையை ஒழித்து விடுபவளாக விளங்குகின்றாள். வையத்துள் வாழ்வாங்கு வாழும். நெறியுடையவளாக மிளிர்கிறாள். இன்று பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் கையினிலே உள்ளன. அத்தகைய நிலை உருவாக வழிகாட்டிய பெருமை பாரதியாரையே சாரும்.

பாரதி வாழ்ந்த காலத்தில் பெண்கள் நிலைதான் என்ன? சொல்லவே நாக் கூசுகிறது. ஏட்டையும் பெண்கள் தொடுவதும் சுமை என்று எண்ணியிருந்த காலமது. வீட்டுக்குள்ளே பெண்கள் அறியாமையில் முடங்கிக் கிடந்த காலமது. இத்தகைய ஒரு கால கட்டத்தில் பெண் விடுதலையைப் பெரிதும் வலியுறுத்திப் புரட்சி கரமான சிந்தனையினை வெளியிட்டவர் பாரதியார். பெண்ணடிமை என்னும் பெரும்பிணி சமுதாயத்தை விட்டு நீங்க வேண்டும். ஆணுக்குப் பெண் சகல துறைகளிலும் சமமாகக் கருதப்பட வேண்டும். சமூக எழுச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இது மிக மிக அவசியம் என்பது பாரதியாரின் கருத்தாகும். இதனாலேயே "போற்றி போற்றி ஓர் ஆயிரம் போற்றி" நின் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றி! என்று பெண்ணினத்தைப் போற்றினார். தமிழ்ச் சமூகத்திலும், இந்திய சமூகத்திலும் பெண்ணினத்துக்கு முதன்மை அளித்துப் பாடிய முதற்கவிஞர் பாரதி என்றாலும் மிகையல்ல. இதன் மூலம் பாரதியின் புரட்சிகரமான சிந்தனை நன்கு புலனாகிறது. பாரதி வாழ்ந்த காலம் அந்நியர் ஆட்சியில் நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம்.

"சூத்திரனுக்கொரு நீதி - தண்டச் சோறுண்ணும் பார்ப்பனுக்கு வேறொருநீதி" நிலவிய காலம். அக்கால கட்டத்தில் பெண்கள் கல்வி பயில்வதே குற்றம் எனக் கருதினர். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என அடிமைகள் போன்று நடத்தப்பட்ட காலம்.

இத்தகைய ஒரு இருண்ட கால கட்டத்தில் பெண் அடிமைத்தனம் கொடிகட்டிப் பறந்த வேளையில் பெண் விடுதலைக்காக் குரல் கொடுத்தவர் புரட்சிக்கவி பாரதியார் ஆவார். பெண்களின் அடிமைத்தனத்தையே அவர் நோக்கிய விதம் புரட்சிகரமானது. பெண்ணடிமைத்தனம் நீங்க வேண்டும். ஆண் பெண் சமத்துவம் நிகழ வேண்டும். நாற்றிசை நாடுகள் யாவுமே சென்று புதுமை கொண்டவர்களாகவும் பெண்கள் திகழ வேண்டும். பாரத தேசம் வளர்ந்தோங்க வேண்டும். எனப் பார்தியார் விரும்பினார். பெண்கள் குறித்த பழைய கண்மூடிப் பழக்கங்கள் நீங்க வேண்டும். ஆணாதிக்க சமுதாயம் முன்னர் வகுத்த பெண்மைக் குணங்களை அடிப்படையாக வைத்து பெண்களை அடிமைத் தனத்தில் ஆழ்த்துவதை விடுத்து அவர்கள் மூலம் சமுதாயம் எழுச்சி பெற வழி காண வேண்டுமென அவர் விரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் கண்ட புதுமைப் பெண் பெண்ணினத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்கிறாள். புதுமைப் பெண்ணின் வருகையைப் பாரத நாட்டு மக்கள் செய்த தவப் பயனாகக் கருதுகின்றார். அவளின் கூற்றாக சமுதாயத்திற்கு வேண்டிய பல்வேறு விழுமியங்களை வெளிப் படுத்துகிறார். ஆண் பெண்நிகர் நல்லறம், கற்பு, நடனம், தேசம் ஓங்க உழைத்தல், வாய்மை போற்ற வாழ்தல், அமரராக வாழ்தல் ஆதியாம் உயர்ந்த எண்ணங்களைப் புதுமைப் பெண்ணின் செயலாகக் காட்டுகின்றார். இதே வேளை புதுமைப் பெண்ணின் வருகையைச் சேற்றிலே மலர்ந்த செந்தாமரை போன்று உவமித்துக் கூறுகின்றார். இதன் மூலம் தனது காலத்தில் பெண்கள் நடாத்தப்பட்ட மிகமோசமான நிலையைச் சுட்டிக் காட்டுகின்றார். தாம் கண்ட புதுமைப் பெண்ணைச் சேற்றில் மலர்ந்த செந்தாமரையாகக் காட்டுவதன் மூலம் பெண்கள் சமுதாயம் விடுதலை பெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றார். பாரதி கண்ட புதுமைப் பெண் இனத்தின் விடுதலைக் குரலாக மிளிர்கின்றாள். அவள் அன்னை பரா சக்தியின் வடிவாகவே திகழ்கின்றாள். அவளது செயல்கள் எல்லாம் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் தருவதாக அமையும் என்ற கருத்தினைப் புலப்படுத்துகின்றன. புதிய சமூகத்தைக் காண விரும்பும் பாரதியாரின் இலட்சிய வேட்கைக்குப் பாரதி கண்ட புதுமைப் பெண் வழி காட்டுபவளாக விளங்குகிறாள். இதனையே பாரதியின் "பெண்கள் விடுதலைக் கும்பி" எடுத்துக் காட்டுகின்றது. பாரதி கண்ட புதுமைப் பெண் இனத்திற்கு வழிகாட்டுபவளாக விளங்குகின்றாள் அவள்.

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்.

நிமிர்ந்த ஞானச் செருக்கும்" உடையவளாகத் திகழ்கின்றாள். "பேரிருளாம்" அறியாமையில் அமிழ்ந்த அவல மெய்திக் கவலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுபவளாகத் தூங்குகின்றாள்.

சுருங்கக் கூறின் பாரதி கண்ட புதுமைப் பெண் இலட்சியப் பெண் அவள் பெண் உலகிற்குப் புது வழி காட்டுபவளாகப் பெண்ணடிமைத் தன்மையை அழித்துப் பெண்ணுரிமையை நிலை நாட்டுபவளாகத் திகழ்கின்றாள். பாரதியின் இலட்சியக் கனவை நனவாக்கும். சக்தி மிக்கவளாக தோன்றுகின்றாள். ஆணும் பெண்ணும் சமம் என்னும் உண்மையை நிலை நிறுத்துபவளாகக் காட்சி தருகின்றாள். அவளை நவீன உலகின் நங்கையாகக் கருதிப் பெண்மையின் சிறப்பினை உணர்ந்து மதித்து வாழ்ந்திடப் பழகுதலே ஆணினத்தின் கடமையாகும்.

பெண்மை வாழ்க! என்று வாழ்த்துவோமாக!

அ. கீர்த்தனா
A/L (2014)
தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவும் இலக்கியமும்

இலக்கியம் மிக நீண்ட வரலாற்றினை உடையது. கலைகளின் கடைக்குட்டி எனத்தகும் சினிமா அல்லது திரைப்படம் சுமார் எண்பது ஆண்டு வளர்ச்சியினை கண்டதாகும். அதன் வரலாறு சிறியதாயினும் சினிமாக் கலையானது வசதியும் வாய்ப்பும் மிகுந்த அற்புதமானதொரு சாதனமாகும். மக்களுடைய அனுபவங்களைச் செம்மைப்படுத்தவும் உணர்வுகளை இதப்படுத்தவும் அறிவினை ஆழமுடையதாக்கவும் சினிமாக் கலை அதிக அளவில் உதவத்தக்க தென்பதில் ஐயமில்லை.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் அது இரண்டாயிரம் ஆண்டுக்காலப் பெருமை மிகு வரலாற்றினை உடையது. இவ் வரலாற்றின் ஆரம்பகாலமென கொள்ளப்படும் சங்ககாலத்திலேயே இலக்கியம் புலவர்கள் பல்வேறு வகையினவான வாழ்க்கை அனுபவங்களைத் துல்லியமாக சித்தரித்திருக்கிறார்கள். தமிழ்ச் சினிமா அறுபது ஆண்டு வரலாற்றினையுடையது. ஆயினும் ஒரு நூற்றாண்டுக்கும் அதற்கு உட்பட்டதுமான வரலாறுகளையுடைய நாவல் துறையிலும் சிறுகதைத் துறையிலும் எட்டிய உயர் படிகளைத் தமிழ் மக்கள் சினிமாத் துறையில் எட்டவில்லை என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் சினிமாக் கலையானது மேல் நாட்டில் உருவான கையோடு இந்தியாவிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. சினிமாக் கலை பற்றி அதற்கு முன் ஒன்றுமே அறியாதவர்கள் வெளிநாட்டவர்களைப் பார்த்தும் புரிந்தும் புரியாமலும் அறிந்து கொண்டும் யூகித்துக் கொண்டும் சினிமாப் படங்களை எடுக்கலாயினர். அவர்கள் அடிபட்டும் ஆழமுயன்றும் ஈட்டிய நுட்பம் இன்று சினிமாவைப் பட்டி தொட்டி தோறும் பரப்பி விரைவாகப் பொருள் சேர்க்க உகந்த துறை, கவர்ச்சி மிகுந்த துறை என்ற பெருமைகளையெல்லாம் அதற்கு ஈட்டிக் கொடுத்திருக்கிறது. இந்தியாவில் முதலாவது பேசும் படம் தமிழ் உட்பட இந்திய மொழிகள் பலவற்றிலும் எடுக்கப்பட்டது.

கதைகள் மூலம் கருத்துக்களைத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் பரப்பலாமென்பதைப் பண்டைக் காலத்திலேயே மக்கள் அறிந்திருந்தனர். கதை சொல்லும் வழக்கம் மிகப் பழமையானது. ஆரம்பத்தில் மனிதர்கள் ஒருவரோடொருவர் நேருக்கு நேர் பேச்சாலும், சைகையாலும் கதை பேசினர். மொழி என்ற சாதனம் வளர்ந்த போது ஓலைகளில் எழுதிப் பரப்பினர். இலேசாக அக்காரியத்தை செய்ய விழைந்து மனப்பாடம் செய்யவும் மனதிற் பதியவும், வாய்ப்பான செய்யுள் முறையினையும் பரத நாட்டியம், பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நடிப்பு உத்திகளையும் கண்டு பயன்படுத்தினர். கட்புலனாகக் கோயில்களிலும் மக்கள் கூடும் பிற வாய்ப்பான இடங்களிலும் தீட்டினர் அச்சுவாகனம் அறிமுகம் ஆன போது நூல்களும், பத்திரிகைகளும் அக் கைங்கரியத்துக்குப் பயன்படலாயின இவ் வரலாற்றில் காட்டப்புகுத்ததைக் கண் முன்னால் உண்மையாகவே நடப்பது போன்ற மருட்சியுடன் காட்டவல்ல சினிமாக்கலை ஈடும் எடுப்பும் இல்லாததாகும்.

இன்று கூடிய செல்வாக்கும் தாக்கமும் உடைய கலை சினிமாவாகவே விளங்குகின்றது. திரைப்படத்தை அர்த்தமும் அவசியமும் மிகுந்த ஒன்றாகக் கொள்ளும் ஒரு பண்பாட்டில் வளர்ந்த தலைமுறையினை இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பார்க்கிறோம். இலக்கியம் ஒன்றேனும் அறியாத பலரைக் காண முடியும். ஆனால் திரைப்படம் பார்க்காத ஒருவரைக் காண்பது இன்று அபூர்வமானதாகும். தொழில் நுட்ப ஈடுபாடு மிகுந்த இன்றைய நாகரிகத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியின் பெறுபேறான சினிமாவுக்கு தனிமதிப்புண்டு. புறத் தோற்ற விபரங்களையும் நுணுக்கமான இயக்கங்கள் செயற்பாடுகளையும் கட்புலனாக நேருக்கு நேர் காட்டும் சக்தி சினிமாவுக்கு அற்புதமாக வாய்த்திருக்கிறது இன்று நம்மை வெகுவாகப் பாதிக்கும் விஷயங்களைத் தாமதமின்றி வேகமாகக் காட்ட வல்லது சினிமா ஆகும்.

இலக்கியம் வேறு, சினிமாவேறு ஆயினும் சினிமாவின் நயத்தை இலக்கியத்திலும் இலக்கியத்தின் நயத்தை சினிமாவிலும் காணமுடியா தென்றில்லை இரண்டினையும் மேலெழுந்த வாரியாக ஒப்பிட்டு பார்க்குமிடத்து இலக்கியம் பழையது. சினிமா புதியது இலக்கியம் தனியொருவரின் கற்பனைத் திறனிலும் முயற்சியிலும் உருவாக்குவது. சினிமா கூட்டு முயற்சியால் அதாவது ஒலிப்பதிவாளர், ஒளிப்பதிப்பாளர், இசையமைப்பாளர், படப்பிடிப்பாளர் எனப் பல பேர் ஈடுபடுவது. பலர் ஒன்று கூடுமிடத்து நன்மையாகவும் அமையலாம், ஆளுக்கொரு திக்கில் இருக்கும் போது ஆபத்தும் விளையலாம்.

இலக்கியத்தையும் சரி சினிமாவையும் சரி கலையாக மட்டும் கொள்பவர்களும் உண்டு, கருத்துக்களைப் பரப்பும் ஊடகமாகவும் பொழுது போக்குவர்களும் உண்டு, கருத்துக்களைப் பரப்பும் ஊடகமாவும் வியாபாரமாகக் கொள்பவருமுண்டு சினிமாத்துறையைப் பொறுத்த வரையில் அதனைத் தொழிலாகவும் வியாபாரமாகவும் கொள்வோரின் தேவைகளும் ஆதிக்கமுமே அதனை வெகுவாகப் பாதிப்பது. இலக்கியத்தைப் படிக்கவோ கேட்டு விளங்கவோ கூடியவர்கள் தம் அகக் கண்களாலும் அனுபவ நாளங்களாலும் சுவைக்கலாம் சினிமாவைப் படிப்பறிவற்றவரும் கட்புலனாகக் கண்டு அதிக பிரயத்தனமின்றி ரசிக்கலாம். உண்மையில் நடப்பது போன்ற மருட்சி சினிமாவில் பன்மடங்கு அதிகமாகும். இலக்கிய வெளியீட்டுக்கு குறைந்த அளவு மூலதனம் போதும் ஆனால் சினிமாவுக்கு பெரும் மூலதனம் வேண்டிக் கிடக்கிறது. சுயத்துவத்தையும் ஆத்மபலத்தையும் கொண்ட குறிக்கோளின் மீதான நம்பிக்கையையும் இலக்கியத்துறையினர் பலர் இழக்காமல் விளங்குவதற்கும் சினிமாத்துறையினர் பலர் இழந்து நலிவதற்கும் இந்த மூலதனப் பிரச்சினை எமது அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த காரணமாக இருக்கிறது. போட்ட முதலைத் திரும்பப் பெற என்று சொல்லிக் கொண்டுதான் பெரிய நட்சத்திரங்கள், பாட்டு, சண்டை, நகைச்சுவை, சோகம் போன்ற காட்சிகளைக் கொண்டுள்ளது.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்குமிடத்துச் சிறந்த ஓர் இலக்கியம் சிறந்த சினிமாவாக வேண்டுமாயின் அவ்விலக்கியத்தின் உட்பொருளைக் கிரகித்து வெளியிடத்தக்க ஆற்றல் மிக்க சினிமாத் தயாரிப்பாளனும் நயக்கும் மனப்பாங்குடைய பார்வையாளரும் தேவை. இரு துறைகளுக்குமிடையிலான முரண்பாட்டுக்கு அவற்றை வெகு ஜன நுகர்வுக்குரிய முக்கிய காரணமாகும். பல இலக்கிய கர்த்தாக்களைப் போலவே சினிமாக் கலையாக்க விளைகின்றார்கள் என்பது முற்றுமுழுதான உண்மையாகும்.

வி.மேரி வினோஜினி.
A/L (2013).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவொளி தருவன நூல்களே

"*கண்ணுடையவர் என்பவர் கற்றோர்முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்*"

என்ற வள்ளுவர் வாய்மொழிப் பொருளை உலகம் ஒரு முகமாக ஒப்புக் கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது. அவ் வாய்மொழி ஊனக் கண்ணினும் ஞானக் கண்ணே சிறந்தது என்ற கருத்தினைத் தெளிவுறக் காட்டுகிறது. ஊனக் கண்ணின் காட்சிக்கு ஓரெல்லையுண்டு. அவ் வெல்லைக்கு அப்பாற்பட்ட எதனையும் அது காணல் அரிது. அன்றியும் அது நோயாலும் மூப்பாலும் கூர்மை குன்றிக் காட்சிப் பண்பையிழத்தல் கூடும். ஆயின் அறிவுக் கண்ணோ எதனாலுந் தடைப்படாது. கண்காணா தேசங்களில் நிகழ்வனவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்வனவற்றையும் ஒளியிழப்பதில்லை. அதனாலேயே கல்வி கற்று அறிவு படைத்தோர் "கண்ணுடையவர்" என சிறப்பிக்கின்றனர். கல்லார் அறிவிலராய், ஊனக் கண்ணாலும் பயன் கொள்ள முடியாமையால் "முகத்திரண்டு புண்ணுடையார்" என பழிக்கப்படுகின்றனர். இக் குறளொன்றே அறிவு வளர்ச்சிக்கு உபகாரப்படுங் கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக் காட்டப் போதியதாகும்.

இன்றுள்ள நிலையில் உலகிலுள்ள நூல்களனைத்தையும் ஒன்று விடாது எரியூட்டியோ கடலிலிட்டோ அழித்து விட்டால் என்ன நிகழும் என்பதை கற்பனைக் கண்கொண்டு கூட விரும்பாத அளவுக்கு அவை மக்களது வாழ்வோடு இணைந்து விட்டன. நூல்களால் மக்கள் காலங்காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்று வந்தமையே அப்பிணைப்புக்கு காரணமாகும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என நால் வகைப்படும். அவற்றை புருடார்த்தங்கள் என்பர். மனிதன் முழுமையான வாழ்வு வாழ்வதற்கு அவை இன்றியமையாததாக தீயன நீக்கி நல்லன கொள்ளும் அறங்கள் பலவும் மனிதனுள்ளத்தில் வளர்தல் வேண்டும். அப்படி எவன் நடந்து கொள்வான் ஆனால் அறவுணர்வு மிக்கவனாகவும், அறவழியும் நடந்து செல்வான்.

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்ற சூத்திர நூல்களின் பயன்களைக் கூறுவதிலிருந்து இவ் உண்மை புலனாகும் இவ்வாழ்க்கைக்கு பரவாழ்வுக்கும் துணைபுரியும் வகையில் மனிதன் பூரண வாழ்வுக்கு வழிகாட்டியாய் அமைவது நூல்கள் ஆகும்.

நூல்கள் நல்ல நண்பர்களிலும் பார்க்க ஒருவனுக்கு உறுதுணையாக அமைய வல்லன. ஒருவன் நெறியில்லா நெறி சென்ற வழி இடித்துரைத்து நல்ல வழிகாட்டவல்லது நூல்கள் ஆகும். நண்பர்கள் வாய்க்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தாலும் அவர்கள் இடத்தில் காலத்தாலும் தடைப்பட்டு கிடைத்தற்கரியராவர். அத்தகைய நண்பர்களின் உதவிகளையே நூல்கள் செய்கின்றன. அவை அறநெறி இதுவென காட்டி நிற்கின்றன.

"நவில் தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்று வள்ளுவர் வாய்மொழியை ஊன்றி உணலாம் போது இவ்வுண்மை புலனாகிறது. இக் கல்வியை பெற்றுக் கொள்ள எமக்கு உலகிலே பல சாதனங்கள் பயன்படகின்றன. கல்வி எனும் தீபம் உலகில் ஏற்றப்பட்ட அன்று தொட்டு இன்று வரை அதனை அணைய விடாது நெய்யிட்டு ஒளி செய்த பெருமை நூல்களாகும். கல்வியை பரப்பறகமைந்த கருவிகளனைத்தினுக்கும் தாயாக விளங்குவது நூல்களாகும். கரையில்லாக் கல்வியின் ஒவ்வொரு சிறுபகுதியையே அறிவிக்கக் கூடியன. ஆனால் நூல்கள் பாமரமக்களாலும் பயன் கொள்ளத்தக்க வகையில் உள்ளன. கல்வித் துறைகளைனைத்தையும் திறம்பட அறிவிக்க வல்லன. கல்வி பெருஞ் செல்வத்தை உலகிற்கு வரையறாது கொடுப்பது நூல்கள் ஆகும்.

ஓய்வு நேரத்தை இன்பமாகவும் பயன்படத்தக்க முறையிலும் கழிக்க நூல்கள் பயன்படுகிறது. பொழுது போக்கிற்காக நூல்களை வாசித்தால் நாளடைவில் வாசிக்கும் பழக்கமுங் கற்கும். ஆர்வமும் பிறக்கின்றன. இப் பழக்கமும் ஆர்வமும் முதிர்ச்சியடையும் போது பொழுது போக்கிற்குரிய நூல்களையன்றி அறிவு பயத்தற்கேற்ற நூல்களையும் படிக்கும் பண்பு பிறக்கின்றது.

மனித வாழ்வுக்கு மிக இன்றியமையாதகல்வி என்னும் செழுஞ்சுடரை உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரவச்செய்யும் ஒப்பற்ற கருவியாக நூல்கள் விளங்குகின்றன. அவை மனிதனின் பூரண வாழ்வு வாழ வழகாட்டுகின்றன. நல்ல நண்பர்களிலும் பார்க்க நூல்கள் பேருதவி புரிகின்றன. அவப்பொழுதையும் தவப்பொழுதாய் கழித்தற்கேற்ற அருமருந்தன்ன கருவியாக மிளிர்கின்றன. சுருக்கக் கூறின் இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையான போற்றி பயன் கொள்ளப்பட வேண்டியனவாம்.

நன்றி

மா.தனுசியா.
A/L (2013)
Arts
தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சீர்கேடுகள்

ஏய்.... மனிதா
உலகிலுள்ள உயிர்களில்
உயர்ந்தவர்கள் மனிதர்கள்
பல கலைகள் கற்றவர்
பகுத்தறிவு மிக்கவர் - எனவெல்லாம்
அன்றிலிருந்து மனிதனுக்கு இடப்பட்ட புனைபெயர்கள்...
எனத்தான் தோன்றுதே ஒழிய....
மிருக உணர்வு கொண்ட மனிதன் என்ற ஒப்பனையால்
மிக அழகாக மிளிரும் வேடதாரியே....
நீ செய்யும் வன்முறைகளால் சமூகம்
புதை குழியில் வீழ்ந்து கிடக்கிறது

பஞ்சமா பாதகங்களை பாரினில் பரவி
மண் போற்றும் மனிதகுலம் மரணிக்கிறது
துன்பத்தை துடைப்பதற்குத் தூக்குதனைப் போட்டது போல
இன்பத்தை அளிக்குமென்று மதுவதனைக் குடிக்கின்றார்கள்
தஞ்சமென வந்தவரும் தான் பெற்ற மைந்தர்களும்
வாழ வழியற்று வீதியிலே நிற்கின்றார்கள்
போதை தரும் மயக்கம் பெண்களிடம் சில்மிசம்
வயோதிபர் என்றாலும் சேட்டைக்குக் குறைவில்லை....

தொலை பேசி எனும் தொல்லை பேசியிலே
மணிக்கணக்காய்ச் செவிப்பறை
செவிடாகும் வரை பேசுவது
வீதியிலே வாகனம் வருவது கூடத் தெரியாமல்
கதைத்த படியே மரணமதை தழுவுவது
கல்விப் பயிரை வளர்ப்பதற்குப் பதிலாகக்
காதல்ப் பயிரை வளர்த்துப் - பின்
காதலையும் தொலைத்துக்,
கல்வியையும் தொலைத்துக் கதியற்று நிற்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவின் தாக்கமும் வெளிநாட்டு மோகமும்
இளசுகளை இதமாகக் கவ்விக் கொள்கிறது
மங்கையவள்வதனமோ மதிவடிவம் - ஆனால் அவள்
அலங்காரமோ - அநாகரிகம் - அவள்
அணிந்திருக்கும் ஆடையோ அரை மீற்றர்
பையன் அவன் போகிறான்
"பள்சர்" மோட்டர் சைக்கிளிலே.....
கண்களிலே சன்கிளாஸ் கழுத்தினிலே நாய்ச்சங்கிலி
நாகரிகமாய் வாழ வேண்டும் என்பதற்காக
அநாகரிகமாய் மாறுவதா?

பருவக் கோளாறு காதல் வலையில் வீழ்த்த
பெற்றோருக்கு தெரியாமல் ஓட்டமோ ஓட்டம்
இளவயதுத் திருமணம்....... குழந்தை - தெருவில்
வீசப்படுதலும்..... வழக்கமாய் மாறி விட்டது

என் பேனா முனைகளால் எழுத முடியாத
இன்னும் பல சீர்கேடுகள் முளைத்து நிற்கிறது
பல ஊழல் புரிந்து உலாவிய மனிதனே
இனியாவது நீ உண்மையானவனாய்
மாறிவிடு..... பாழான வையகத்தில்
வீறு நடை போடு..... ஓர் புதுயுகம் நோக்கி....
நீங்களும் சிந்தியுங்கள்..... நாளை
நம் சமூகத்தை அழிவிலிருந்து காக்கவே.

ர.நிஷாநந்தினி
A/L (கலைப்பிரிவு)
2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு வளர்ச்சிக்குத் தாய் மொழியே அடிப்படை

அன்னை மடியில் குழந்தை தாய் அறிந்து கற்ற முதல் மொழி தாய்மொழி. பிறந்தது முதல் அறிந்து பேசிவரும் மொழியே தாய்மொழி, தாயானவள் குழந்தைக்கு உணவு ஊட்டுவதோடு உணர்வையும் ஊட்டுகிறாள். அதற்குப் பயன்படுவது தாய்மொழியே, தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்பது போலத் தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை என்பது அறிஞர் தம் கருத்தாகும். ஒருவன் எத்தனை மொழிகளையும் கற்றுக் கொள்ளலாம். எனினும் அறிவு வளர்ச்சிக்கு தாய் மொழியே அடிப்படையானது.

தாய் மொழி மூலம் கல்வி பயிலும் குழந்தையே தனது இயல் பூக்கங்களுக்கேற்ப பூரண திறன்களை வெளிக் காட்ட முடியும் என்பது கல்வி அறிஞரது கருத்தாகும். இதனால் தான் தாய் மொழி மூலம் கல்வி புகட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. தாய்மொழி மீது ஒவ்வொருவரும் பற்றுக் கொள்ள வேண்டும். அப்பற்றில்லாதவன் தாயையே அவமதிப்பவனாவான். பெற்ற தாயைக் காட்டிலும் உற்ற தாய்மொழி உயர்ந்ததாகும். அத்தகைய தாய்மொழியிலேயே ஒவ்வொருவரும் கல்வி பயில வேண்டும். ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்றோரிலும் பார்க்க தாய் மொழி மூலம் கல்வி பயின்றோரே இன்று உலகில் சிறந்த விஞ்ஞானியாகவும், பொறியியலாளராகவும் விளங்குகின்றன.

தாய் மொழியில் அறிவியல் கலைகள் அனைத்தையும் கற்றிடத்தக்க நூல்களைப் படைத்திட வேண்டும். தாய்மொழியில் கற்பது, தாய்ப்பால் பருகுதல் போன்றது. தாய்ப்பாலே குழந்தையின் ஆரோக்கியத்திற்கு உகந்தது. அதைப் போலத்தாய் மொழியில் கற்பதே குழந்தையின் இயல்பான சிந்தனை வளர்ச்சிக்கு ஏற்றது. இந்த உண்மையை உணர்ந்தால் தாய் மொழி மூலம் கற்றலே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

தாய் மொழி வாயிலாகக் கல்வி பெறுதலும் எல்லாத் துறைகளிலும் தாய் மொழியைப் பயன்படுத்துவதும் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். தாய் மொழி மூலம் பெறப்படும் கல்வியே உள்ளத்தில் ஆழப்பதிந்து அழியாப் பயன் தரும். அதுவே சிந்தனை விருத்திக்கும் அறிவு வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். பிறமொழிக் கல்வி மூலம் ஒரு சிலர் உயர்வடைந்திருக்கலாம். ஆனால் நாடு அவர்களால் அடைந்த பயன் எதுவுமே இல்லை. எனவே கல்வி என்று கூறும் போதும் அறிவு வளர்ச்சிக்கும் தாய்மொழியே அடிப்படை என்பதை எவருமே மறுத்திட முடியாது.

கு.யசிந்தா.
11A.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடலின் ஜனனம்

மனித மனத்தின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் எழுவது பாடலாகும். பாடலுக்கு இணையாகவும் துணையாகவும் அமைவது ஆடலும் பாடலும். இவ் ஆடவும் பாடலும் மனித உணர்வின் வடிகால்கள் அகத்தின் எழுகின்ற எண்ணங்கள் புற வடிவமாக வாழ்க்கையின் இயல்புகள் அமையும். சிறந்த கலைகளான ஆடலும் பாடலும் மனித மனத்தில் எழும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் கோலாச்சித் திறன்கள்.

அறிவு நிலையில் ஆதி மனிதன் என்று தோன்றி விளக்கம் பெற்றானோ அன்றோ அவனுக்குக் கலை முகிழ்ப்பும் தோன்றி விட்டது. எனப் பல வரலாற்று நூல்களில் ஆதாரமாக அறிந்து கொள்ளலாம். பாடல் இசையானது அடிப்படையாகக் கொண்டு உருவாகியது. மொழி வளர்ச்சிப் பெருக்கை ஒலி வடிவங்களாக்கிக் காட்டி இருப்பான். மொழிச் சிந்தனை எதுவும் இன்றி உணர்ச்சிக் கோலமாக எழுந்த ஒலியமைப்புப் பாடல்களை நாட்டுப் புறப் பாடல்களின் முதல் நிலை என்று கூறிக் கொள்ள முடிகிறது.

மனித இனம் எங்கெல்லாம் வாழ்ந்ததோ அங்கெல்லாம் அவரவர் இயல்புக் கேற்ப வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்ப வாய் மொழிப் பாடல்கள் விரிந்து படர்ந்துள்ளன. வாய் மொழிப் பாடல்களின் தோற்றுவாய் மனித உணர்வுகளின் முகிழ்ப்பே ஆகும். நாட்டுப் புறப் பாடல்களை முதன் முதலில் ஒரு தனி மனிதனால் படைக்கப்பட்டாலும் கூட உடனே அவை ஒரு பொதுமையாக்கப்படுகின்றன. உலகிலே எழுத்திலக்கியம் இல்லாத மனித இனங்களை நாம் காணமுடிகிறது. வாய் மொழியாகப் பரவி வந்தவை நாட்டார் பாடல்களாகும். மக்கள் கிராமங்களில் தம் ஒவ் வொருவரதும் உணர்வுகளையும் வெளிப்படுத்த இப் பாடல்கள் நாட்டார் பாடல் என்பதன் மூலம் உணரப்பட்டு மக்கள் மத்தியில் முக்கியமான மிகப் பெரிய தனித்துவமான இயல்பைப் பெற்று நிற்கின்றது.

அது போல இவ் நாட்டார் பாடல் வரிசையில் தாலாட்டுப் பாடல், மருத்துவிச்சிப் பாடல், அருவி வெட்டுப் பாடல், விளையாட்டுப் பாடல், கோலாட்டப் பாடல், கும்மியடித்தல் பாடல், ஒப்பாரிப் பாடல் என்பன இவ் நாட்டார் பாடல் வரிசையில் முக்கியமான இடத்தைப் பெற்று நிற்கிறது. அவற்றுள் தாலாட்டுப் பாடல், ஒப்பாரிப் பாடல் மிகவும் தனித்துவமான இயல்புகளைப் பெற்று நிற்கிறது. இவை மனித மனத்திலே அக்காலம் தொட்டே காணப்பட்ட சிறந்த நாட்டார் பாடல் என்ற எண்ணக் கருத்தினை முன் வைத்ததாகக் காணப்படுகிறது. இவ் நாட்டார் பாடல் எம் முன்னோர்களின் காலத்தில் சிறந்த ஒரு முன்னேற்றத்தை முன்னெடுத்ததாக இக் கால கட்டங்களிலே அமையப் பெற்று இருக்கிறது. நாட்டார் பாடல்கள் அக்கால மக்களுக்கும், இக்கால மக்களுக்கும் இன்றியமையாத உணர்வின் பங்களிப்பை ஆற்றி வருகின்றன. இந்த நாட்டார் பாடல்கள் எமக்குக் கிடைத்த அரியதொரு வரப் பிரசாதமாகக் காணப்படுகின்றன.

ர.ஆதவன்
கலைப்பிரிவு
12B.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் காட்டும் நட்பு

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என கூறுவர். அவை எமது வாழ்வியலைப் பிரதிபலித்து காட்டுகின்றன. எந்தவொரு மொழியிலும் இலக்கியச் செழுமை காணப்படுமாயின் அம்மொழி பரந்துபட்ட பண்பாட்டுக் கருவூலங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் காணலாம். அப் பண்பாட்டுக் கருவூலங்களைப் பிரதிபலிப்பன இலக்கியங்களே ஆகும். இந்த வகையில் தொன்மையும், செழுமையும் மிக்கதான எம் செந்தமிழ் மொழியும் பல்லாயிரக்கணக்கான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதைக் காணலாம்.

வாழ்வியலில் நாம் சந்திக்கும் அன்பு, பாசம், நட்பு, கொடை, வறுமை, செல்வம், பகை, ஒழுக்கம், பக்தி, முத்தி என விரிந்து கொண்டு செல்லும் ஒவ்வொரு அம்சத்தினையும் இலக்கியங்கள் வாயிலாக ஒவ்வொரு காலப்பகுதியின் வளர்ச்சிப்படி நிலையில் ஆராய்ந்து உணர்ந்திட முடியும். எனினும் இவற்றுள் நட்பே மேலானது என நான் கருதுகிறேன்.

பழம் பெரும் சமய இலக்கியங்களாகத் திகழும் கம்பராமாயணத்திலே தசரதன் - சடாயு, கைகேயி - கூனி, குகன் - ராமன், இராமன் - சுக்கிரீவன், திரிசடை - சீதை ஆகிய பாத்திரங்களில் நட்பு தலை நீட்டுகிறது. தசரதன் மைந்தனுக்காய் சடாயு இராணுவணனுடன் போரிட்டு மாழ்கிறான் . ஆனால் கைகேயி - கூனி ஆகியோருக்கிடையில் இருந்த நட்பு, கூடா நட்பாகும். இதனால் துன்பமே பெருகுகின்றது. குகன் - இராமன் இருவருக்கும் இடையே எழுந்த நட்பு அரசனாகிய இராமனும் வேடுவத் தலைவனான குகனும் சகோதரராகும் பாக்கியத்தை அளித்திருக்கிறது. இராமன் - சுக்கிரீவன் பூண்ட நட்பு பரஸ்பர உதவி கோரும் வகையிலமைந்த ராஜதந்திர நட்பாகும்.

அசோக வனத்திற் சீதை சிறை வைக்கப்பட்ட பொழுது சுற்றிலும் அரக்கியர் சேனை. அந்த அரக்கியரிடையே விபீடணன் மகளான திரிசடை இரக்க பண்பு மிக்கவளாக சீதைமீது அன்பு கொண்டு பெண்ணுக்குப் பெண் இரங்குதல் வேண்டும். என்ற மனப்பாங்கினைப் புலப்படுத்தும். நட்பு எனவே நட்பிலும் பலவகையான நட்புக்கள் உள்ளன. அதில் நல்ல நட்பைப் பின்பற்றுதல் சிறந்த பண்பாகும்.

மகாபாரதத்தை எடுத்து கொண்டால் கர்ணன் - துரியோதனன் நட்பு, அர்ச்சுனன் - கிருஸ்ணன் நட்பு, திரௌபதை - கிருஸ்ணன் நட்பு என்பன கூறப்பட்டாலும் கர்ணன் - துரியோதனன் ஆகியோரின் நட்பே சிறந்தது. தேரோட்டியின் மகனாக விளங்கிய கர்ணன் மீது இயல்பாக ஏற்பட்ட பாசமே துரியோதனன் நட்பு பூண்டதற்கான காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதப்போர் மூலம் பூமி பாரம் தீர்க்க வந்தவன் கிருஷ்ணன். கிருஷ்ணன் - அர்ச்சுனன் நட்பு திசை மாறும் கன்றுக்கு வழிகாட்டும் அன்னைப்பசு போன்றது. எனவே பார்த்த சாரதியால் "கீதோபதேசம்" இடம் பெற்றது. திரௌபதை கிருஸ்ணன் நட்பு செய்நன்றி மறவாமை காரணமாக காரண - காரிய தொடர்பை நிலைநிறுத்தி முன்பு நீராடும் போது கண்ணனுக்கு அவள் கொடுத்த துகிலை பின்னர் பல மடங்காய் திருப்பி கொடுத்த நட்பு.

வள்ளுவன் தந்த திருமறையை எடுத்து கொண்டால் அங்கே பொருட்பாலில் நட்பியல் என்ற அதிகாரத்தில் "நட்பு" பற்றி பின்வருமாறு கூறுகின்றார். "நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற் சென்று இடித்தல் பொருட்டு" என்ற குறள் மூலம் நட்புச் செய்வது சிரித்து மகிழ்வதற்கன்று என்றும் அது நெறி கடந்து செல்லும் போது இடித்து உரைப்பதற்காகும் என்று ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்.

லோ.சஞ்சிகா
தரம் 12B
2014 கலைப்பிரிவு

# கல்வி

கல்வி என்பது மனிதனின் இரு கண்களடா

இது நம் உலகின் அமிர்தமடா

கல்வி மீது தன்னம்பிக்கை

கொள்வான் அறிஞனடா

விந்தை மனிதனின் தோழனடா

அதை மதிப்பவன் நல்ல மனிதனடா

இது உண்மையடா

கற்றது கையளவடா நாம் கல்லாதது

உளகளவடா என்றார் பாட்டியடா

அவர்தான் நம் ஔவையடா

அதையே புகழ்பவன் இனிமை மனிதனடா

அறிவது தருவது கல்வியடா

திறமை தருவது கல்வியடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

தோழா!
வெற்றிப்பாதையில் நீ செல்லும் போதும்
புகழின் உச்சியில் நீ ஏறும் போதும்
எட்டி உதைத்திடும் இவ்வுலகம்
இது தான் இன்றைய மானிடமே!

இழந்ததை நினைத்து வருந்திட்டால்
இன்பங்கள் என்றும் தொடராதே!
சோதனைகளைக் கண்டு பயந்திட்டால்
வெற்றிகள் நாளை நெருங்காதே!
சுமைகளை எண்ணிச் சோர்ந்திட்டால்
சுகங்கள் வாழ்வில் நிலைக்காதே!

ஓடிடும் மேகங்கள் நிற்பதுமில்லை
தோல்விகள் வாழ்வில் நிலைப்பதுமில்லை
இருள் நாளெல்லாம் தொடர்வதுமில்லை
நம்பிக்கை பலன்தர மறுப்பதுமில்லை

உயர்வாக எம்மை நாம் நினைத்திட்டால்
உயரத்தில் நாம் ஏறிடலாம்
துணிந்து நாம் நின்றிட்டால்
வெற்றிகள் நாளை எம் கைகளில்

இ.சிவரஞ்சனி
13A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் திரைப் படங்களின் இன்றைய நிலை

திரைப்படம் என்பது ஆற்றல் வாய்ந்த கட்புலக் கலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. 1930 இல் தமிழில் அறிமுகமான திரைப்படக்கலை இன்று தொழில்நுட்ப வளர்ச்சி, ஆற்றுகை வளர்ச்சி முதலானவற்றால் பல பரிமாண நிலையை அடைந்துள்ளது. வெறுமனே பொழுது போக்கு ஊடகமாக மாத்திரமன்றிச் சமூகத்தின் போக்கை தீர்மானிக்கின்ற சக்தியாகவும் திரைப்படக் கலை விளங்குவதை காணலாம்.

1930 ஆம் ஆண்டு வெளிவந்த 'மகாகவி காளிதாஸ்' என்ற திரைப்படத்துடன் தமிழ்த் திரைப்பட வரலாறு ஆரம்பித்து இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கின்றது. பலநூறு திரைப் படத் தயாரிப்பு நிறுவனங்கள், பல நூறு இயக்குனர்கள். ஒளிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர்கள், ஒப்பு நோக்குநர்கள், உதவி இயக்குனர்கள் முதலான பல்துறை கட்டமைப்புடன் தமிழ் திரைப்படக் கலை இயங்கி வருகின்றது. வலுவான திரைப்படக் கதையுடன் வெளிவந்த காலம் ஒன்று உண்டு. பீம்சிங், ஸ்ரீதர், பாலசந்தர், பாரதிராஜா, பாலுமகேந்திரா, மகேந்திரன், பாசில் முதலான சிறந்த இயக்குநர்கள் தமிழ் திரைப்படத்துறையை அகில இந்திய அளவு தாண்டி உலகத் தரத்திற்கு கொண்டு சென்றனர். குடும்பக் கதையாக இருந்தால் என்ன, மண்வாசனையாக இருந்தால் என்ன, நகரத்துச் சிக்கல்களை வெளிப்படுத்தும் கதையாக இருந்தால் என்ன, நேர்த்தியான வகையிலான இயக்கத்துடனும் உறுத்தாத உயர்தரமான இசையமைப்புடனும். ஆபாசமற்ற வசனத்துடன் அன்றைய திரைப்படங்கள் வெளிவந்தன.

ஆனால் இன்றைய நிலையில் திரைப்படக் கலை தனக்குரிய சிறப்பையும் தகுதியையும் தக்க வைத்துக் கொண்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நவீன தொழில் நுட்பம் ஏனைய துறைகளைப் போலவே திரைப்படத் துறைகளுக்குள்ளும் தன் அகலக் கரங்களை நுழைத்து விட்டது. கதையம்சமே இல்லாத திரைக்கதை, காதை செவிடாக்குகின்ற இசை, புரியாத வரிகளுடன் பாடல்கள், ஆபாசமான இரட்டை அர்த்தமுள்ள வசனங்கள், தனி மனிதர் துதி பாடல், வன்முறை என்று இன்றைய இளைய சமுதாயத்தைக் குட்டிச் சுவராக்கும் நோக்கத்துடனும் இன்றைய திரைப்படக் கலை மலிவான நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குடும்பத்தோடு உட்கார்ந்து பார்க்க முடியவில்லையே என்று பலரும் குறைகூறுமளவிற்கு இன்றைய திரைப்படத் துறை தரங் குறைந்து விட்டது. என்பது வெளிப்படை.

இன்றைய தமிழ்த் திரைப்படங்கள் பெண்களை இழிவான நிலையில் சித்தரிக்கும் தன்மை கொண்டனவாக அமைகின்றன என்பது வெளிப்படையான உண்மை. பண்பாட்டு உணர்வினை வணிக நோக்கத்துடன் தயாரிக்கப் படுகின்ற திரைப்படங்களே இன்று அதிகம் வெளிவருகின்றன. மிகக் குறைந்த அளவிலான உடையுடன் கதாநாயகி, ஐந்து பாடல்கள், அதில் நான்கு குத்துப் பாடல்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறையுடன் கூடிய சண்டைக் காட்சிகள், இரட்டை அர்த்த வசனம் கொண்ட நாகரீகத்தை மீறிய நகைச்சுவை காட்சிகள், நம்ப முடியாத அளவுக்குக் கதாநாயகன் பற்றிய சித்திரிப்புகள் என்பனவற்றோடு ஒரு படம் தயாரித்தால் அந்தத் திரைப்படம் வெற்றி பெறுமென்று நம்புகின்றனர். இத்தகைய கதாநாயக விம்பத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் தமது அபிமான கதாநாயகனின் திரைப்படம் வெளிவரும் போது பாற்காவடி எடுத்தல், அலகு குத்துதல், பாலாபிஷேகம் செய்தல், நாக்கை அறுத்து காணிக்கை செலுத்துதல் முதலான கோமாளித்தனமான சேட்டைகளில் ஈடுபடுகின்றனர். இது உணர்த்துகின்றது.

இளைஞர்கள் எல்லோரும் கைகளில் ஆயுதங்களுடனும், கண்களில் இரத்த வெறியுடனும் தாதாக்களாக வலம் வரும் அளவிற்குத் தமிழ்திரை படக் கலை தரம் தாழ்ந்து விட்டதென்பதே உண்மை. ஆற்றல் வாய்ந்த இயக்குநர்கள் கூடத்தரமான திரைப்படங்களை இயக்க முயற்சிக்காமல் தமது வணிக இலாபத்துக்காகத் தரமற்ற திரைப்படங்களை இயக்கி வருகின்றமை வருத்தத்திற்குரியது. மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளில் கலைப் படைப்புகளும் கதையம்சங்களோடு கூடிய திரைப்படங்களும் வெளி வருகின்ற அதே சமயம் தமிழில் அத்தகைய முயற்சிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளமை கவனிக்க தக்கது.

ஆனால் ஓரிரு இயக்குநர்கள் தமிழ் திரைப்படக் கலையை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதில் பெரு முயற்சி காட்டுகின்றமையும் ஆறுதலளிக்கின்றது. இயக்குநர்கள் பாலா, பாலாஜி கச்திவெல், அமீர், சேரன், வசந்த பாலன், மிஷ்கின், திருமுருகன் முருகதாஸ், வெற்றி மாறன் முதலானோருடைய திரைப்படங்கள் சமூகத்திற்குப் பயன்தரக் கூடியனவாக அமைகின்றமை குறிப்பிட தக்கதாகும். யதார்த்தமான கதைப் போக்கு முதன்மை கொடுக்கின்ற இந்த இளம் இயக்குநர்கள் தமிழ் பண்பாட்டினை அதன் உண்மை தன்மையோடு காட்சிப் படுத்துவதில் காட்டுகின்ற ஆர்வமும் திறமையும் எதிர்காலத்தில், தமிழ்த் திரைப்படக்கலை உயிர்ப்புடன் இயங்கும் என்ற நம்பிக்கையை அளிக்கின்றன. அத்துடன் சாருநிவேதிதா, ராமசாமி போன்றோரின் தரமான விமர்சனங்களும் தமிழ் திரைப்படக் கலையை உயர் நிலைக்கு இட்டுச் செல்ல முயற்சிப்பனவாக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழில் தரம் வாய்ந்த இலக்கியங்கள், நாவல்கள், சிறுகதைகள் உள்ளன. அப்படைப்புக்களைத் திரைப்படமாக்குகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டால் மிகச் சிறந்த திரைப்படங்களை நாம் எதிர் பார்க்க முடியும்.

இந்த வகையில் நோக்குமிடத்துத் தமிழ்த் திரைப்படக் கலையின் இன்றைய நிலையை நன்குணர முடிகின்றது.

அ.மேரிவியூறி
13A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

இயற்கை தந்த அழகுதான் பல
அவற்றைக் கவி வடிக்கச் சொன்னால்
என்ன தான் செய்வேனோ!

குயில் பாடுகின்றது
சேவல் அதிகாலையைக் கூறுகின்றது
இருள் மேகங்களை விலக்கிச்
சூரியன் தனது கதிர்களை நீட்டி உதிக்கின்றான்.
சூரியனை எதிர்பார்த்த தாமரை
கதிர்பட்டவுடனே மலர்கின்றது.
மனித நடமாட்டம் கூடுகின்றது
இத்தகைய காலைக் காட்சியை
கவி வடிப்பேனா?

இமையென்னும் ஜன்னல் திறந்த
இருள் மேகம் சூழ்ந்த - வானை
சற்றே நோக்கி
தாரகைகள் நடுவே
நிலவை ரசிக்கும் போது
எத்தனை அழகு - இத்தனை
அழகு கொண்ட இரவின் அழகை
ரசிப்பேனா! கவி வடிப்பேனா!

சுகமான தென்றல்
மோதி வரும் அலைகள்
இவற்றின் அழகு தரும்
இன்பம் தான் எத்தனை எத்தனை
மீனிடம் கதை பேசும் மீனவனின் வலைகள்
பிஞ்சு விரல்கள் கட்டிய மணல்வீடு
சூரியனைத் தொடும் கடல் எல்லை
என இரையும் கடலலையை
கவி வடிப்பேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவே! வண்டுகள் உன்னிடம் - தேன்
குடிக்க வருவதில்லையடி
அழகில் மயங்கி விட்டதடி
சிறிய சிவப்பிதழில்
முத்துப் போல் பனித்துளியடி
சூரியன் கதிர் பட்டவுடன்
பனித்துளி எங்கேயடி
சூரியன் உன் மேல் மயங்கி
பனித்துளியை விரட்டிவிட்டு
தான் வந்து தஞ்சம் கொண்ட தோடி!
இத்தனை அழகு படைத்தும்
உன்மேல் அனைவர் கொண்ட - ஆசையால்
நீ உதிர்ந்து விட்டாயோடி!
இவ்வாறு பூவிடம் கதைபேசி
அதன் தத்துவத்தைக் கவிவடிப்பேனா!

இயற்கை தான் கொண்ட அழகு
எத்தனை எத்தனையோ
இதைக் கவி வடிக்க - என்
வரிகள் போதாது
இத்தனை அழகையும் கண்டு - ஏங்குமடி
அழகை ரசிப்பவர் - மனம்.

ச.சபிதா
தமிழ்
கலை (2013)B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழ் இலக்கியங்கள் காட்டும் தமிழர் இசை மரபு

ஓர் இன மக்களினது நாகரீகத்தின் உயர்வினையும், அம்மக்களின் பண்புகளையும் அம்மக்களால் போற்றி வளர்க்கப்படும் கலைகளைக் கொண்டு அளவிடும் போக்கு, பண்பாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெறும். பண்பாட்டு வரலாற்றிற்கு உறுதுணையாக அமைவது மக்களின் இவ்வாறான கலாசாரம், பண்பாடுசார்ந்த படிமுறைகள் ஆகும். நாகரீக வளர்ச்சியினைக் கணிக்கும் காரணிகளாக அவர்கள் போற்றிப் பாதுகாத்து வரும் கலைகள் அமைகின்றன. அக்கலைகளுக்கும் கவின்கலைகளும் மக்களுடைய மனத்தில் உணர்ச்சியைத் தூண்டி இன்பம் பயந்து அறிவைத் துலங்கச் செய்யும் நிறம் பெற்று விளங்குகின்றன. எனவே பண்பாட்டு மேலுரிமையானது வரலாற்றாசிரியர்களிடையே கவின் கலைகளின் வளர்ச்சியை நாகரீக வளர்ச்சியாகக் கணிக்கும் போக்காகக் காணப்படுகின்றது.

ஒரு நாகரிகம் முதிர்ச்சியடைய வேண்டுமாயின் அதற்குக் குறைந்தது மூன்று மடங்கு காலத்துக்கு முன்னமேயே அது தோன்றியதாக அறிவியல் முறையை அளவு கோலாகக் கொண்டு நிர்ணயித்துள்ளனர். கவின் கலைகளுள் இசைக்கலை சிந்துவெளி நாகரீகத்தில் 15,000 ஆண்டுகளுக்கு முன்பே முதிர்ந்த நிலையை எட்டியுள்ளது. எனவே ஆராய்ச்சியாளர்களின் அளவுகோலின்படி அந்த இசை அதற்கும் 30,000 ஆண்டுகளுக்கு முன்னரேயே தோன்றி வளர்ந்து வந்திருக்க வேண்டும். அவ்வாறாயின் தமிழர் கண்ட இசை ஏறக்குறைய 40,000 ஆண்டுகளாவது தொன்மையான தென்பது தெளிவாகப் பெறப்படுகின்றது.

இவ்வண்ணம் தமிழர் கண்ட இசை மரபில் மரபின் முதன்முதலாகத் தோன்றியது "செவ்வழு" என்னும் இசைமுறையாகும். பண்களைப் பெருக்க முதன்முதலில் இது வழிகாட்டியதால் "செவ்வழு" அதாவது செம்மையான வழி எனப் பெயர் பெற்றது.

மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி இயக்கும் ஆற்றல்கலைகளுக்கும் உண்டு. அவற்றுள்ளும் கவின் கலைகளை உள்ளம், கண், காது இவற்றால் முறையே உணர்ந்தும், கண்டும் கேட்டும் உவகை எய்துகிறோம் கவின் கலைகள் , கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, கவிதை, இசைக் கலை, நாட்டியக்கலை என ஆறு வகைப்படும். இக் கவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை உணர்வு மனிதனுக்கு நிறை மனத்தை அளிக்கின்றது. இக்கலைகளுள் இசைக்கலை ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர் வரை அனைத்தும் தன்வயப்படுத்தும் ஆற்றல் பெற்று விளங்குகின்றது. இசை கேட்டு மயங்கா உயிரினம் இல்லை என்பதை மகுடியின் இசையில் மயங்கும் பாம்பு முதற் கொண்டு இசை கேட்டுச் செழித்து வளரும் தாவரங்கள் வரையிலான செயல்கள் என உணரலாம். இன்பத்திலும் துன்பத்திலும் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு. மேலும் துன்பத்திற்கு ஆறுதலளிக்கும் நன்மருந்தாக பயன்பட்டு வருவதும் கருதத்தக்கது.

செவிவழிப் புகுந்து இதய நாடிகளைத் தடவி உயிரினங்களைத் தடவி உயிரினங்களை இசைய - பொருந்தவைக்கின்ற பொழுது இனிய ஒலிகள் “இசை” என்ற பெயரைப் பெறுகின்றன. இவ்வொலிகள் செவியை மட்டும் எட்டி உள்ளத்தைக் கவராது நின்றுவிடின் அவை ஓசை என அழைக்கப்படுமேயன்றி இசை என்று பெயர் பெறுவதில்லை. இசை என்பது இதயத்தைத் தொடுவதோடு அதனை ஈர்க்கவும் வல்லதாக அமைய வேண்டும். இசை என்ற சொல்லின் பொருள் இசைவிற்பதாகும். இனிமை மிக்கது எழில் வாய்ந்தது. இசை மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வண்மையும் அமையப் பெற்றதாய் இருக்கின்றது. மனிதன் நாடு, மொழி, இனம், பண்பாடு ஆகிய நிலைக்குகொணரும் ஆற்றல் பிறகவின்கலைகளிலும் பார்க்க இசைக் கலைக்கே உரியது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

இப்பண்புகள் பண்டைக் காலத்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் தமிழர் இசை மரபுகளாகும்.

அ.தரண்யா
A/L (2013)
தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் நூல் – திருக்குறள்

நம் அன்னைத் தமிழ் மொழியில் காலத்துக்கு காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணமுள்ளன. அவற்றுள் கால வெள்ளத்தில் மறைந்தன சில உண்டு. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரியன சிலவும் உண்டு. அத்தகு சிறப்பிற்குரிய ஈடு இணையற்ற நூலாக போற்றப்படுவது திருக்குறள் ஒன்றே ஆகும். காலத்தை வென்று வாழும் இந்நூல் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பெருமைக்குரியது. இந்நூலே நான் விரும்பும் நூலாகும். அதற்குரிய காரணங்கள் பல உள்ளன. அவற்றை இக்கட்டுரை மூலம் தர விரும்புகின்றேன். திருமால் ஈரடியால் உலகளந்தார் என்றுரைப்பர். புராதன வித்தகர்கள் ஆனால், திருவள்ளுவர் இரண்டு அடிகளால் உலக மக்கள் அனைவரினதும் உள்ளங்களை அளந்துள்ளார் என்றால் அது மிகையல்ல. இதனாலேயே புரட்சிக்கவி பாரதியும்.

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு".** எனப் போற்றினார். வள்ளுவன் தந்த முதற் குறளே பரந்த நோக்குடையதாக உலக சமுதாயம் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் பண்புடையதாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படம் கருத்துடையதாக மிளிர்வதைக் காணலாம்.

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு".** என்கிறார் வள்ளுவர். இது இன்றைய நிலையில் முக்கியமாக நோக்குதற்குரிய கருத்தாகும். சமயப் பொதுமைக்கும் முதற் போக்கு சிந்தனைக்கும் தொடக்கமாக அமைகிறது இக்குறள். குறளின் அமைப்பு அதன் சீரிய சிந்தனைகளை மக்கள் மனதில் பதிக்கும் வகையில் அமைந்துள்ளது எனலாம். இந்நூல் அறத்துப்பால். பொருட்பால், காமத்தப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. 133 அதிகாரங்களையும் அதிகாரம் ஒன்றிற்கு பத்துப் பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களையும் கொண்டு விளங்குகிறது. திருக்குறளின் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் பொருட்பால் 70 அதிகாரங்களையும் காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது. இது அறநூலாகவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ நெறியுரைக்கும் சீரிய இலக்கியமாகவும் திகழ்கின்றது. வாழ்க்கைக்கு சிறந்த வழியாட்டியாக திருக்குறள் விளங்குகின்றது. மனித வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழியிது என வையகத்தாருக்கு வள்ளுவர் வழிகாட்டுகின்றார். அவரது குறள்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதாக அமைகின்றது.

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றாமை நன்று". (குறள் 238) என்கிறார் தோன்றினால் புகழொடு தோன்றுக எனக் கூறும் வள்ளுவர் புகழொடு தோன்றி புகழொடு வாழ்ந்து, புகழொடு மறைதலே மனிதராய்ப் பிறந்தோருக்கு மாண்புடைத்து என அறிவுரை பகர்கிறார். மனிதராய்ப் பிறந்தோர் வாய்மையுடையோராய் வாழ வேண்டும். வாய்மையே எல்லாவற்றிலும் உயர்ந்ததும் சிறந்ததுமான அணிகலமாகும். அதன் பண்பினை கூறவந்த வள்ளுவர்.

**"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இலாத சொலல்"** (குறள் 291) என அழகுற விளக்கியுள்ளார். நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி அல்லது கேட்டதை கேட்டபடி கூறுதல் அன்று வாய்மை. கேட்போருக்கு ஒரு சிறிதேனும் தீமை தராத ஒன்றே வாய்மை என்பது வள்ளுவர் தரும் கருத்தாகும். "பொய்மையும் வாய்மை இடத்து புரைதீர்ந்த தன்மை பயக்கும் எனின்" (குறள் 292) என்று வாய்மைக்கு புது விளக்கம் தருகின்றார் வள்ளுவர். இவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியிணை வள்ளுவரது திருக்குறள் நமக்குணர்த்துகின்றது.

அறத்துப் பாலில் அறநெறி உரைத்திடும் வள்ளுவர் பொருட்பாலில் புதிய பல கருத்துக்களை நமக்கு புலப்படுத்துகிறார். ஆட்சி புரிவோருக்கு அறிவுரை கூறுகிறார். பொருள்வளம் பெருக்கிடும் முறைகளைப் புகல்கிறார்.மனித வாழ்க்கையைச் செம்மைபடுத்தும் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றார்.

காமத்துப்பாலில் இல்லறத்தான் இன்பம்பெறும் வழிகளை இனிய முறையில் எடுத்துரைக்கின்றார். அறம் பொருள், இன்பம் மூன்றையும் அழகாக எடுத்துக் கூறும் திரக்குறள் வாழ்வியல் நூலாகத் திகழ்கின்றது. அதனாலேயே உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒருநூலாக, உலக பொது மறையாக இது விளங்குகிறது.

வள்ளுவம் இன்று வானுயர்ந்த சிறப்பினைக் கொண்டுள்ளது. உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு உலக மக்களால் பெரிதும் போற்றிப் படிக்கப்படும் ஒரு நூலாக விளங்குகிறது.

**"கடுகு சிறிதெனினும் காரம் பெரிது"** என்பர். குறுகிய இரு அடிகளில் ஆக்கப் பெற்ற குறளானது இன்று எல்லா மக்களிலும் போற்றப்படுகின்றது என்றால் அதன் பொருட் சிறப்பே அதற்குக் காரணமாகும்.

**"கடுகைத் துளைத்தேழ் கடலைப்பு கட்டிக் குறுகத் தரித்த குறள்"** என்பது ஔவையாரின் அருள் வாக்கு. குறளின் பெருமைக்கு இதைவிட வேறு சான்றுகள் வேண்டுமா? திருக்குறளின் சிறப்பினைப் புலவர்கள் பலரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். **"எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத எப்பொருளும் இல்லையாம் - சொல்லால்

பரந்த பாவால் என்பயன் வள்ளுவனார்.

சுரந்த பா வையத்துனை" என்ற குறளின் புகழினைப் பாடுகின்றார் புலவர் மதுரை தமிழ் நாகனார். வள்ளுவரின் பின்வந்த புலவர்கள் யாவரும் அவரது கருத்துக்களைத் தத்தம் பாடல்களை புகுத்ரியுள்ளமையைக் காண்கிறோம். புலவர் போற்றும் புலவராக வள்ளுவர் விளங்குகின்றார். அவர் படைத்த, குறள் உள்ளவரை அவர் நாமம் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை உலகப் புகழ் வாய்ந்த நீதிநூலாக உலக மாந்தர்க்கு வழி காட்டும் தமிழ் மறையாக விளங்கும் திருக்குறளை ஓதியின்புறுவதே தமது கடமையாகும். மனித வாழ்க்கைக்கு உகந்த நெறிகளை வகுத்துக் கூறும் திருக்குறள் என் நெஞ்சம் கவர்ந்த நூலாகும். அதனையே யான் எந்நாளும் விரும்பிக் கற்கிறேன். உலகனைத்துக்கும் பொதுவான இந்நூல் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கூறும் நூலாகவும் விளங்குகிறது. இல்லறத்தை நல்லறமாக்கி மேற்கொன்டொழுகும் முறைகளையும் விருந்தோம்பும் பண்பையும் மக்கட் பேற்றின் சிறப்பையும் திருக்குறளில் நாம் காண முடிகின்றது. இதனாலேயே திருக்குறளைச் சிறந்த வாழ்வியல் நூலாக கருதுகின்றோம். ஒரு நாட்டுக்கோ, ஒரு மொழிக்கோ ஓர் இனத்திற்கோ உரியதல்ல திருக்குறள். அது உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை ஒன்றுபடுத்த வல்லது. அத்தகு சிறப்புக்குரிய நூலை எந்நாளும் போற்றிக் கற்பதே நம் பெரும் பணியாக அமைதல் வேண்டும். தமிழுக்கும், தமிழினத்துக்கும் பெருமை சேர்க்கும் இந்நூலை வாழ்வில் எந்நாளும் மறவாது போற்றுவோமாக.

வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்

மாதின் இனிய உயிர் நிலையை

உள்ளந் தெளிவுறப் போற்றுவமே - என்றும்

உத்தரமாகி ஒழுகுவமே.

சே.எழிலேந்தினி
A/L 2014 Arts
J.V.C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

பத்துமாதம் சுமந்து என்னை
முத்துப் போல பெற்றெடுத்தவள்
நித்தம் சோறு ஊட்டுவாள் - அன்னை
முத்தம் தந்து வளர்ப்பாள்

ஆலமரவிழுது போல தாங்கிடுவாள்
அவனியிலே நாம் சிறக்க அருள் செய்வாள்
பசி உறக்கம் தனை மறந்து பாலூட்டி வளர்த்த
அன்னையவள் தன்னை அகம் குளிரத்துதிப்பேன்

கண் விழித்ததும் முதல் கண்ட தெய்வம்
கண்ணை இமை காப்பது போல் காக்கும் தெய்வம்
ஆலயம் அனைத்துக்கும் அதிபதியாம் அன்னை
அவனியிலே நாம் சிறக்க அருள் செய்வாள்

அன்னையவள் சேவை எண்ணிலடங்காது
அன்னையவளாலே நாம் பிறந்தோமிங்கு
தெய்வத்தின் வடிவான அன்னைதனை
தெவிட்டாது போற்றி பேரின்பம் காண்போம்.

பு.பிருந்தா
A/L (கலைப்பிரிவு)
தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு

"மங்கையாகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாக கருதிப் பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண்களின் பங்கு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடமுண்டு. முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்குத் தனியிடமளித்துள்ளனர் என்பதை சங்க நூல்கள் பறை சாற்றுகின்றன. ஔவையார். காக்கை பாடினியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பீடு பெற வாழ்ந்த வரலாறுமுண்டு.

இறைவனது படைப்பில் ஆண், பெண் இருபாலரும் சமமே. ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் பேதைமையாகும். குறிப்பாகப் பெண்கள் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள். அன்பின் பண்பே பெண்மை. அறத்தின் வடிவே பெண்மை. கற்பின் உயர்வே பெண்மை. உயிரின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள். இதனாற்றான் பெண்ணைத் தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினார். பெண்ணைச் சக்தியின் வடிவமாகப் போற்றின சமயங்கள். வாழ்கைத் துணைவியாகவும் வாழ வைக்கும் தாயாகவும் வழிநடத்திச் செல்பவளே பெண். அவருக்கு ஈடாக எதனையுமே எடுத்துரைத்தல் இயலாது.

இத்தகு சிறப்புமிகு பெண்களை இழிவுபடுத்தும் வேதவிதிகளும் சமூக, மதக் கொடுமைகளும் இடைக்காலத்தே புகுந்தன. இதன் பேறாகப் போற்றிப் பேணப்பட்ட பெண்குலம் தாழ்வுற்றது. பெண்ணடிமை நிலை பெற்றது. வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைக்கும் வேதனை நிலை உருவாயிற்று. "அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு?" எனக் கேட்டனர். பெண்புத்தி பின்புத்தி என்றனர். சென்ற நூற்றாண்டுவரை இந்நிலை நிலவிற்று. பெண்ணடிமைத் தனங்களைத் தகர்தெறிந்து ஆணுக்கிங்கே பெண் சமனென ஆர்த்தெடுங்கள் என அறை கூவல் விடுத்தார் பாரதியார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடந்த வந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லைக் காண். என்று அவர் முழங்கிய பின்னர் தான் பெண்ணுரிமை மலரத் தொடங்கியது. பெண்கள் விழித்தெழுந்தனர். மகளிர் வாழ்வில் புதிய ஒளிமலர்ந்தது. பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களோடு, சரிநிகர் சமனாகப் பங்கு கொண்டு வருகின்றனர். சமுதாயத்தின் பல்வேறு ஆக்கப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட வேண்டியது, காலத்தின் கட்டாயமாகும். இதனை நன்குணர்ந்து சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளில் பெண்களும் பங்கு கொள்ள வேண்டும். தமிழ்மறை தந்த திருவள்ளுவர் வாழ்க்கைத் துணை நலம் பற்றிக் கூறும் போது இல்லற வாழ்வில், ஆணுக்குப் பெண்ணும்பெண்ணுக்கு ஆணும் துணைவர் எனக் கொண்டு ஒற்றுமையோடு செயற்பட்டால் வாழ்க்கை சிறப்புறும், பண்பட்ட சமுதாயம் உருவாகும் என்றார். ஒவ்வோர் ஆணின் முன்னேற்றமும் ஒரு பெண்ணாலே என்பர். எனவே ஆண்களின் முன்னேற்றத்திற்கு பெண்களே பின்னணியில் திகழ்கிறார்கள் என்ற உண்மையை நாம் மறந்து விடக் கூடாது.

"தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் கை" என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நமது நாட்டைப் பொறுத்த வரையில் பெண்களே இன்று முன்னணியில் திகழ்கிறார்கள். ஜனாதிபதி முதல் உயர் நீதிமன்றம் வரை, பல்கலைக்கழகங்கள் தொட்டுப் பாடசாலைகள் வரை, பாராளுமன்றம் தொட்டு உள்ளூராட்சிச் சபைகள் வரை அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதைக் காண முடிகிறது.

இன்று பெண்கள் தம் அறிவாலும் உழைப்பாலும் முன்னேறி வருகின்றனர். ஆடவர்க்கு நிகராகச் சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்றனர். இத்தகைய மகளிர் பங்கு சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் இடம்பெற வேண்டும். இதன் மூலம் மகளிர் வாழ்வும், சமுதாயமும் நாடும் வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

*BY"- Prinsika*
*11B*
*O/L - 2012.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள்

மனிதனே உன் உரிமைகள் மலர்ந்திட வேண்டும்
உனது பண்புகள் நாட்டில் உயர்ந்திட வேண்டும்
இன்றைய உரிமைகள் பல உண்டு - அவை
மறுக்கப் படுகின்றன பண்பற்ற மனிதர்களால்.

சிறகடிக்கும் சிறுவர் உரிமைகள் பல உண்டு
இனிவரும் இளையோர் உரிமைகள் பல உண்டு
முன் வாழ்ந்தோர் மூத்தோர் உரிமைகள் பல உண்டு - ஆனால்
இன்று எவர்க்கும் இல்லை இந்நாட்டில்மதிக்கத்தக்க உரிமைகள்.

சிறுவர்க்கு கல்வி கற்கும் உரிமை உண்டு
இளையோர்க்கு சுதந்திரம் என்ற உரிமை உண்டு
மூத்தோர்க்கு முதுமொழி கூற உரிமை உண்டு - ஆனால்
அதை வெளிக்காட்ட முடியாத சூழ்நிலை எம் ஒவ்வொருவர்க்கும்.

வறுமையிலும் வாழ்வோர்க்கு உரிமை இல்லை
செல்வத்திலும் செழிப்போர்க்கு உரிமை இல்லை
எத்தனை எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
மனிதனது உரிமைகள் மறுக்கப்பட்டுக் கொண்டே செல்கிறது.

எழுந்திடுவோம் துணிவுடனே உரிமைக்காய் குரல் எழுப்பி
மானிடர்கள் இன்பம் பெற விளித்திடுவோம் பாரினிலே
உரிமை உரிமை என்று கூறிடுவோம் - அது
எம் வாழ்வில் நிலை பெற வேண்டிடுவோம்.

நன்றி

டொ. மேரிசந்திரிகா
12A 2014
யா/வை/கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் நூல் – சிலப்பதிகாரம்

ஐம்பெருங் காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம். அது முத்தமிழ், மூவேந்தர், முந்நகரம், முத்தெய்வம், மும்மக்கள், முந் நீதி என்றெல்லாம் மூன்றுகளைக் கொண்ட சிறப்பிற்குரியது. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்றார் பாரதியார். அவரது நெஞ்சை மட்டுமல்லப் படிப்போரனைவரதும் நெஞ்சையள்ளும் ஒப்பற்ற குடிமக்கள் காப்பியம் சிலப்பதிகாரம். அதுவே யான் விரும்பும் நூலாகும்.

சிலம்பூ அதிகாரம் ஸ்ரீ சிலப்பதிகாரம் என்பர். சிலம்பினால் அதிகரித்த வரலாற்றைக் கூறும் நூல் என்று இதற்குப் பொருள் உரைப்பர். சிலம்பின் செயலை மையமாகக் கொண்ட கதையைக் கூறுவதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

கண்ணகியின் சோகத்தையை இதயத்தைத் தொடம் வகையில் இளங்கோ அடிகள் இயற்றியுள்ளதால் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாரதியார் கூறியிருக்கலாம். இந்நூல் சொல்நயம், பொருள் நயம் வாய்ந்து கற்போர் நெஞ்சைக் கவரும் சிறப்பிற்குரிய தாய் விளங்குவதால் நெஞ்சைஅள்ளும் நூல் என நாமும் துணிந்து கூறலாம். "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேடும் சிலப்பதிகாரம்" என்று கவிமணி தேசிக விநாயகபிள்ளை போற்றுவதும் நம் இதயத்து உணர்வையே பிரதிபலிக்கின்றது.

சிலப்பதிகாரம் "நாடகக்காப்பியம்" எனவும், "இயல், இசை, நாடகப் பொருள் தொடர் செய்யுள்" எனவும், "உரையிட்ட பாட்டுடைச் செய்யுள்" எனவும் போற்றப்படுகின்றது. தமிழில் தோன்றிய முதற்காப்பியம் இதுவாகும். இந்நூல் புகார்க் காண்டத்தில் முப்பது காதைகள் இந்நூலில் அமைந்தள்ளன. (காதை - கதை தழுவிய பாட்டு) காண்டத்தின் உட்பிரிவினைக் காதை என்று கூறுவர்.

மூவேந்தருக்கும் மூன்று நாட்டினர்க்கும் முத்தமிழுக்கும் பொருந்தும் வகையில் இக் காப்பியம் வரையிடப்பட்டுள்ளது. பண்டைத் தமிழர் தம் கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பறை சாற்றும் கண்ணாடியாக மிளிர்கிறது. இந்நூல் மூன்று அநெறிகளை உலகுக்கு உணர்த்துகின்றது.

01. அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்.

02. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்.

03. ஊழ்வினை உறுத்த வந்தூட்டும் என்பனவாகும்.

இம் மூன்று அறநெறிகளை வலியுறுத்தும் வகையிலேயே இக்காப்பியம் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியாகக் கண்ணகி விளங்குகின்றாள். அவளைக் கற்பின் செல்வியாகவும் அறிவின் கொழுந்தாகவும் காப்பியம் உணர்த்துகின்றது. கோவலன் பெருஞ் செல்வனாகவும், வணிகனாகவும் விளங்கினான். கலை ஆர்வம் மிக்கோனாக கலைக்காக எதையும் இழக்கும் பண்புடையோனாகவும் காப்பியம் அவனைக் காட்டும் ஆடற்கலையரசி மாதவியோ ஆடும் மயிலாகவும் பாடும் குயிலாகவும் ஏன் கற்பின் செல்வியாகவும் வாழ்ந்தமையைக் காப்பியத்தில் நாம் காண முடிகின்றது. இத்தகு சிறப்பு மிகு காப்பிய மாந்தர்களுக்கு முக்கியத்துவம் அளித்த இளங்கோவடிகள் அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும் என்ற உண்மையை பாண்டிய மன்னனின் முடிவினைக் காட்டி நமக்குப் புலப்படுத்துகிறார்.

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" என்பதற்கு எடுத்துக் காட்டாக சாதாரண குடிமகளான கண்ணகியைத் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்திக் காட்டுகின்றார். இதுவரை காலமும் விண்ணிலிருந்தே தெய்வம் மண்ணகம் வந்ததாகவே நூல்கள் கூறும். ஆனால் இளங்கோ அடிகளோ மண்ணிலிருந்த தெய்வம் ஒன்று விண்ணகம் சென்றதாக விளம்புகின்றார். இது இளங்கோ அடிகளார் செய்த காப்பியப் புரட்சி என்றே கூறலாம்.

"ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பதைக் கண்ணகி கோவலன் வாழ்க்கை மூலம் புலப்படுத்துகின்றார். சிலம்பு கூறும் செய்திகள் எக்காலத்துக்கும் பொதுவான உண்மைகளாகும். இவற்றை இன்றும் கூட நாம் வாழ்க்கையில் நிதர்சனமாகக் காணமுடிகிறது. இக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள பாத்திரங்கள் அனைத்தும் சிலம்பு கூறும் செய்தியினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

இளங்கோவடிகள் இக்காப்பியத்தினை முத்தமிழ் நாடகக் காப்பியமாகவே உருவாக்கியுள்ளார். என்பதை இதைப் படிப்போர் இலகுவில் புரிந்து கொள்வர். மேற்கண்ட காரணங்களாலேயே என் சிந்தை கவர்ந்த நூலாகச் சிலப்பதிகாரத்தை கருதுகிறேன். "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேடும் சிலப்பதிகார மனித ஊனிலே உயிர் உள்ளனவும் ஓதி இன்பம் பெறுவோமாக!

BY - Prinsika (O/L)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்பாற் புலவர்கள்

பழந்தமிழரின் நாகரிகம், பண்பாடு முதலியவற்றை விளக்கும் சங்க நூல்களை ஆராய்ந்தால் ஆடவர்களைப் போல பெண்டிரும் அருந் தொண்டுகள் பல புரிந்துள்ளனர். பெண்கள் மனைத்தக்க மாண்புடையராய்த் திகழ்ந்தது போல் அரசரோடு சரி நிகராக ஆசனத்தில் அமர்ந்து அறன் ஆயும் திறமை பெற்றிருந்தமையும் புலனாகும். இல்லறத்தை நல்லறமாக்குவதில் கண்ணும் கருத்துமுடையவராய் விளங்கிய பெண்கள், அரசும் ஆட்சியும் மக்களும் சிறப்புறுவதில் கவனம் செலுத்தத்தவறியதில்லை.

சங்க நூல்களில் ஐம்பதின் மருக்குக் குறையாத பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்களைக் காணலாம். புறநானூறு பாடிய நூற்று நாற்பத்தேழு புலவர்களில் பெண்புலவர்கள் பதினேழு பேர் ஆவர். புறநானூற்றில் மிகுதியான பாடல்களைப் பாடிய பெண் புலவர்களில் தலை சிறந்து விளங்குபவர் ஔவையாரேயாவார். அவர் பாடியனவாக முப்பத்துமூன்று பாடல்கள் புறநானூற்றில் காணக் கிடக்கின்றன. இடைக்காலத்திலும் காரைக்காலம்மையார், ஆண்டாள் முதலியவர்கள் பக்திச் சுவைததும்பும் பாடல்களைப் பாடித் தமிழ் அணங்கை அணி செய்தனர்.

சுய உரிமை பெற்றுள்ள நமது நாட்டில் மகளிர் சிலர் அரசியற் தூதுவராக வெளி நாடுகள் சென்று செயலாற்றுவதைப் பாராட்டுகின்றோம். எனினும் இது நமக்குப் புதியதன்று. ஔவையார் போன்ற புலவர்கள் அரசர்களிடையே அன்பையும் சமாதானத்தையும் வளர்ப்பதற்கு தூது செல்வதற்குத் துணிந்து முன் வந்தனர் எனில் பண்டைத் தமிழ் பெண்களின் திறனைப் பற்றி வேறென்ன கூறுவது.

வீரத்தாயின் வயிற்றிலே வீரப் புதல்வர்களே பிறப்பார்கள். இதனை மறக்குடியில் பிறந்து சிறந்து விளங்கிய காவற் பெண்டு என்ற பெண்புலவர் நாம் வியப்புற பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

"நின்மகன் யாண்டுளன் என வினவியதற்கு அவர் பகர்ந்த
மறச் செறிந்த மொழிகளான"
என் மகன்,

யாண்டுளனாயினும் அறியேன். ஓரும் புலி சேர்ந்த போகிய கல் அளை போல ஈன்ற வயிறோ இதுவே, தோன்றுவன மாதோ போர்க்களத்தானே! (புறம் 86) புலி கிடந்து போகிய வயிறு இதோ இருக்கின்றது. புலியொத்த இளைஞனுக்குப் போர்க்களந்தான் வீடு எனக் கூறிய அவர் பேச்சில் வீரமகனைப் பெற்றெடுத்த பெருமிதம் திகழ்கின்றது.

ஒக்கூர் மாசாத்தியார் ஒரு தாயின் வீரச் செய்கையை வியந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கெடுகருநனத கடிதிவள் துணிவே! மூதிர் மகளிர் ஆதல் தகுமே” என்று விம்மிதமடைகின்றார். ஒரு பெண்ணின் தமையன் முதல் நாட் போரிலும், கணவன் மறுநாட் போரிலும் வீரத்துடன் பொருது மடிந்தனர். மூன்றாம் நாள் போர் முரசம் அறைந்தது, அவள் பொங்கி எழுந்தாள். எஞ்சி நின்ற குலக் கொழுந்தை, ஒரே மகனைப் பாலாறாவாயனை அன்போடு அழைத்தாள். உச்சி மோந்து தலைக்கு எண்ணெயிட்டுச் சீவி முடித்து, தூய வெள்ளை ஆடையைக் கட்டி திருத்தின வேலை கொடுத்துப் போர்க்களத்தை நோக்கிச் செல்லும்படி விடுத்தாள். இவளன்றோ வீரத்தாய். நாட்டிற்கு இடுக்கண் நேர்ந்த காலத்து, தன்னலம் துறந்த இவளது சமுதாய உணர்ச்சியும் தியாகமும் போற்றுதற்குரியவை.

சமுதாயம் வளம் பெறக் கடமையை முதலிற் பேணுதல் வேண்டும். பெற்றோருக்கும், அரசனுக்கும், தொழிலாளருக்கும், வீரர்களுக்கும் ஏற்புடைய கடமைகளைப் பொன்முடியார் விளக்குகின்றார்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே!
சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே,
நன்னடைநல் கல் வேந்தர்க்குக் கடனே,
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே

புறம் 312

என்பது அவர் பாடல்

நரம் பெழந் துலறிய நிரம்பாமென்றோள்
முளரி மருங்கின் முதியோர் சிறுவன்.........

புறம் 278

நரம்புகள் எழுந்து தசை உலர்ந்த மூதாட்டி தன் மகன் போரிற் புறமுதுகிட்டு மடிந்தனன் எனச் சிலர் கூறக்கேட்டு சினந்தெழுந்தாள். அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்து எறிந்திடுவேன் என வஞ்சினம் கூறிப் போர்க்களம் சென்றாள். மார்பில் புண்பட்டுச் சிதைந்து கிடந்த உடம்பைக் கண்டவுடன் அவனைப் பெற்ற பொழுதினும் பெருமகிழ்வடைந்தாள். இப்பாடல்,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக் கேட்ட தாய்

என்ற குறளின் கருத்தை அழகாக எடுத்துக் காட்டுகிறது. தனக்கு நெல்லிக் கனியை அளித்து நீண்டகாலம் வாழச் செய்த அதியமான் நீடுவாழ வேண்டுமென்று விரும்பிய ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே
புறம் 91

என வாழ்த்துவதனால் அவருடைய பேரன்பு நன்கு வெளிப்படுகின்றது. மக்களுக்கு அறிவுரை கூறி அவர்களைச் சீர்படுத்துவதே கற்றறிவுடைய தமக்குக் கடமை என்று உணர்ந்தார் ஔவையார். அவரது பரந்த உள்ளம் அற்றார்க்கும் அலந்தார்க்கும் அறிவு புகட்டுவதிலேயே நாட்டம் கொண்டது. இவர் இளைஞர் மனதில் பசுமரத்தாணி போற் பதியும்படி ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய பாடல்களையும் இயற்றியுள்ளார்.

சங்ககாலத்துக்குப் பின்னர் செந்தமிழ் மொழியைத் தெய்வமணம் கமழச் செய்தவர்களுள் காரைக்காலம்மையார், ஆண்டாள் ஆகிய பெண்பாற் புலவர்களும் அடங்குவர். தனக்கோர் அம்மையில்லாதவராகிய சிவபெருமான், திருவாக்கால் அம்மையே! என அழைக்கப்பட்ட சிறப்பு காரைக்கால் அம்மையார் ஒருவருக்கே உண்டு. தனித்தமிழ் மணமும், எளிய நடையும், அரிய பொருளும் அம்மையார் பாக்களில் நிரம்பியுள்ளன.

"பிறந்து மொழி பயன்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே வந்தடைந்தேன்"

என இளமை முதல் அவர்களிடத்துக் கொண்ட பக்தியை வெளிப்படுத்தினார். ஆண்டாள் கண்ணன் பால் கொண்ட தலையாய காதலின் விளைவே நாச்சியார் திருமொழியாகும். ஆண்டாள் அருளிய முப்பது திருப்பாவைப் பாடல்களும் இலக்கிய வளம் செறிந்த பக்திக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. இடையறாது கண்ணனையே சிந்தித்து அவன் கைத்தலம் பற்றக் கனாக் கண்டதை அழகுறச் சித்தரிக்கின்றார் ஆண்டாள். தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்ய விளைந்த அவர் அருட்திறம் அளவிடற்கரியது.

பிற்காலத்தில் வாழ்ந்த பெண் புலவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் நாமகள், பாண்டியன்தேவி, சோழன் தேவி, தாதி, உத்திர நல்லூர் நங்கை, முதலியோராவார். இவ்வண்ணம் வாழையடி வாழையாகப் பாக்கள் புனைந்தும், நூல்கள் யாத்தும் தமிழ் அன்னையை அலங்கரித்த பெண் புலவர்கள் எண்ணிலடங்கார்.

*சி.சஞ்சிகா*
A/L
2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்தாலே இனிக்கும்

நாட்கள் நகர்ந்து வருடங்கள் கடக்கும்
நம் வாழ்க்கைப் பாதையில்
என்றென்றும் நிழலைப் போல் தொடரும்
நம் நட்பின் பெருமையே!

கண் சிமிட்டி ஒரு ஓரப் பார்வை பார்க்கும்
எந்த விண் மீன் கூட்டம்
கதை கதையாய் சொல்லும்
அதன் காலம் முடியும் வரை

சிறு பிள்ளை சண்டையாய்
சில சமயம் சிரிக்கின்றோம்
அன்பென்னும் கவசத்தால்
காத்துக் கொண்டோம் நம் நட்பை

ஓரே பிரசவத்தில் எண்ணற்ற
மலர்களைத் தந்த - இந்தக்
கல்லூரித் தாயை நினைத்தாலே இனிக்கும்
நம் நட்பின் தூரம் வெகுதூரம் செல்லும்.

செ.நிஷாந்தினி
கலைப்பிரிவு
(2013) B.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

ஈழத்திருநாடு பெற்றெடுத்த பேரறிஞர்கள் பலர். அவர்களுள் தமிழுலகு போற்றும் பெருமைக்குரியவராய்த் திகழ்ந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர். அவர் தமது வாழ்நாள் முழுவதும் துறவறத்தில் நின்று தமிழ் வளர்த்து தவம் புரிந்த பெருந்தகை. தமிழின் பெருமையை, தமிழிசையின் பெருமையை, யாழ் என்னும் பழந்தமிழ் இசைக்கருவியின் பெருமையை உலகறியச் செய்த பெரியாராவார். அவரது பணிகள் ஒப்பற்றன.

மீன்பாடும் தேன்நாடு என்று போற்றப்படுவது மட்டக்களப்பு. அங்கே காரேறு மூதூரில் சாமித்தம்பிக்கும் கண்ணம்மைக்கும் அருந்தவப்புதல்வராக 1892ஆம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தொன்பதாம் திகதி இவர் பிறந்தார். தாய் தந்தையர் இவருக்கு மயில்வாகனம் எனப் பெயர் சூட்டினர்.

மயில்வாகனம் இளமையில் கல்வியில் மிக்க ஆர்வம் கொண்டவராக தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளையும் கற்றார். ஆசிரியர் பயிற்சி பெற்றார். விஞ்ஞானக் கல்வியில் நாட்டம் கொண்டார். பௌதீக சாஸ்திரத்தில் பி.எஸ்.ஸீ பட்டமும் பெற்றார். தமிழியற் புலமை வாய்ந்த இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் பட்டத்தையும் பெற்றார்.

யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும், மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகவும் பணியாற்றினார். மயில்வாகனம் தமது ஆசிரியப்பணியைச் சிறப்பாக ஆற்றிய காலத்தில் அவரது உள்ளம் துறவு வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியது. இதன் காரணமாக இவர் இராமகிருஷ்ண சங்க மடத்தைச் சார்ந்து தமது முப்பதாவது வயதில் பூரண துறவியானார். மயில்வாகனம் என்னும் இயற்பெயரைத் துறந்து பிரபோதசையன்யர் என்னும் திருநாமத்தைப் பெற்றார். பின்னர் தமது முப்பத்திரண்டாவது வயதில் குருபட்டம் பெற்றுச் சுவாமி விபுலானந்தர் என்னும் பெயரைப் பெற்றார்.

இயல்பாகவே தமிழ்மீது தீராத பற்றுக் கொண்ட அடிகளார் தமிழில் ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதினார். இவரது ஆற்றல்களை நன்குணர்ந்த அண்ணாமலை அரசர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதற் தமிழ்ப் பேராசிரியராக இவரை நியமித்தார். அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலம் பாரத நாட்டில் வேட்டை தீவிரமடைந்திருந்த காலம். மகாகவி சுப்பிரமணிய பாரதியின் சுதந்திர வேட்கை ததும்பும் பாடல்களில் அடிகளாருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. பாரதியின் பாடல்களைப் பாடுவதற்கே பலர் அஞ்சிய வேளையில் பல்கலைக்கழகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரத பாடல்களின் சிறப்பினை எடுத்துரைத்துப் பாரதியின் பெருமையினைப் பறைசாற்றிட வேண்டுமென உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் அடிகளாரும் ஒருவர் என்றால் அது மிகையல்ல.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி பலரதும் பாராட்டுதல்களைப் பெற்று அடிகளார் பின்னர் இமயமலைச் சாரலில் உள்ள மாயாவதித் தவப்பள்ளியில் தங்கியிருந்தார். அங்கிருந்த காலத்தில் வேதாந்த கேசரி, பிரபுத்தபாரதம் என்னும் பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கிருந்து மீண்டும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதற் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அடிகளார் இசைத்துறைக்கு ஆற்றிய பணிகள் மகத்தானவையாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அடிகளார் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிய காலத்தில் அங்கு இசைப் பேராசிரியராயிருந்த க.பொன்னையா பிள்ளையோடு கலந்துரையாடியதன் பேறாக இசைத்தமிழ் ஆய்வில் ஈடுபடத் தொடங்கினார். பதின்னான்கு ஆண்டு காலம் ஆராய்ந்ததன் பேறாக இசை உலகு போற்றும் வகையில் யாழ்நூல் என்னும் பெரும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் இசைத்தமிழ் ஆய்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. விபுலானந்த அடிகளாரின் அவ்வரிய பணியினை இசை உலகு பெரிதும் போற்றியது. இந்நூல் அரங்கேற்றம் அண்ணாமலை நகரில் திருக்கொள்ளம்புத்தூர்க் கோயிலில் பேரறிஞர்கள் பலர் முன்னிலையில் நடைபெற்றது.

எழுத்தாற்றல், பேச்சாற்றல், கவிபுனையும் ஆற்றல் அனைத்தும் பெற்ற அடிகளார் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கவிதைகளையும் நூல்களையும் ஆக்கியுள்ளார். இயல்பாகவே கவித்துவ ஆற்றல் மிக்க அடிகளாரின் கவிதைகள் இனிமையும் அழகும் வாய்ந்தவை. ஆங்கிலப்புலவர்களின் கவிதை வளத்தினை அவைகளின் சுவை குன்றாது தமிழாக்கி தமிழர்கள் படித்துச் சுவைக்க வழி செய்தார். இனிய கவிதைகள் பலவற்றை இயற்றித் தந்தார். மட்டுநகர் வாவியில் எழும் இன்னொலியினைக் கூர்ந்து கேட்டு அதன் அருமையினைச் சுவைத்து மகிழ்ந்து நீரார மகளிர் இன்னிசைப்பாடல் என்னும் உரைத்தொடரினைப் தமிழ்ப்பொழில் என்னும் இதழில் வெளியிட்டார். அடிகளாரின் இனிய கவிதைகள் கற்போர் இதயங்களை காந்தம் போற் கவரவல்லன.

ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று கங்கையில் விடுத்த ஓலை ஆகியன அடிகளாரின் கவித்துவ ஆற்றல்களுக்குச் சிறந்த சான்றுகளாகும். சுவாமிகளின் ஆராய்ச்சித் திறனுக்கு யாழ் நூல் சான்று பகருகிறது. இவை மட்டுமன்றி நாடகத் துறையிலும் அடிகளார் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். மதங்க சூளாமணி போன்ற நூல்களை எழுதி நாடகத் தமிழுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றொண்டாற்றினார்.

சென்னை தமிழ்ச் சங்கத்தின் கலைச் சொல்லாக்கக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார். பிறநாட்டு நல்லறிஞர் தந்திரங்களைத் தமிழ் மொழியிற் பெயர்த்திட உதவும் கலைச் சொற்களை ஆக்கும் பணியிலும் அடிகளார் சேர்ந்துழைத்தமை அவரது மொழிப் பணியினை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. அடிகளாரின் கல்விப்பணிகள் ஈடு இணையற்றவை. கல்வித் துறையில் நமது மாணவர்கள் நாட்டம் கொள்வதன் மூலமே நமது சமுதாயம் முன்னேற முடியும் என்பதை அடிகளார் நன்குணர்ந்திருந்தார். இதன் பொருட்டுக் கிழக்கு மாகாணத்திலும் வடக்கிலும் பல பாடசாலைகளை உருவாக்க வேண்டுமென விரும்பினார். இராமகிருஷ்ண சங்கத்தின் மூலம் மட்டக்களப்பிலும், காரைதீவிலும், திருமலையிலும் யாழ்ப்பாணத்திலும் பல பாடசாலைகள் தோன்றுவதற்கு மூலகாரணமாக விளங்கினார். மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி, திருமலை இராமகிருஷ்ணா இந்துக் கல்லூரி, காரைதீவு விபுலானந்த வித்தியாலயம் என்பன அடிகளாரின் கல்விப் பணிக்குச் சான்று பகருவனவாக இன்றும் விளங்குகின்றன. இலங்கை அரசின் பாடசாலைக்கான பாடத்திட்டங்களை வகுக்கும் சபையிலும் பல்வேறு சபைகளிலும் அங்கம் வகித்துக் கல்வித்தரம் உயர வழி செய்தார். யாழ் - ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தாபகர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். ஏழை மாணவர்கள் கல்வி பயிலும் பொருட்டு அவர்களுக்கு உண்டியும் உறையுளும் வழங்கி ஆதரவு வழங்கினார். இதன் பொருட்டு சிறுவர்களை ஆதரித்துக் கல்வி போதிக்க உதவும் சிறுவர் இல்லங்களை உருவாக்கினார். அடிகளார் உருவாக்கிய சிறுவர் இல்லங்கள் இன்றும் ஆதரவற்ற ஏழை மாணவர்களுக்குப் பெரும் பயன் நல்கி வருகின்றன.

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் ஒப்பற்ற தொண்டாற்றிய விபுலானந்தரை முத்தமிழ் முனிவர் என்று அறிஞர் உலகு போற்றுகின்றது. ஈழம் தொட்டு இமயம் வரை புகழ் பரப்பிய இப்பேரறிஞரை நினைவு கூர்ந்து ஊர்கள் தோறும் விழா எடுத்துப் போற்றுவதோடு அன்னாரின் உருவச்சிலைகளை நாட்டியும் வழிபாடு செய்கிறது. ஈழ நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த இப்பெருமகனாரின் நாமம் தமிழ் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அப்துல்லாஹ்
A/L 2014
கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ம் நூற்றாண்டில் ஈழத்த இலக்கிய வளர்ச்சி

19ம் நூற்றாண்டில் தோன்றிய பெருந்தொகையான தமிழ் இலக்கியங்கள் சமயப் பிரச்சார நோக்கம் உடையதாகவே இருந்துள்ளன. கறீஸ்தவ மதப் பிரசாரமும் அதற்கு எதிரான இந்து மதப் பிரச்சார முயற்சிகளும் கற்றோரை மட்டுமன்றி மற்றோரையும் எட்டும்படி அவை சம்பந்தமான இலக்கிய ஆக்கங்களை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இவ் வகையில் தெய்வங்கள் மீதும் தெய்வங்கள் உறையும் திருத்தலங்கள் மீதும் பாடப்பட்ட இலக்கியங்களே பெருந்தொகையாகத் தோற்றம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. 19ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியப் பரப்பானது புராணங்கள், சிற்றிலக்கியம், இலக்கண நூல்கள், தத்துவ நூல்கள், கண்டன நூல்கள், நாடக நூல்கள், அகாரதித்துறை மொழிபெயர்ப்புத்துறை, வசனநூல்கள், வரலாற்று நூல்கள், அறிவியல்துறை, பத்திரிகைத்துறை எனப் பல்துறைகளிலும் புதுப்பொலிவுடன் புகழ் பூத்து விளங்குவதனை அக்கால இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

பழமையான செய்திகளையும், நிகழ்வுகளையும் கூறுவது புராணம் ஆகும். புராண இலக்கியங்கள் பல இக்காலத்திலே தோற்றம் பெற்றுள்ளன. வல்லை வைத்திலிங்கம் பிள்ளையின் சாதி நிர்ணய புராணம், சபாபதி நாவலரின் சிதம்பர சபா நாத புராணம், மாதகல் ஏரம்பு ஐயரின் நகுலாசல புராணம், புலவர் சுப்பையரின் கனகிபுராணம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

புலவர்களால் சிறப்பாகக் கைளாப்பட்ட சிற்றிலக்கியங்களில் ஒன்று ஊஞ்சல் ஆகும். ஆசிரிய விருத்தப்பாவிலோ அல்லது கலித் தாழிசையாலோ பொலித்தரங்கிளையோடும் பொலிக எனப்பாடுவது ஊஞ்சல் ஆகும். மூளாய் சித்தி விநாயகர் ஊஞ்சல், சுன்னாகம் ஐயனார் ஊஞ்சல், வண்ணை நகருஞ்சல் போன்ற பல ஊஞ்சற் பதிகம் தோன்றியமையைக் குறிப்பிடலாம்.

பல்வகைப் பாக்களும், பாவினங்களும் அமைய புய வகுப்பு முதல் ஊசலீறாக பதினெண்ணுறுப்புக்களும் அகம் புறமாகிய பொருள் விரவி எண்வகைச் சுவைகள் மலிய அந்தாதித் தொடையாய் அமைக்கப்படுவது கலம்பகம் ஆகும். நீர்வேலியைச் சேர்ந்த பீதாம்பரப் புலவரால் பாடப்பட்ட மறைசைக் கலம்பகம் இக் காலத்தே தோன்றிய கலம்பக இலக்கியமாக அமைகின்றன.

நூறு திருப்பாட்டுக்களைக் கொண்ட பக்தி சதகமாகும். உடுப்பிட்டி சின்னத்தம்பி புலவரின் வீரபத்திரர் சதகம், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சதாசிவம்பிள்ளையவர்களின் திருச்சதகம் முதலியன குறிப்பிடத்தக்க சதக இலக்கியங்களாக விளங்குகின்றன. அகவற்பாவினால் ஆக்கப்படும் பிரபந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவல் ஆகும். நல்லூர் பரமாநந்தப் புலவரின் நல்லைக் கந்தர் கவசம், மயில்வாகனப் புலவரின் விநாயகர் கவசம் குறிப்பிடப்படுகின்றன. ஒரு பாடலின் இறுதி எழுத்து, அசை, சீர் அல்லது அடி அடுத்த பாடலின் முதலாக அமைய வரும் நூறு வெண்பாக்கள் அந்தாதி ஆகும். மாவை அந்தாதி, நல்லையந்தாதி முதலியவை இக்காலத்து அந்தாதி இலக்கியங்கள் ஆகும்.

குறத்தி குறி கூறுவதும் குறவனுடன் பேசி மகிழ்வதுமாகிய செய்திகளை முன்னிலைப்படுத்திப் பாடிய பிரபந்தம் குறவஞ்சியாகும். வண்ணைக் குறவஞ்சி, நகுல மலைக் குறவஞ்சி, திருகோண மலைக் குறவஞ்சி என்பன குறிப்பிடத்தக்கன. வெண்பா யாப்பினால் பெயர் பெற்ற இலக்கியங்களும் இக்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளன. இருபாலை சேனாதிராசா முதலியாரின் நல்லை வெண்பா, நீராவிக் கலி வெண்பா என்பனவும் முருகேசு என்பவரின் மயலணிச்சிலேடை வெண்பா, குடந்தை வெண்பா என்பன விளங்குகின்றன. பதிக வடிவமாக நாயக்கர் காலத்தில் தோன்றிய திருப்புகழ் 19ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றுள்ளது. பீதாம்பரப்புலவரின் மறைசைத் திருப்புகழ், அருள்வாக்கி அப்துல் காதிருப்புலவரின் சந்தத் திருப்புகழ், அசனா லெப்பைப் புலவரின் நவரத்தினத் திருப்புகழ் என்பவை குறிப்பிடத்தக்கன.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்கள் கொண்ட இசைப்பாடல் வடிவில் அமைந்த பிரபந்தமாகிய கீர்த்தனையும் இக்காலத்தே தோற்றம் பெற்றது. உடுப்பிட்டி சின்னத்தம்பிப் புலவரின் சிவகோத்திரக் கீர்த்தனை நல்லூர்ப் பரமானந்தாப் புலவரின் நல்லைக் கந்தன் கீர்த்தனை என்பன குறிப்பிடப்படுகின்றன.

நாடக இலக்கியங்களும் இக்காலத்தே வளர்ச்சியடைந்தது. "இலங்கையில் மிகச் சிறப்பாக வளர்ந்த இலக்கியத்துறை நாடகம்" எனக் கலாநிதி மு.வரதராசன் குறிப்பிடுவார். ஆரம்பத்தில் மரபுவழி வந்த கூத்து முறை நாடகங்கள் பின் விலாச நாடகங்களாகவும் வளர்ச்சி அடைந்துள்ளன. 1798ல் எருமை நாடகம். நொண்டி நாடகம், ஏரம்பதோர் நாடகம் (1765 - 1824) இராம நாடகம், தருமபுத்திர நாடகம் என்பனவும் (1766 - 1842) இராம விலாசம், இரத்தின விலாசம், சந்திரகாச நாடகம், கண்டி நாடகம், ஏரோது நாடகம், சம நீக்கிலார் நாடகம் முதலியவற்றையும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன.

மேலை நாட்டு இலக்கியத்துறையாகிய அகராதித்துறையும் ஈழத்தில் தோற்றம் பெற்றது. ஐரோப்பிய பாதிரியாராகிய வின்ஸ்லோ ஐயரின் தமிழ் ஆங்கில அகராதி (1862) பேர்சிவல் பாரதியாரது தமிழ் ஆங்கில அகராதி என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. இலக்கண நூல்கள் பலவும் இக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியுள்ளன. ஆறுமுகநாவலரவர்களின் இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை என்பனவும் சேர்.பொன்.இராமநாதனின் செந்தமிழ் இலக்கணம், சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவரின் இலக்கணச் சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம் என்பனவும் ந.குமாரசுவாமிப் புலவரின் நன்னூற் காண்டிகையுரை விளக்கம், சிவிலியின் தமிழ் இலக்கணம் என்பனவும் குறிப்பிடத் தக்கன.

மேலை நாட்டு இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகிய நாவல் இலக்கிய வடிவம் தோற்றம் பெற்றது. 1885ம் ஆண்டு வெளிவந்த அறிஞர் சித்தி லெப்பையின் அசன்பேயுடைய கதை ஈழத்தின் முதன் நாவல் என்ற சிறப்பைப் பெறுகின்றது. போர்த்துக்கேய நெடுங்கதையைத் தழுவி திருகோணமலை இன்னாசித்தம்பியால் ஊசோன் பாலந்தைக் கதை 1891ஆம் ஆண்டு வெளிவந்தது.

உரைநடை உயர்வு பெற்ற ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். ஆறுமுக நாவலர் உரைநடையின் உயர்வுக்கு உறுதுணை புரிந்தார். இவரின் உரைநடையின் சிறப்பினைக் கண்ட வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார் உரைநடை கைவந்த வல்லாளர்" எனவும் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் "தற்கால உரைநடையின் தந்தை" எனவும் குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டலாம். இவரால் எழுதப்பட்ட வசன நூல்கள் கண்டன நூல்கள் என்பவற்றில் இவரின் உரைநடைத் தெளிவைக் காணலாம்.

மொழி பெயர்ப்பு முயற்சிகளும் இக்காலத்தில் இடம் பெற்றுள்ளன. புலோலி வ.கணபதிப்பிள்ளையின் வடமொழிப் பெயர்ப்பாகிய வில்ஹனியம், வாதபுரேசர்கதை என்பனவும் குமாரசுவாமிப் புலவரினால் சமஸ்கிருதத்திலும் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட மேகதூதக காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதி வெண்பா என்பனவும் காசி வாசி செந்தி நாதையரின் நீலகண்ட பாஷியம் திருஞானசம்மந்தப்பிள்ளையின் தர்க்கமிர்தம் நாகநாதபண்டிதரின் மாவை தர்மசாஸ்திரம், பகவத் கீதை, மேகதூதம் என்பனவும் மொழி பெயர்ப்பு இலக்கியங்களாகும்.

கை.பௌசிகா
13AA/L(2013)
தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரழியும் இளைய தலைமுறையும் சீரழிக்கும் தொழில் நுட்பமும்

எதிர் காலத்தின் தூண்கள் என்று வர்ணிக்கப்படுகின்ற எமது இன்றைய தலை முறையினர் தங்களின் பொறுப்புக்களினை மறந்து தலைகீழாக, நெறிமுறை தவறி நடக்கின்ற செயற்பாடு நம்மவர் உள்ளே மிகவும் கலக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. எங்களின் அசைக்க முடியாத சொத்தாக வர்ணிக்கப்படுகின்ற கல்வி இன்று மிகவும் அருகி வருகின்றது. உண்மையில் எமது இளைய தலை முறையினர் பொறுப்புடன் நடக்க தவறுகின்றனர், ஏனென்றால் எதையும் மாற்றும் திறன் இளவயதிலே ஏற்படுகின்றது. அந்த இளவயது தவறான சில முடிவுகளை விரைவாக எடுக்கின்றது. இதற்கு அடிப்படையான ஒரு காரணம் தற்போதைய அதித வளர்ச்சி கண்டு வருகின்ற தகவல் தொழில் நுட்ப மாற்றம். இது அதிக நன்மையினை எமக்கு ஏற்படுத்தி கொடுத்தாலும் அதற்கு சமமாக தீமைகளினையும் ஏற்படுத்தி கொடுக்க தவறவில்லை.இவைகள் இரண்டும் தற்போது பாடசாலை மட்ட மாணவர்களிடையே போதிய அறிவுடன் அதிக மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. இதை சற்று ஆழமாக நோக்கினால்.

இவற்றினை போதிப்பதில் அரச துறையினை விட தனியார் துறையினர் மிகவும் நாட்டம் கொண்டு, அதிக பணத்தினை கொண்டு, அதிக பணத்தினை பெற்று, தமது கல்வி செயற்பாட்டினை போதிக்கின்றனர். இதில் நமது தலைமுறையினர் பாடுபொருள் இன்றி அறிவினை பெறுகின்றனர். இதில் உள்ள நன்மையை பயன்படுத்தும் அதே நேரம் தீமையினை விரைவாக பயன்படுத்துகின்றனர். இந்த தொழில் நுட்பத்தில் இணையத்தின் செயற்பாடு மிகவும் பிரபல்யம் ஆனது. இதனை தகவல் தொழில் நுட்பத்தில் புரட்சியை ஏற்படுத்தும் நிறுவனமாகிய கூகுள் மிகவும் நேர்த்தியான சேவையினை வழங்குகின்றது. இந்த நிறுவனத்தின் செயற்பாடு மிகவும் உண்மைத் தன்மையாகவும் மிகவும் விரைவாகவும், நேர்த்தியாகவும் வழங்குகின்றது. இதனது இணைய சேவையில் முக்கியமான ஒன்றே ஒன்றினை குறிப்பிட முடியும். Face book என்று சொல்லப்படுகின்ற சமூக வலைத்தள அமைப்பு.

இந்த Face book ஆனது நிறையவே தீமைகளை எமக்கு பெற்று தருகின்றது. இந்த அமைப்பிலே நம்மை இணைத்து கொண்டு மற்றவருடன் பல விடயங்களை பகிர முடியும். அவ் விடயம் நன்மையாகவும் இருக்கலாம், தீமையாகவும் இருக்கலாம். அதாவது முகமே தெரியாத ஒரு நபருடன் தொடர்பினை ஏற்படுத்தி அவரைப் பற்றி சரியான முறையிலே தகவல்களை பெற முடியாமல் அவருடன் பழகி அவர் எப்படிப்பட்ட நபர் என்பதனை உண்மையாக அறிய வாய்ப்பின்றி ஓர் ஆண் பெண்ணுக்கு இடையே பல தவறான பழக்கங்கள் ஏற்பட்டு காதல் என்ற போர்வையில் அவர்கள் தம்மைத் தாமே துஸ்பிரயோகம் செய்கின்றார்கள். இது பின்னைய நாளில் மரணம் வரை கொண்டு சென்று விடுகின்றது. அது மட்டும் இன்றி பெண்கள் பல பல பிரச்சினைகளை இதனால் எதிர்நோக்குகின்றனர். உதாரணமாக தவறான நடத்தைகள், பாலியல் தொந்தரவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவைகளை கூற முடியும். எனவே இந்த கீழ்த்தரமான நடத்தைகள் மூலம் எதிர்காலம் பற்றி சிந்திக்க தவறுகின்றனர். இந்த சமூக வலை அமைப்பு தமது இளைய தலை முறையினை 100% சீரழிக்கின்றது. இதே போன்று இன்னொரு சேவை "Skype" என்று அதாவது முகம் பார்த்து பேசுகின்ற ஒரு சேவை இதனையும் கூகுள் நிறுவனம் மிகவும் நேர்த்தியாக வழங்குகின்றது.

இவற்றினை விட மிகவும் முக்கியமாக எமது இளைய தலை முறையினரை சீரழிக்கும் ஒரு தொழில் நுட்ப சாதனம் கையடக்க தொலைபேசி. மலிவான விலையிலே தரமான வசதிகளைக் கொண்டு உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் கைத் தொலைபேசி நிறுவனங்கள் அனைத்து மக்களையும் பயன்படுத்த வைக்கின்றனர். இதற்கேற்ப தகவல் இணைப்பினை வழங்கும் நிறுவனங்கள் மலிவான கட்டணங்களை கூடுதல் வசதிகளுடன் அறவிடுகின்றது. இது இன்றைய இளைய தலைமுறையினர் கைகளிலே கூடுதல் பிரயோகம் காணப்படுகின்றது. இதனையே ஒரு பாரிய சமூக சீரழிவு ஆயுதமாக ஏற்படுத்த முடியும். தவறான இலக்கங்களுடன் தவறான தொடர்பினை ஏற்படுத்தி தவறான நடத்தையில் ஈடுபடுதல். குறிப்பாக இள வயது ஆண் பெண்கள் இவ்வாறான தொடர்பில் அதிக ஈடுபாடு காணப்படுகின்றது. கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் இது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அதாவது இதன் மூலம் இள வயது திருமணம், இள வயது கற்பம் போன்ற சமூக சீர் கேடு விளைகின்றது. இள வயது திருமணங்கள் குறிப்பிட்ட வயதுடனே மறிவிடுவதனால் பெண்கள் வாழ்வாதாரம் இன்றி தவறான நடத்தைகளில் ஈடுபட தம்மை தயார்படுத்துகின்றனர்.

இந்த கைத்தொலை பேசி மூலம் திருமணமான குடும்பங்கள் மத்தியிலும் பாரிய பிளவுகள் ஏற்படுகின்றன. இதனால் விவாகரத்து வரை செல்ல நேர்கின்றது. இந்த கைத்தொலைபேசி மூலம் எமது இளைய தலை முறையினரைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு சீரழிவில் ஈடுபடுகின்றனர்.

உண்மையிலேயே இந்த தொழில்நுட்ப வளர்ச்சி எமது இளைய தலைமுறையினரை முக்கியமான ஒரு பிரச்சினைக்குள் தள்ளி விடுகின்றது. பாலியல் என்ற பெரிய பிரச்சினைக்கு இது வழி கோலுகின்றது. இதனால் இவர்கள் தமது எதிர்கால கடமைகளை மறந்து தமது எதிர்கால இலட்சியங்களை கைவிட்டு தொழில் நுட்ப வளர்ச்சியில் தீமைகளை அனுபவித்து தம்மைத் தாமே சிரழித்து கொள்கின்றனர்.

எமது கலாச்சாரத்தினை காப்பாற்றும் பொறுப்பு இளைய தலைமுறைக்கு உண்டு எனவே தொழில் நுட்பத்தினை கொண்டு
அதனையும் சீரழிக்காது தம்மையும் சீரழிக்காது தொழில் நுட்பத்தினால் இரண்டினையும் பாதுகாப்போம். நம்மை சீரழிக்கும் தொழில்நுட்பம் வந்தாலும் அதில் நன்மைகளை மட்டும் கொண்டு சீரழியும் இளைய தலைமுறையினரை பாதுகாப்போம். சீரழிக்கும் தொழில் நுட்பத்தினை கை விடுவோம்.

செ.டிலக்சனா
A/L (2014)A
தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையருவி கணபதிப்பிள்ளை

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாவது தமிழ்ப் பேராசிரியாராகவும் கலைப்பீடாதிபதியாகவும் இருந்தவர் பேராசிரியர் கந்தசாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை. தந்தையார் பருத்தித்துறையைச் சேரந்த தும்பளையில் ஆயுர்வேத வைத்தியராக இருந்தார். 1903 ஆம் ஆண்டிலே தோன்றிய கணபதிப்பிள்ளை தம் தந்தையாரின் மேற்பார்வையில் தமிழ் கற்றார். பின்னர் இவர் தும்பளை நான்மறையோன் மகாதேவையா் மத்துக்குமாரசாமி ஐயரிடம் வடமொழியையும் தழிழையும் பழைய மரபுவழி கற்றார். பின்னர் பருத்தித்துறை காட்ளிக்கல்லூரியில் ஆங்கிலம் கற்றுத் தேறினாா். அதன் பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகக் கலைமாணிச் சிறப்புத் தேர்வில் முதலாம் வகுப்பிலே தேறினார்.

புகழ் பெற்ற தமிழறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளையின் மகனும் பல்கலைக்கழக விரிவுரையாளருமான கிங்ஸ்பரி தேசிகரின் பணிப்புப்படி அண்ணாமலைப் பல்கலைக்கழகஞ் சென்று விபுலாந்த அடிகளாா், சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை ஆகியோரிடம் கற்று வித்துவான் பட்டம் பெற்றார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழகம் புகுந்து மொழியியல் விற்பன்னர் இரால்பு இரேணர் என்பாா் வழிகாட்ட ஆராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டம் பெற்றார். 1936 ஆம் ஆண்டில் ஈழம் திரும்பிய கலாநிதி கணபதிப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே சேர்ந்து விரிவுரையாளராய்ப் பணிபுரிந்தாா். ஈற்றில் பேராசிரியராய்ப் பணிபுரிந்தார்.1963 இல் இப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். 1965 ஆம் ஆண்டிலே மறைந்தார்.

பேராசிரியா் க.கணபதிப்பிள்ளை தலை சிறந்த ஆராய்ச்சியாளர், பட்டதாரி மாணவருக்கு ஒப்பில்லாதவழிகாட்டியாகவும் இவர் திகழ்ந்தார். தமிழ் ஆர்வத்தை அப்போதைய மாணவரிடம் பரப்பினார். அதுமட்டன்று, இவர் சிறந்த நாடகாசிரியர், செந்தமிழ்ச் செய்யுள் பலவற்றையும் அவ்வப்போது தீட்டினார். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதினார். மேலைத்தேயப் புனைகதைகளைத் தமிழில் வடித்துக் கொடுத்தார். சிறந்த வானொலிப் பேச்சாளராகவும் இவர் திகழ்ந்தாா். சாசனவியல் ஆராய்ச்சியில் இவருக்குப் பெரும் புலமை இருந்தது. ஈழத்து மக்கள் கலை மறுமலர்ச்சியின் ஈடு இணையற்ற முன்னோடியாக இவர் திகழ்ந்தார். ஆகவே, இவரின் நல்லாசிரியர் இரா.பி.சேதுப்பிள்ளை இவரைக் கலையருவி என அழைப்பதிற் பெருமை கொவார். வற்றாத அருவி போல இவரது கலைப்புலமை பாய்ந்து கொண்டிருந்தது.

பல்கலைக் கழகத்தில் இவர் தொடர்ச்சியாக 29 ஆண்டு நற்பணி புரிந்து வந்தார். ஆகவே இவரின் பல்கலைக்கழகத் தமிழ் மாணவருக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பது பொறுப்பான அலுவல். அவர்களுக்கு தமிழ் தெரியாது. பிரித்தானியப் பேரரசு தன் ஆட்சியை இலங்கையில் நடத்திய காலம் அது. எங்கும் ஆங்கிலம் நடை உடை பாவனைப் பேச்சு எல்லாம் ஆங்கிலமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியான நிலையில் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அந்தக் காலத்துத் தமிழர் நிலையைப் பேராசிரியரே தனக்குரிய பாணியில் தாளித்த சுவையான தமிழில் சொல்வார். பலாப்பழம் உண்பதற்கு மேசைக் கத்தி, கரண்டி, முள்ளுத் தேடியலைந்த மாந்தர் வாழ்ந்த காலம் அது. தமிழைப் போதிப்பதுடன் மட்டும் நில்லாமல் இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் சங்கம் மூலம் தமிழ் ஆர்வத்தையும் தமிழ்ப் பண்பாட்டில் நாட்டத்தையும் ஏற்படுத்தினார். இலங்கைப் பல்கலைக் கழகத்து தமிழ்ச் சங்க ஏடாகிய இளங்கதிர் உருவாக்கத்தில் இவர் முன்னின்று உழைத்தார். தமிழ் நாடகங்களை எழுதிப் பட்டதாரி மாணவர்களைக் கொண்டு நடிக்க வைத்தார். இப்படி இவர் பல்கலைக்கழக மட்டத்தில் புரிந்த பணி சொல்லிலடங்காது.

இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரி முழுமையான பல்கலைக் கழகமாக 1942 இல் மாறியது. இதன் முதலாவது தமிழ்ப் பேராசிரியராக இருந்தவா் முத்தமிழ் வித்தகா் விபுலாநந்த அடிகள் ஆவார். எமது நாட்டின் தேவைக்கு, தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் தமிழ்க் கல்வி நெறிகளை மாற்றியமைக்க விபுலாநந்தருக்கு உறுதுணையாகக் கணபதிப்பிள்ளை நின்று உழைத்தார். பல்கலைக்கழகப் பட்டப் பின்படிப்பிற்குரிய ஆராய்ச்சிகளில் குறிப்பாக ஈழம் பற்றிய ஆராய்ச்சிகளில் மாணவர் ஈடுபட வேண்டும் என்பதை வற்புறுத்தி அதனை நடமுறைக்குக் கொண்டு வந்த பெருமை பேராசிரியர் கணபதிப்பிள்ளையே சாரும். இன்று ஈழத்துப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறைகளிலிருந்து தமிழ்த்தொண்டு புரிகின்ற பேராசிரியா்கள் யாவரும், கணபதிப்பிள்ளை என்ற அச்சிலே வார்த்து எடுக்கப்பட்டவர்கள். இறுதிவரை தம்மைத் தமிழ் மாணாக்கனாகவே கருதி வந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை தாமும் கற்றார், மற்றையோரையும் கற்கும்படி தூண்டினார், வழி நடத்தினார், தாமும் நடந்து காட்டினார். மேற்பார்வை செய்தார். தம்மறிவு மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதே இவரின் குறிக்கோள் தமிழ்ச் சாசனவியல் ஈழத்தில் நன்கு வளர உழைத்தவர் பேராசிரியர் ஆவார்.

ஆராய்ச்சியாளர் நடுவே இவர் பொலிவுடன் திகழ்ந்தார். அதே நேரத்தில் தமிழ் கூறும் நல்லுலகத்துப் பொதுமக்களை இவர் ஒரு போதும் மறந்ததில்லை. மக்கள் இல்லாமல் மொழி இல்லை, பண்பாடு இல்லை என்பது இவரின் கோட்பாடு. ஆகவே, இவர் புதிய துறைகளில் ஈடுபட்டு, தளர்ச்சியுற்றிருந்த தமிழ் அன்னைக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் உழைத்தார். தம் நல்லாசிரியா்களான கிங்சுபரி அடிகளார் (அழக சுந்தரதேசிகர்), விபுலாந்த அகளார் ஆகியோரைப் பின்பற்றி ஆக்க இலக்கிய முயற்சியிலும் பேராசிரியர் ஈடுபட்டார்.யாழ்ப்பாணத்து பருத்தித்துறைக்கே சிறப்பான பேச்சுத் தமிழில் இவர் எட்டு நாடகங்களை எழுதி அரங்கேற்றினார். இவற்றுள் ஆறு நாடகம், இருநாடகம் என்ற பெயரில் அச்சில் வந்தன. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னன் சங்கிலியை நாடக நாயகனாக வைத்து எழுதப்பட்ட நாடகம் சங்கிலி. இதன் நீண்ட முன்னுரை ஆராய்ச்சி மாணவரக்கு அரிய விருந்து. ஈழத்துத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் மத்தியில் இந்த நாடகம் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இரத்தினாவளி என்னும் வடமொழி நாடக மாணிக்க மாலை என்ற பெயரில் மிகவும் நல்ல செந்தமிழில் மொழி பெயா்ந்தார், இந்த நூல் இங்கிலாந்துப் பல்கலைக் கழகத் தேர்விற்குப் பாடநூலாய் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பேச்சுத் தமிழில் நாடகத்தை எழுதிப் புதுவழியை ஏற்படுத்திய பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை இத்துறையில் முன்னோடியாய் இருந்தார் என்ற பாராட்டைப் பெற்றார்.

மெல்லத் தமிழ் இனிச் சாகும் என்று யாராவது பேசினால் அல்லது இந்தக் கருத்துப்படப் பேசினால் பேராசிரியா் கணபதிப்பிள்ளை பொங்கி எழுந்து விடுவாா். புதிய துறையில் எல்லாம் தமிழ் வளர வேண்டும் என்பது பேராசிரியரின் இலட்சிய வெறி. ஆங்கிலேயரின் சிறந்த படைப்புக்களை யாராவது அவ்வப்போது மொழி பெயர்த்து வெளியிட்டால் அந்த முயற்சியை அவா் பராட்டுவாா். ஆங்கில மொழியில் உள்ள உயர்ந்த இலக்கிய நூல்களைப் போல ஐரோப்பிய மொழிகளில் உள்ள சிறந்த படைப்புக்களை எல்லாம் தமிழில் மொழி பெயா்க்க வேண்டும். என்பதை வற்புறுத்துவாா் பேராசிரியர். இதனாலே தான் செருமானிய மொழியில் தியோடர் சுதோம் என்பவர் எழுதிய இம் வென்வே என்ற நூலைப் பூஞ்சோலை என்ற பெயரிலே தழுவி எழுதி வெளியிட்டாா். தபூ என்பவர் பிரஞ்சு மொழியில் எழுதிய இரட்டையா் என்ற நூலை வாழ்க்கையின் வினோதங்கள் என்ற பெயரில் எழுதி அச்சேற்றினார். இத் துறையில் மேலும் உழைக்க வேண்டும் என்பது இவரின் பேரவா. இந்த முயற்சி கைகூடவில்லை. இவரின் தமிழாக்கங்கள்சில கையெழுத்துப் பிரதிகளாகவே முற்றுப் பெறாத நிலையில் இருக்கின்றன.

குழந்தை இலக்கியத்தில் பேராசிரியா் கணபதிப்பிள்ளைக்கு பெரும் ஈடுபாடிருந்தது. பாரதியாரின் பாப்பாப் பாடல்களுக்கு இவா் அருமையான விளக்கம் கொடுப்பார். இலங்கை வானொலியில் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளை அவ்வவ்போது தயாரித்து ஒலிபரப்பி வந்தார். இந்த எண்ணம் பேராசிரியரின் உள்ளத்தில் எப்போதும் கொழுந்து விட்டு எரிந்தது. ஐரோப்பாவைச் சேர்ந்த குழந்தைப் பிள்ளைக் கதையாளர் செய்த முயற்சி யாவற்றையும் பேராசிரியர் பாராட்டுவார்.

அந்தேசன் என்பார் எழுதிய மோகனச் சிறுமி நூலைத் தமிழ் மரபுக்கு ஏற்றவாறு நீரர மங்கையா் என்ற பெயரில் மொழி பெர்த்து வெளியிட்டாா்.இதனைத் தொடர்ந்து சிறுவா்க்கான கதைகளை வெளியிட முயற்சி செய்தார். இது கைகூடவில்லை இதுவும் கையெழுத்துப் பிரதியாகவே இருக்கின்றது.

பண்ணிசை, நாட்டாா் பாடல், கூத்து என்பவற்றிலும் பேராசிரியா் கணபதிப்பிள்ளைக்குப் பெரும் ஈடுபாடிருந்தது. இவர் பெரிதும் விரும்பிக் கற்கின்ற நூல்களில் ஒன்று சிலப்பதிகாரம். சிலப்பதிகார வரிப் பாடலில் பெரிதும் உள்ளத்தைப் பறி கொடுத்தவர் பேராசிரியர். இந்த பாடல்களைப் பின்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எழுதிய பாடலில் ஒன்று.

கருவிழிகள் தனை நோக்கிக் காதலினாற் கட்டுண்டு
சிறுமிநின தழகினிற் சிக்கினேன் காணென்றாய்
சிறுமியென தழகதனிற் சிக்கிநின்றா யாமாகில்
திருவினையா யென்றழைத்துச் சேர்ந்தெனை நீ அணைப்பாயே.

அண்ணாவிமார், கூத்துப்புலவர் ஆகியோர் எல்லோரையும் பேராசிரியர் பாராட்டுவர். நாட்டார் பாடல்களை இழிசனர் வழக்கு என எள்ளி நகையாடியவர் வாழ்ந்த காலம் அது. நாட்டார் இலக்கியம் மக்கள் கலை,கூத்து என்பவற்றில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் கணபதிப்பிள்ளை. ஈழத்திற்கே சொந்தமான கண்ணகி வழக்குரையை 1953 ஆம் ஆண்டிலே வார இதழ் ஒன்றில் தொடர்ச்சியாக வெளியிட்டார். ஆனால் அத்தொடர் நிறைவு பெறவில்லை. மக்கள் கலைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. இவரின் ஆர்வத்தினால் தூண்டப் பெற்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் இந்த நாட்டு மக்கள் கலைக்கு ஆற்றிய தொண்டு இன்று நாடறிந்த அலுவல். தனித்தமிழ் இயக்கம் ஈழத்திற் பரவ வேண்டும் என்பதற்காகப் பலத்த எதிர்ப்பும் இருந்தது. கணபதிப்பிள்ளை என்ற பெயரை மாற்றி ஈழத்து குழு இறையனார் என்ற பெயரில் கட்டுரை, செய்யுள் பலவற்றையும் எழுதினார். நாடகப் பாத்திரங்கள் என்பதை நாடகத்துள் வரும் ஆடவர் அரிவையா என எழுதுவார். தம் ஆக்கங்களில் இயன்ற அளவு வடமொழிச் சொற்களை விலக்குவார். மேலை நாட்டுச் சொற்கள் யாவும் செந்தமிழ் வடிவம் பெற வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர். இதனைக் கடைப்பிடிக்க அவர் பெரிதும் முயற்சி செய்து வந்தார்.

தமிழ்ப்புலவன் ஒருவன் வாழும் போதே அவனைப் பாராட்ட வேண்டும். இறந்த பின்னர் இந்திரனோ சந்திரனோ என்பதிற் கருத்தில்லை என்பது பேராசிரியரின் தளராத நம்பிக்கை. இதற்காக இவர் பெரிதும் உழைத்தார். பல எடுத்துக் காட்டுக்களைத் தரலாம். ஆனால் அவற்றுள் மூன்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம். திருவாசகத்துக்கு உரை கண்டு கொண்டிருந்த வெண்ணெய்க் கண்ணனார் நவநீத கிருட்டின பாரதியாரைப் பாராட்டும் விழாவிலே இவர் கலந்து கொண்டார், ஐயரை வாயார வாழ்த்தினார். பண்டிதமணி இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை எழுதிய இலக்கிய வழி என்ற நூலைப் பல்கலைக் கழகப் பாடநூலாக்கிய பெருமை பெரிதும் பேராசிரியரையே சாரும். அதுமட்டுமன்று சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியர் எழுதிய சக்கரவர்த்தித் திருமகன் என்னும் நூலைப் பல்கலைக் கழகப் பாடநூலாகச் சேர்த்து அந்தப் பேரறிஞரை அவர் வாழும் போதே பாராட்டினார் பேராசிரியர்.

ஈழத்துத் தமிழியல் ஆராய்ச்சி மேலும் வளர வேண்டும் என்பதில் பெரிதும் ஈடுபாடுடைய பேராசிரியர். தாமும் ஆராய்ந்து எழுதினார். மற்றவரையும் ஆராய்ந்து எழுதும் படி தூண்டினார். கிட்டதட்ட40 ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பல்வேறு இதழ்களுக்கு அவ்வப்போது எழுதினார். இவற்றுள் வையாபாடல் வசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று. ஈழத்துத் தமிழர் வாழ்வை ஆராய இந்த வெளியீடு பெரும் உதவியாய் இருந்தது. பன்மொழிப் புலவரான இவருக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், சிங்களம், பாளி, வடமொழி, தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய மொழிகள் நன்கு தெரியும். அதனுடன் வேத, ஆகம கால வடமொழியில் இவர் விற்பன்னர்.இந்தப் புலமை காரணமாய் மொழியியலை, சாசன இயலை நன்கு கற்றுத் தேறினார். மாணவருக்கும் திறம்படக் கற்பித்தார். கலாநிதிப்பட்ட ஆராய்ச்சிக்கு இவர் இலண்டன் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பித்த கட்டுரை ஆழ்ந்த புலமை வாய்ந்தது. இதனை முன்னோடியாகக் கொண்டு பின்வந்தவர்கள் ஆராய்ந்தனர். இது தட்டச்சுப் பிரதியாகவே இன்றும் இருக்கிறது, அச்சிலே வரவில்லை. இந்த அரிய ஆராய்ச்சி மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் அமைந்தது.

பா இயற்றுவதில் இவர் கை தேர்ந்தவர். காலத்திற்குக் காலம் அரிய பாடல்களை யாத்தார். இவர்எழுதியவற்றுள் அச்சில் வந்தவை காதலி ஆற்றுப்படை, தூதுவும் மலரே என்பன. இக்கால வாழ்க்கையைச் செந்தமிழ் மரபையொட்டிப் படம் பிடித்துக் காட்டுவது காதலி ஆற்றுப்படை. துவுதும் மலரே என்னும், தொகுப்பு நூலில்முக்கியமானவை கதைப்பாடல்கள். அவை சீதனக்காதை, விந்தைமுதியோன், தீவெட்டிக்கள்ளர் இன்னும் பல பாடல்கள் ஈழத்துத் தேசிய இதழ்களில் வெளிவந்தவை. வெளிவந்து எல்லோர் பராட்டையும் பெற்றன. தம் நல்லாசிரியராம் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் வழிநின்று இயல், இசை, நாடகம் ஆகியவற்றைவளர்க்க இவர் செய்த அரும் பெரும் முயற்சி போற்றப்பட வேண்டியது. சங்கப் புலவர் ஈழத்துப் பூதன் தேவனார். தொடக்கம் பேராசிரியர் சு.வித்தியானந்தன் வரை தமிழ் வளர்த்த பரம்பரை ஒன்று எமது நாட்டிலே இருக்கின்றது. இந்தத் தமிழ் மணிகள் வரிசையில் தான் தமிழ் அருவியெனப் பாய்ந்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை.

வற்றாத அருவி போல, கலையருவியாக, பண்பு நிரம்பிய மனித அருவியாக ஓடிக் கொண்டிரந்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை. இந்தக் கலையருவிக்குத் தன்னலம் இல்லை, தமிழ் நலம் மட்டுமே இருந்தது. ஆடல் வல்லான் மீது பெரும் அன்பு கொண்டவர் இவர். பிறர் போற்றுவதையும் தூற்றுவதையும் பொருட்படுத்தாமல் தமிழ்ப் பணி செய்து வந்தார். 1968 ஆம் ஆண்டு மறைந்தார். தன்டக்கமாக வாழ்ந்து தமிழ்ப் பூங்காவை வளம்படுத்திய அருவி வற்றியது. ஆனால் அதன் கலைப் பெருக்கு ஒருபோதும் வற்றவில்லை. இந்தப் பெருக்கு அவர் ஆக்கித் தந்த மாணவர் பரம்பரை மூலம் ஓடிக் கொண்டே இருக்கின்றது.

ச.விஜயசாந்தி.
12B.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் மலர்ந்திட

சுதந்திரம் கிடைத்திட வேண்டும் வாழ்வினிலே
அதற்காய் போராடு நீ உன் தேசத்திலே
சமாதனம் மலர்ந்திட விழித்திடு பாரினிலே
ஜென்மங்கள் சென்றாலும் முயன்றிடு பூமியிலே

இழந்தோம் வாழ்வில் எம் இன்பங்களை
அடைந்தோமே நிதமும் நாம் அவலங்களை
நம்பிக்கை இழந்தோம் இந்த நாளினிலே
பரிதவித்தோம் நாமும் இந்த பாரினிலே

சிறகடித்த சிறுவர்கள் சிறகுடைந்து போனார்கள்
இன்பமான இளைஞர்கள் துன்பங்கள் அடைந்தார்கள்
மூத்தோரின் மொழிகள் யாவும் பயனற்றுப் போனது
சுதந்திரம் அற்ற இந் நாட்டினிலே

பட்டாம் பூச்சிகளின் பரவசங்ளும்
பூத்துக் குலுங்கும் பூக்களின் புன்னகையும்
இளந் தென்றலின் மெல்லிய ஓசைகளும்
சுதந்திரம் அற்ற தேசத்திலே முடங்கிப் போனது

விளித்தெழுவோம் பாரினிலே சுதந்திரம் கிடைத்திடவே
துளிர் விட்டு எழுந்திடுவோம் இம் மண்ணினிலே
இப் பூமியிலே சமாதானம் நிலைநாட்ட
வேரூன்றி எழுந்திடுவோம் மானிடராகிய நாம்.

நன்றி

இ.ஜெனீஸ்ரா
12A(2014)
யா/வைத்தீஸ்வரா கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தில் பெண்கள் பங்கு

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பெண்களின் பிறப்பையே பெரும் பேறாக பாடினார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. சமூதாய முன்னேற்றத்தில் ஆண்களை காட்டிலும் பெண்களுக்கே பெரும்பங்கு காணப்படுகிறது. சமூதாயத்தில் ஆண்களை காட்டிலும் பெண்களுக்கே பொறுமையும் பணிவும் காணப்படுகிறது. முற்கால மக்கள் பெண்களுக்கு தம் வாழ்வில் தனியிடமளித்துள்ளனர் என்பதை சங்ககால நூல்கள் அழகாக விளக்குகின்றன. ஔவையார், காக்கைப்பாடினியார் போன்ற பெண்பாற் புலவர்கள் சமூதாயத்துக்காவும் சமூதாய நலனுக்காகவும் பெரும் தொண்டாற்றினார்கள்.

இறைவன் படைப்பில் ஆண் பெண் இருபாலருமே சமமே. ஆண்கள் உயர்ந்தவர்கள் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்று பேசுவதே ஒரு இழிவான செயலாகும். அன்பின் பண்பே பெண்மை ஆகும். அறத்தின் வடிவமே பெண்மை. கற்பின் உயர்வே பெண்மை எனவும் பெண்ணின் பெருமையை மிக அழகாக பலரும் கூறியுள்ளார்கள். வாழ்க்கைத் துணைவியாகவும் வாழவைக்கும் தாயாகவும் விளங்குபவளே பெண். அவ்வாறான பெண்களுக்கு இணையாக யாரையுமே கூறமுடியாது.

இதற்கு இடைநிலையில் சிலபிரதேசங்களில் பெண்களை இழிவாக எண்ணி பெண்குலமே தாழ்வுற்றது எனவும் கூறப்பட்டு வந்தது. அதுமாத்திரமல்லாது. பெண்ணடிமை நிலைகூட உருவாயிற்று. பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டிவைக்கும் நிலமை உருவாயிற்று. அக்கால ஆண்கள் "அடுப் பூதும் பெண்ணுக்கு படிப்பதற்கு" என்றும் பெண்புத்தி பின்புத்தி என்றும் கூறினார்கள்.

இந்நிலைமையை முற்றாக அழித்தொழிக்கப் பெரும் கஷ்டப்பட்டார் பாரதியார். அவர் இவ்வாறு பெண்களுக்காக பேராடியதும் பெண்ணுரிமை கிடைக்கபட்டது. இதன் மூலம் பெண்கள் வளர்ச்சி கண்டனர். கல்வியிலும் ஈடுபட்டனர்.

இன்று பெண்கள் சகல துறையிலும் ஆண்களுக்கு இணையாக பங்கு கொள்கிறார்கள். சமூதாயத்தில் வேறு பிரச்சினையிலும் ஈடுபடல் வேண்டும். "ஒவ்வொரு ஆணின் முன்னேற்றமும் ஒரு பெண்ணால் என்பர்" இதிலிருந்து ஆண்களின் முன்னேற்றத்திற்கு பெண்களே உதவுகின்றனர் என அறிய கூடியதாய் உள்ளது. எனவே ஆடவர் முன்னேற்றம் பெண்களாலேயே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டிலை ஆட்டும் கையே உலகம் ஆளும் கை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சில நாடுகளை பொறுத்த வரையில் பெண்களே முன்னிலையில் இருக்கிறார்கள். ஜனாதிபதி முதல் உயர் நீதிமன்றம் வரை, பல்கலைக்கழகம் தொட்டு பாடசாலை வரை, பாராளுமன்றம் தொட்டு உள்ளூராட்சி சபைகள் வரை, அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் காணப்படுகின்றனர்.

இத்தகைய சிறப்புகள் காணப்பட்ட போதிலும் பெண்களுக்கு எதிராக சில சவால்கள் முன்னெடுக்கப்பட்டன. வரதட்சனை எனும் சீதனக் கொடுமையால் கன்னியர் பலர் கண்ணீருடன் காலம் கழித்திடும் அவநிலையுள்ளது. பெண்களை வெறும் போதைப் பொருள் வியாபார பொருளாகவும் சிலர் நடத்துகின்றனர். இந்நிலை மாற வேண்டுமெனின் சமூகம் விழிப்புற வேண்டும். இதன் மூலம் பெண்களும் சமுதாய முன்னேற்றத்திற்காக பலபணிகளை புரிவார். நமது நாடு வளம் பெற நங்கையர் வாழ்வு சிறப்புற சமுதாய முன்னேற்றத்தில் பெண்கள் பெரும் பங்கேற்க வேண்டும்.

இன்று எல்லா பெண்களுமன்றி சிலர் தமது அறிவாலும் ஆற்றலாலும் உழைப்பாலும் முன்னேறி வருகின்றனர். ஆண்களுக்கு நிகராக சமூதாயத்தில் அங்கம் வகிக்கிறார்கள். இத்தகைய மகளிரின் பங்கு சமுதாய முன்னேற்றத்திலும் இடம்பெற வேண்டும். இதனால் பெண்கள் வாழ்வும் நாடும் சமுதாயமும் வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

அ.யோகேஸ்வரி
தரம் 12B
2014 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் கவிஞர் பாரதிதாசன்

தமிழ் மொழி தன்னிகரற்றது. உலகம் போற்றும் செம்மொழிகளில் ஒன்று. அதனை வளம்படுத்தியவர்கள் நாவன்மை மிக்க நல்லறிஞர்களும், கவிஞர்களும் என்றால் அது மிகையல்ல. தமிழ்மொழிக்கும் சமுதாயத்திற்கும் ஏற்றம் தரும் கருத்துக்களைக் கவிதை மூலம் விழிப்புணர்வு பெறப் பாடியவர்களில் குறிப்பிடத்தக்கவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவரே நான் விரும்பும் நற்றமிழ்க் கவிஞர் ஆவார்.

"தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிரக்கு நேர்". என்று முரசு கொட்டியவர் பாரதிதாசன். புதுவை தந்த புரட்சிக் குயில் அவர். பாரதிதாசன் தமிழே வடிவானவர். தமிழின் உயர்வுக்காக வாழ்நாள் முழுதும் உழைத்தவர். தமிழ் வளம் பெற, தமிழன் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டியவர். தமிழ் நாட்டைப் பெருமைப்படுத்திய பாரதியின் எண்ணங்களை தம் இதயங்களில் ஏற்றியவர். எளிய தமிழ் எண்ணற்ற கவிதைகள் படைத்தவர். அவரது வாழ்வும் பணியும் தமிழ் நலம் விரும்புவார்க்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

பாவேந்தர் பாரதிதாசன் 1891ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் புதுச்சேரி என்னும் இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம். பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தமது பெயரை பாரதிதாசன் என ஆக்கிக் கொாண்டவர். இளமைப் பருவத்தில் தமிழும், பிரெஞ்சு மொழியும் கற்ற இவர் தமிழ்ப் பற்றும், தமிழின உணர்வும், கல்வியாற்றலும் மிக்கவராக விளங்கினார். தமிழே உயிர் மூச்சாகக் கொண்டவர். மொழியறிவு, இசையுணர்வு சமுக சீர்திருத்தச் சிந்தனை என்பன அவரைப் புரட்சிக் கவிஞராக மாற்றின. பாரதியார் முன்பு கவிதை பாடும் வாய்ப்பினைப் பெற்றவர். வேறு எவரும் பெற்றிராத பாராட்டையும் மதிப்பையும் பாரதியாரிடம் பெற்றவர். தமக்கெனக் கவிஞர் பரம்பரை ஒன்றினையே உருவாக்கியவர். வாழையடி வாழையெனக் கவிஞர் அணி இன்று பெருகுகின்ற தென்றால் அப்பெருமை பாரதிதாசனுக்கே உரியது.

பாவேந்தரின் சொல்லும், சொல்லாட்சியும், நடையும், உத்திகளும், உவமைகளும், உருவகங்களும் வித்தியாசமானவை. அவை அவருக்குப் பின் தோன்றிய கவிஞர்கள் அனைவரையும் பாதித்துள்ளன. அவரது படைப்புக்களில் மிக முக்கியமான பங்கு வகிப்பவை சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் தான் சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் மூடநம்பிக்கைகள் அறியாமை, ஏழ்மை, பெண்ணடிமை, தீண்டாமை, சாதி, மதப்பூசல் ஏற்றத்தாழ்வுகள் ஆகியன பல்வேறு சமுதாயத் தீமைகளைத் தன் கவிதை வரிகளால் பொசுக்கித் தள்ளியவர். விதவைகளின் மறுமணத்திற்கு வித்தூன்றியவர் "வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?" என வினவி விதவை மறுமணம் செய்ய வேண்டுமென்று பாடினார். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்னும் மூட ம்பிக்கையை எரித்தவர். பெண்கல்வியை வலியுறுத்தியவர்

கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம் - அங்கே புல் விளைந்திடலாம் - நல்ல புதல்வர்கள் விளைவதில்லை, எனப் பாடிப் பெண்கல்வியின் அவசியத்தை வலியுத்தியவர். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவின்றவர். சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் நடைபெறும் கொடுமைகளைத் தன் கவிதைகளால் சாடியவர்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே" என உளம் வருந்திப் பாடியவர் இவ்வாறு இனம், மொழி, சமுதாயம் அனைத்தும் செழித்திட வேண்டுமெனக் கவிமழை பொழிந்த புரட்சிக் கவிஞரே என் உளம் கவர்ந்த கவிஞராக விளங்குகின்றார்.

"சாவினும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என் சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்னும் கொள்கை கொண்டவர் புரட்சிக் கவிஞர். காதல், இயற்கை, அழகு போன்ற மென்மையான விடயங்களையும் தன் கவிதைப் பூக்களால் அழகுற மாலையாக்கியவர். அவரது விடுதலை வேட்கை ததும்பும் பாடல்கள் கோழைகளையும், வீரவேங்கைகளாக்கும் வன்மை மிக்கன.

அவர் படைத்த நூல்கள் படிப்போர் உள்ளங்களை ஈர்க்கும் தன்மை மிக்கன. அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேரதாண்டவம், இளைஞர் இலக்கியம், பிசிராந்தையார், தேனருவி, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திரட்டு, பாரதிதாசன் கவிதைகள் ஆதியாம் நூல்கள் அவர்தம் புகழ் பரப்பும் படைப்புக்கள், பாவேந்தர் படைப்புக்கள் அனைத்தையும் தமிழ் நாடு அரசு தற்போது நாட்டுடைமை ஆக்கியுள்ளது. இதன் மூலம் பட்டி தொட்டி எங்கும் பாவேந்தரின் கவிதைகள் பரவ வழி பிறந்துள்ளன.

பாரதிதாசன் கருத்துக்கள் புரட்சிக்கரமானவை. அவை படிப்போரின் உள்ளங்களில் விழிப்புணர்வை உருவாக்கவல்லன. "புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடும் சாய்ப்போம்" என முழக்கமிட்டவர் பாவேந்தர். அவரது பாடல்கள் ஒவ்வொன்றும் நம் இதயத்தை ஈர்ப்பன.

"ஆதி மனிதன் தமிழன் தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த் தேன்
மூதறிஞர் ஒழுக்க நெறிகள்
முதலிற் கண்டதும் தமிழகம்தான்
காதல் வாழ்வும் புகழ் வாழ்வும்
கட்டியதும் தமிழ் நான் மறை தான்
ஓதும் அந்தத் தமிழ் நான்மறை
உலகம் போற்றும் முத்தமிழ் தான்.

என முழங்கியவர் பாரதிதாசன். அவர் தரும் புரட்சிகரமான கருத்துக்கள் சமுதாயத்திற்கு நல்வழி காட்டுவன. அவை தமிழர் தம் இல்லமெங்கும் அவர் தம் இதயமெங்கும் இடம்பெற வேண்டும்.

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் மனித சமுதாயத்தின் உயர்வுக்கும் இறுதிவரை அருந்தொண்டாற்றிய பாவேந்தர் பாரதிதாசன் நாமம் நற்றமிழ் உள்ளவரை நானிலமெங்கும் நின்று நிலைக்கும் என்பது திண்ணம். பாவேந்தர் நாமம் வாழ்க! வாழ்கவென வாழ்த்துவோமாக!.

பா.சுகபாதுரி
தரம் 12B
2014 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களில் தோன்றும் விடியல் பாதை.

விடிந்தும் விடியாதது போன்று அன்று பொழுது மலர்ந்தது. செவிகளில் குருவிகளின் "கீச்" கூறலுக்குப் பதிலாக அச்சிறுமி தினமும் கேட்பது "ட்ரும் ட்ரும்" என்னும் மோட்டார் வாகனங்களின் சத்தமும், பெரிய கனரக வாகனங்களின் ஒலியுமே! அவளது வீடு ரோட்டின் அருகே காணப்படும் சிறிய வீடாகும். அவள் வீட்டுக் கூரைகள் உடைந்த சீற்றுக்களால் பொருத்தப்பட்டிருந்தாலும் அவ்வீட்டின் ஓட்டைகளை மறைப்பதாக தாயின் தொழில் உபகரணமான இட்டலிச் சட்டியே அதில் கவுக்கப்பட்டிருக்கும் அளவுக்கு அது ஒரு பதிந்த சிறிய வீடு. அதன் திண்ணையில் உட்கார்ந்து இருக்கும் அவளின் கண்கள் தூரத்தில் வேலியின் ஓரமாக வீசப்பட்டிருக்கும் சாராயப் போத்தல்களையே வெறித்துப் பார்த்த வண்ணம் உள்ளன. இந்த ஆண்டில் புலமைப் பரீட்சை எழுத இருக்கும் சர்மினியே அந்தச் சிறுமி. சர்மினியின் தந்தை ஒரு குடிகாரன். சர்மினிக்கு அண்ணன் துளசியும் அக்கா ராகினியும் என்று அவளது குடும்பம் ஒரு சிறிய குடும்பம். தாய் இட்டலி, இடியப்பம் என பலகாரங்கள் செய்து நகர்ப்புறச் சிறிய கடைக்கு கொடுத்து அந்த வருமானத்தை வைத்தே குடும்பத்தை காப்பாற்றுகிறார். இவ்வளவு பிரச்சனையையும் அந்த 10 வயது சிறுமியான சர்மினி அறிந்திருந்தாள்.

"ஏன்டி, சர்மி பள்ளிக்குப் போகல, நேரமாச்சுதே, வெளிக்கிடாம இருக்கிறாய்" என்று கூறிக் கொண்டு தனது இரட்டையடையும் நேர்த்தியாக இருக்கின்றதா? என சரி பார்த்தாள் ராகினி. கறுப்பிலும் கவர்ச்சியானது அவளின் நிறம். மெலிந்து, வளைந்து அழகோடு காணப்படும் உடல் ராகினிக்கு இன்னும் அழகு சேர்க்குது. அவளின் இமைகள் ஆறுகள் சங்கமிப்பது போல இணைந்திருக்கும். அவளது கண்களுக்கென்ன குறை. கவர்ச்சியின் இருப்பிடம் என்றே கூறலாம். இத்தகைய அழகைக் கொண்டு விளங்கும் ராகினி O/L பரீட்சைக்காக தயாராகும் மாணவி. தன்னைவிட தனது தங்கை ரொம்பவும் கெட்டிக்காறி என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும். இன்று எதனால் புரியவில்லை. சர்மினியின் அருகே உட்கார்ந்து கொண்டாள் "சர்மிக்குட்டிக்கு என்ன நடந்தது? ஏன் நாடில கைவச்சுக் கொண்டு இருக்கிறியள்"? என்று செல்லமாக உறவாடினாள் ராகினி. அக்கா நான் கொலசிப் புக்கொன்று வாங்க வேண்டியிருந்தது, அதோட பாடசாலையிலும் பரீட்சைக்காசுகள் கட்ட வேணும் அப்பா அம்மாட்ட இருந்த காசயெல்லாம் புடுங்கிட்டுப் போயிட்டார். எனி அதுக்கு சாராஜம் வேண்டிக் குடிச்சிட்டு வந்து பகல் தொடக்கம் இரவு வரையும் சண்டை பிடிப்பார்," என்று நீட்டிக்கதை சொல்லி அழ ஆரம்பித்தாள். "இங்கபார் சர்மி அம்மாட்டச் சொல்லி எப்படியாவது இந்த வாரத்துக்க காசை வேண்டித்தாறன் அழாமல் போ என்ன!" என்றாள் ராகினி.

சில சமயம் ராகினிக்கு நான் படிப்பதை விட்டுவிட்டு ரவுணுக்கு எங்கையாவது ஒரு கடையில் போய் வேலை செய்வோமோ என்று சிந்தனையோடும் திடீரென அவளது அப்பா அந்த சிந்தனையிலும் குடித்து விட்டு வந்து கலாட்டா செய்வது போன்று தோணும். "ச்சா... இது என்ன வாழ்க்கை படிக்கவும் வழியில்ல, வேலைக்குப் பொகவும் வழியில்ல, பேசாம செத்துப் போகலாம்" என்று தன்னுள் எண்ணிக் கொள்வாள். வீதியில் அவள் நடந்து பாடசாலைக்குச் செல்லும் போது இவ்வாறான சிந்தனையே ஓடும். தனது தங்கையைப் பற்றியும், தனது அண்ணனான துளசி பற்றியும் சில சமயம் சிந்தனை செல்லும். அவன் O/L ஐ நிறுத்திவிட்டு கறாச் வேலைக்குச் செல்கிறான். அவனின்ரை காசே போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தைக் கவனிக்க. ஆனால் அவன் தான் சம்பாதிக்கும் காசுக்கு கடையில் சாப்பிட்டுவிட்டு, கமராபோன் ஒன்றையும் வாங்கி, அதற்கு காசு போடுவதும் பாட்டுக் கேட்பதும், தகாத சிநேகிதருடன் தொடர்பு கொண்டு தகப்பனைப் போன்றே "பிஸ்கி, பிராண்டி மற்றும் சிகரெட்" பழக்கத்துக்கும் அடிமையாகி விட்டான். இப்போது அவனின் கனவு "பெரிய கீரோ கொண்டா" எடுக்க வேண்டும் என்பதே. இவனிடம் காசு கேட்டால் சர்மிக்குத் தர மாட்டானா? கேட்டுப் பார்ப்போம் என்று நினைத்துக் கொண்டு பாடசாலையை முடித்து வீடு திரும்பினாள்.

அண்ணன் வரும் வரையும் வாசல் கதவையே எதிர்பார்த்துக் காத்திருந்தாள். சைக்கிள் சத்தம் கேட்கும் போதெல்லாம் வாசலை எட்டிப் பார்த்தாள் ராகினி. "என்னக்கா இன்று வாசலை எட்டிப் பார்த்துக் கொண்டு இருக்கிறாய், அண்ணா ஏதும் வாங்கி வருவான் என்றா? முதல் என்றா சொல்லலாம்இப்ப அவன்ற கனவே வேற" என்றாள் சர்மி. "பேசாம புத்தகத்தைப் படி" என்றாள் அக்கா. அவர்களின் வீடு இரவானால் மண்ணெண்ணை விளக்கால் தான் ஒளி பரவுவது வழக்கம். திடீரென அண்ணன் வரும் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள். துளசி சான்ரைத் தட்டி சைக்கிளை விட்டுவிட்டு வீட்டக்குள் நுளைந்தான். அதற்குள் ராகினி, துளசி குளிப்பதற்கு துவாய், சவுக்காரம் என எடுத்து நீட்டினாள். துளசிக்குப் புரிந்து விட்டது ராகினி தன்னிடம் உதவி கேட்பதற்காகவே இன்று இவ்வளவு கரிசனையாக இவ்வளவும் செய்கிறாள் என்று! தாயிடம் காசு கொடுக்கா விடினும் ராகினி கேட்டால் துளசி காசு கொடுப்பான். அவன் தகப்பனைப் போன்று அவ்வளவு அரக்கன் அல்ல. "ராகினி எவ்வளவு வேண்டுமோ சேட் பொக்கட்டில் எடு" என்றான். அவள் "அண்ணா 600/= காசு தேவை" என்றாள். சிறிது தயங்கி விட்டு பின்பு "பரவாயில்லை எடு" என்றான் துளசி. சந்தோஷத்துடன் காசை எடுத்து சர்மியிடம் கொடுக்க, அவள் தனது கொம்பாஸில் வைத்தாள். அதை திருடனை விட மோசமான தகப்பனின் கண்ணில் தெரிந்து விட்டது. 50ரூபா, 100ரூபா என பார்த்தவர் அந்தப் பணத்தை சிறிதும் அஞ்சாமல் விடிவதற்குள் எடுத்துச் சென்று விட்டார்.

பொழுது விடிந்தது, பள்ளிக்கு குதூகலத்துடன் வெளிக்கிட்ட சர்மி காசைப் பார்த்தாள். பொக்ஸ்ஸில் அதை காணவில்லை. விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ராகினி தங்கையின் அழுகைக்கான காரணத்தை அறிந்து கொண்டாள். சிறிதும் தாமதியாது சினமும் தொட, கண்ணீரும் மல்க, விடியாத வாழ்வில் படும் துன்பத்தை எண்ணி அருகே கிடந்த மண்ணெண்ணைப் போத்தலில் இருந்த ஐந்து லீற்றர் எண்ணெய்யையும் தலையில் ஊற்றிக் கொண்டு, தனது கறைபடியாத வெள்ளை உடையில் தீக்கறையைப் பற்ற வைத்தாள். தீயில் அவள் கருக, தங்கையின் கூக்குரல் வானத்தை எட்டி ஊரே வீட்டை சுற்றி வளைத்து வேலி போன்று நின்றன. தாயின் முயற்சியும், சர்மியின் முயற்சியும் பயன் அளிக்கவில்லை. ராகினியின் கண்கள் சர்மியைப் பார்த்த வண்ணமே நிலைத்து நின்றன. அதில் தெரிவது நன்றாக சர்மிக்கு எதிர்காலம் அமைய வேண்டும் என்ற வேண்டுகோளா? என்பது அதில் சுற்றி நிற்கும் சனக்கூட்டத்துக்கு இன்றும் புரியாமலா இருக்கும்.

நன்றி.

பு.தாரணி.
A/L (2012)
கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் தனித்தவமான இலக்கியப் பண்புகள்

மக்கள் வாழ்ந்த நில அமைப்பிற்கு ஏற்ப அவர்களுடைய பிரதேசங்கள் ஐவகை நிலங்களாக பகுக்கப்பட்டு, மக்கள் வாழ்க்கை முறை, பண்பாடு என்பவற்றிற்கேற்ப அகப்புற ஒழுக்கங்கள் வகுக்கபட்டுள்ளன. நிலவமைப்பு, வாழ்க்கைமுறை அகப்புறச் சூழ்நிலை என்பவற்றின் பொருத்தப்பாட்டு மிகுதியால் ஒரு நிலத்தில் எவ் ஒழுக்கம் அதிக சொல்வாக்கை பெறுகின்றதோ அவ் ஒழுக்கம் அந்நிலத்திற்குரியதாகக் கொள்ளப்பட்டது. ஐவகை நிலங்களுக்கும் உரிய ஐவகைக் காதல் ஒழுக்கங்களாக குறிஞ்சிக்கு புணர்தல், முல்லைக்கு இருத்தல், மருதத்திற்கு ஊடல், நெய்தலுக்கு இரங்கல், பாலைக்கு பிரிதல் என்பனவாகும். இதே போன்று ஐவகை நிலங்களுக்கும் உரிய ஐவகை போர் ஒழுக்கங்களாக குறிஞ்சிக்கு வெட்சி, முல்லைக்கு வஞ்சி, மருதத்திற்கு உழிஞை, நெய்தலிற்கு தும்பை, பாலைக்கு வாகை என்பனவாகும்.

மக்கள் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்ட இக்கால இலக்கியங்கள் அவர்கள் வாழ்கையை பொருளாகக் கொள்ளும் போது அகத்தினை, புறத்தினை என அமைத்துக் கொண்டன. அகம் என்பது காதலொழுக்கமும். புறம் என்பது காதல் தவிர்ந்த போர், வீரம், நிலையாமை, கொடை என்ற புறவொழுக்கங்கள். ஆனால் இங்கு போரும் வீரமுமே சிறப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால கட்டங்களில் தோன்றிய எவ்விலக்கியங்களிலும் சிறப்பிக்கப்படவில்லை இதனால் சங்கப்புறத்திணை என்றால் போர் ஒழுக்கமாகவே கொள்ளக் கிடக்கின்றது.

ஒத்த அன்பான காதலனுக்கும் காதலிக்கும் இடையிலான காதல் ஒழுக்கத்தைப் புலவன் கூறும் போது ஒருவர் பெயரை சுட்டாது கூறுவதும் சுட்டிக் கூறுவதும் உண்டு. ஒருவர் பெயரை சுட்டிக் கூறாப்பாக்களே அகத்திணைக்குரியவையாகக் கொள் ளப்பட்டன. எடுத்துக்காட்டாக குறுந்தொகையில் அமைந்த

> "ஞாயும் யாயும் யாராகியாரோ
> எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்
> யானும் நீயும் எவ்வழி அறிதும்
> செம்புலப் பெயல் நீர் போல
> அன்புடை நெஞ்சம்தான் கலந்தனவே".

என்ற பாடலில் தலைவன் தலைவியர் நான், நீ எனக் கூறப்பட்டுள்ளனரே தவிர பெயர் குறிப்பிடப்படவில்லை.

பெயர் குறிப்பிடப்பட்டு பாடப்பட்ட காதல்ப்பாக்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திணையில் இருந்து பிரிக்கப்பட்டு புறத்திணையில் வைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக நக்கீரர் பாடிய "நெடுநல் வாடை" இருத்தலாகிய அகத்திணை ஒழுக்கம் கூறுகின்றது. எனினும் புலவர், தாம் வாழ்ந்த காலத்தில் ஆட்சி புரிந்த பாண்டியனைத் தலைவனாகவும், பாண்டிமாதேவியைத் தலைவியாகவும் வைத்துப் பாடியுள்ள குறிப்பு உள்ளதனால் அது புறத்திணையில் வைக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி நிலத்திற்குரிய புணர்தல் என்னும் காதலொழுக்கம் இக்கால இலக்கியங்களில் சிறந்ததொரு நாடகமாக அரங்கேற்றப்படுகின்றது. வேட்டை மேல் மனங்கொண்ட காளையரும் திணைப்புனம் காத்து நின்ற கன்னியரும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்வர். தோழி, பாங்கன், செவிலி, நற்றாய் இவர்கள் மூலமாக காதல் பயிர் வளரும் பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாவுதல் என்பனவும் நிகழ்கின்றன. இப்புணர்தல் ஒழுக்கம் இருவகையாக அதவாது கற்பொழுக்கம், களவொழுக்கம் என பகுத்தும் பாடப்பட்டுள்ளன. தலைவன் தலைவியை முதன் முதலாக சந்தித்த இயற்கைப் புணர்ச்சி முதலாக வரைவு கடாவுதல் ஈறாகவுள்ள யாவும் களவொழுக்கத்தின் பாற்பட்டன. மணந்து கொண்டபின் நிகழ்வன யாவும் கற்பொழுக்கத்தின் பாற்பட்டன.

அன்பின் ஐந்திணையுள் அடங்காத ஒழுக்கங்கள் கைக்கிளை, பெருந்திணை என இரண்டாக வகுக்கப்பட்டள்ளன. கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். பருவம் எய்தாத பேதை ஒருத்தியைக் கண்ட ஆடவன் அவள்மேற் காதல் கொண்டு அவளைப் பற்றி பலவாறு சொல்லி இன்புறுதல். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமத்தனாகி அவளை அடையப் பெறாது மடலேறுதல், வரைபாய்தல் முதலியவற்றால் தன்னை மாய்த்துக் கொள்ளுதல்.

இக்கால மக்கள் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்தனர். புலவர்களது உள்ளமும் இயற்கையைக் கண்டவிடத்து குதூகலித்தது இதனால் அகத்திணைப்பாக்கள் பெரும்பாலனவை முதல், கரு, உரி பொருட்களை மையமாக வைத்துப்பாடப்பட்டுள்ளன. கருவாகிய மா, மரம், புல் என்பனவும் உரியாகிய ஒழுக்கமும் நிலம், பொழுது ஆகிய முதலும் ஒரு செய்யுளில் அமையுமாயின் அச் செய்யுள் விளக்கமுற்றுத் திகழும் எனக் கொள்ளப்பட்டது.

உதாரணம்.

"அவரோ வாரார் தான் வந்தன்றே
குயிற்பெடை இன்குரலகவ
அயிர்க் கேழ் நுண்ணற னுடங்கும் பொழுதே...."

சங்கச் செய்யுட்களில் சாதாரண உவகைகள் மட்டுமன்றி உள்ளுறை உவமங்கள், இறைச்சிப் பொருள்களும் காணப்படுகின்றன. சாதாரண உவமைகளில் பொருளும் உவமையும், வெளிப்பட்டு நிற்கின்றது. உள்ளுறை உவமை வருமிடத்து உவமை வெளிப்பட்டு நிற்க பொருள் தொக்கி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையாகக் கூறவிரும்பாத ஒன்றை குறிப்பாக புலப்படுத்தற் பொருட்டு இவை கையாளப்படுகின்றன. உதாரணமாக

"வேரல் வேலி வெட் கோட்பலவின்
சாரல் நாடா செவ்விய யாகுமதி
யார் அறிந்து சினரோ
சிறுகோட்டு பெரும்பழம் தூங்கி
யாங்கு இவள் உயிர்த்தவம் சிறிது
காமமோ பெரிது...."

இங்கு திருமணம் செய்து கொள்ளாமல் காதலியின் களவொழுக்கத்தால் காதல் தாங்க முடியதாது என்ற பொருள் பெரிய பலாப்பழத்தைத் தாங்கும் சிறிய கிளை பற்றிய உவமையால் விளக்கப்படுகிறது. எனவே விரைந்து திருமணம் செய்துகொள். என்ற இறைச்சிப் பொருளும் எடுத்துரைக்கப்படுகிறது.

ஐவகைப் போர் ஒழுக்கங்களுக்குப் புறம்பாக காஞ்சித்திணை, பாடான்திணை என்னும் இருவகைப் புறவொழுக்கங்கள் வைக்கப்பட்டள்ளன. யாக்கை, செல்வம், இளமை முதலிய பலவற்றின் நிலையாமையை எடுத்துரைக்கும் காஞ்சித்திணை ஆண்பாற் காஞ்சி, பெண்பாற் காஞ்சி என இரு வகையாகவும் வகுக்கப்பட்டுள்ளது. போரில் புண்பட்ட வீரனொருவன் அப்புண்ணைக் கிழித்து இறந்து போதல் போரில் புண்பட்ட வீரனொருவனை நாய், நரி முதலியன தீண்டா வண்ணம் பிறர் காத்து நிற்றல், அங்கனம் கிடந்தவனை அவன் மனைவி காவல் செய்தல் முதலிய ஆண்களின் வீரத்தைக் கூறுவன. கணவன் போர்க்களத்தே மடிந்து கிடக்க அவனைத் தழுவி நின்று அழுதல், உடனுயிர் நீத்தல், உடன் கட்டை யேறுதல் முதலியன பெண்பாற் காஞ்சியின் பாற்பட்டன. அரசர் முதலான பாட்டுடைத் தலைவர்கள் பற்றிய குணம், செயல், புகழ் முதலியவற்றைக் கூறும் பாக்கள் பாடாண்திணைக்குள் வைக்கப்பட்டுள்ளன.

இக்கால இலக்கியங்களில் பகுத்தறிவிற்கு புறம்பான கற்பனை அமைக்கப்படவில்லை எடுத்துக்காட்டாக

"ஆறு குளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்
வரையாமரபின் மாரிபோலக்
கடாயனைக் கழற்கால் போகன்"

என்ற பாடலின் போகன் என்னும் மன்னன் நக்கார் தகர்விலர் என்று கருதாது எல்லோர்க்கும் கொடை கொடுத்த செயல் மழை, குளத்தில், வயலில், உலர்நிலத்தில் என்று பேதம் பராட்டாது ஒரே மாதிரிப் பொழிந்த செயலை ஒத்தது என்பது நடைமுறைக்கு பொருத்தமான உவமையாகும். சங்ககால இலக்கியங்களில் அவல உணர்ச்சியைத் தரும் பாடல்களும் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டுள்ளன. எத்துக்காட்டாக மேல்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

"வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே".

ஒரு பாடலின் ஒரு பொருளைக் கூறுதலே இக்கால இலக்கியங்களில் பெருவழக்காக இருந்தது. அகத்திணைப் பொருளைக் கூறும் போது தலைவன் தன் கூற்றாக கூறாது தலைவன், தலைவி, தோழி முதலானோருள் ஒருவர் கூற ஒருவர் கேட்பதே மரபாக கொள்ளப்பட்டது. புறத்திணைப் பொருள் கூறும் போது புலவன் தன் கூற்றாகவும் கூறுதலுண்டு.

மூன்று நான்கு எழுத்துக்களைக் கொண்ட சிறிய சொற்களிலும் எளிய சொற்களிலும் அமைத்து பொருள் விளக்குவனவாக இக்காலச் செய்யுட்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக போர்க்களத்தேயுள்ள அதியமான் தன்குழந்தையை பார்க்க அரண்மனைக்கு சென்ற போது அவனது தோற்றப் பொலிவு

"கையது வேலே காலது புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்"

என வர்ணிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

இக்காலப் பாக்கள் தொகைகளை அமைத்தும் அடைகள் புணர்த்தியும், பெயர்ச் சொற்களுக்கு விகுதி கூட்டி வினை வினையாக்கியும் இன்னொரன்ன பலமுறைகளால் சுருங்கிய மொழியில் விரிந்த பொருளை அமைத்துக் கொள்வனவாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக.

"செறுத்த செய்யுட் செய் செந்நாவின்
வெறுத்த வேள்வி விளங்கு புகழ்க் கபிலன்"

என்றும் இவ் வடிகளில் செய் செந்தா என்ற சொற்றொடரில் வினைத் தொகை பண்புத்தொகை என்னும் தொகைகளை அமைத்து சொற்சுருக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. காலங்காட்டும் இடைநிலையும் பால் காட்டும் விகுதியும் தொக்கி செய்கின்ற, செய்த, செய்யும் செய்தா என நீளமாக அமைகின்ற தொடரும் சுருங்கி வினைத்தொகைப் பயன்பாட்டின் காரணமாக செய் செந்நாவாகிற்று ஆகியவெனும் பண்புருபு தொக்கி "செம்மையாகியநா" "செந்தா" வாகிற்று

தமிழ்மொழி இலக்கியங்களில் தூயதமிழ் இலக்கியங்களாக சங்க இலக்கியங்களே கொள்ளப்படுகின்றன அந்தளவிற்கு பிறமொழிச் செல்வாக்கு அற்றிருந்தது. தமிழோடு பிரிக்க முடியாத சகோதர மொழி போல் அமைந்து விட்ட வடமொழிச் சொற்கள் கூட ஒரு சிலவே கலந்துள்ளன.

ச.கனுசியா
A/L (2014)
கலைப்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர் வார்த்தை கேள்

உலகில் நீ பிறந்திட்டாய்
உயர்ந்த படைப்பாக
உன் வாழ்க்கை என்றும்
உயர்வடைய - நீ
மூத்தோர் வார்த்தை கேள்

வாழ்க்கை எனும் பயணத்திலே
வாழ்வாங்கு நீ பயணம் செய்ய - உன்
வாழ்கையின் ஏணிகளான
மூத்தோர் வார்த்தை கேள்

காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம் - அன்று
காவோலைகளும் ஓர் குருத்தோலைகள் தான் - நீயும்
காவோலை யாக மாறும் காலம் வரும் ஆனாலும்
காவோலைகள் வார்த்தை கேள்
காலமெல்லாம் உன் புகழோங்கும்

கணனி யுகத்தில் வாழ்கின்றாய்
காலமதை மெல்ல வேண்டா மென்று - அக்
கணனியின் ஆற்றலை விட
காலத்தை வென்ற மூத்த காவியங்கள் பல
அவர்கள் வார்த்தை கேள் நீயும்
ஓர் நாள் காவியம் படைப்பாய்

நீயும் ஏதோ பிறந்துவிட்டாய் மனிதனாய்
நீண்டகாலம் தேடுகிறாய் - நீ
பிறந்ததன் அர்த்தம் தேடி
அதன் அர்த்தம் புரியவில்லையே
வேறு வழி தேவையில்லை - நீயும்
கேட்டுப்பார் உன் மூத்தோர் வார்த்தையை
உன் வாழ்வின் அர்த்தம்
அப்போது புரியும் உனக்கு.

ே.டபிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எந்தன் உயிருக்கு நேர்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலே முன்தோன்றிய மூத்த தமிழ், யாமறிந்த மொழிகளிலே இனிமையானதும் கனிவானதும் சிறப்பானதுமான மொழிகளில் தமிழ்மொழியை எம் மொழிகளினாலும் வெல்ல முடியாது. என்பதை நாம் எல்லோரும் அறிந்ததே. தமிழ் நாட்டிலே முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்த்து வந்த சங்ககால வீரமறவர்கள் தொடக்கம் இன்றுவரை வாழ்கின்ற எமது தமிழ்மொழி முதிர்ச்சியான தென்றாலும் இன்றும் புதுப்பொலிவுடன் கன்னிப் பெண்ணாக உலாவருவதனை கண்டுகளிக்கக் கூடியதாக உள்ளது.

"தமிழுக்கு அமுதென்று பெயர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்பது கவிஞர் பாரதிதாசனின் கூற்றாகும். இவ்வாறான தமிழ்மொழி மக்களின் உதட்டில் இருந்து மட்டும் வந்த மொழி அல்ல உள்ளத்திலிருந்து வந்த மற்றவரின் உள்ளத்தைத் தொடும் மொழி. இம்மொழி தமிழ் உலகத்திற்கே அளப்பரிய சேவையினைச் செய்துள்ளது என்பதனை பலர் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. இதுவெறும் பேச்சுக்காகவும் தம்முடைய தேவையை நிறைவு செய்கின்ற ஒரு பாசையாகவும் பாரதிதாசனும் நினைத்திருந்தால் இதனை எம் உயிருக்கு நேர் என்று நிச்சயமாகக் கூறி இருக்க மாட்டார்.

சங்க காலத்தில் வீரத்தையும் காதலையும் பாடும் மொழியாகவும் சங்க மருவிய காலத்தில் அறத்தைப் பாடும் மொழியாகவும் சோழர் காலத்தில் இவை எல்லாவற்றையும் ஒன்று சேரப் பாடிய மொழியாகவும் நாயக்கர் காலத்திலே வாழ்க்கைத் துன்பத்தை பாடும் மொழியாகவும் இருந்து வந்துள்ளது. ஒரு மனிதனை மனிதனாக வாழ வைப்பது இத்தமிழ்மொழி என்பதை நாம் இறந்த பின்னும் இம்மண் கூற வேண்டும் என்பது எமது தமிழ்மொழிக்கும் சமயத்திற்கும் இடையிலே பின்னிப்பிணைந்த தொடர்புள்ளது. அதாவது தமிழும் சமயமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன. இவ்விரண்டிற்கும் அளப்பரிய பங்காற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இதனையே சி.வை தாமோதரம்பிள்ளை அவர்கள் கூறுகையில் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதியெங்கே என்று கூறியுள்ளார்.

இவர்களைப் போன்றே திருவள்ளுவர், கம்பர், வில்லிபுரத்தாழ்வார், பாரதியார், வீரமா முனிவர், கண்ணதாசன், பரதிதாசன் போன்ற எத்தனையோ பெரியார்கள் தமிழ் மொழியை கனிமொழியாகக் கொண்டு அதனை வளர்த்தெடுத்துள்ளனர்.

*அமிழ்தம், அமிழ்தம் என்று கூறுவோம் - நித்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அனலைப் பணிந்து மலர் தூவுவோம்*

*தமிழில் பழமறையைப் பாடுவோம் - என்றும்*

*தலைமை பெருமை புகழ் கூறுவோம்.*

என்பது பாரதியார் கவிதை. தமிழ் மொழிக்கென வள்ளுவரினால் உருவாக்கப்பட்டதே திருக்குறள்.

ஈழத்திலும் சரி தமிழகத்திலும் சரி தமிழ்மொழியினைப் போற்றாதோரும் பாடாதோரும் யாருமில்லை. ஆனாலும் இன்று இத்தமிழ்மொழியானது தன் சக்தியை மெல்ல மெல்ல இழந்து வருகின்றது. தமிழ் இனி மெல்லச்சாகும் என எல்லோரும் கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது. ஏனென்றால் இன்று ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் தாம் நாகரீகமாகப் பேசுகின்றோம் என நினைத்து தமிழை கொச்சையாகப் பேசுவதும் தமிழுடன் ஆங்கிலம், சிங்களம் போன்ற சகோதர மொழிகளைச் சேர்த்து அர்த்தமில்லாமல் பேசுவதும் எம் நாட்டில் மலிந்து வந்துள்ளன. அதற்கமையவே தமிழ்ச் சினிமாப் படங்களும் தமிழ் மொழியை சிறிது சிறிதாகச் கொல்லுகின்றன. ஆனாலும் இளம் சமுதாயமான எமது சமுதாயம் தான் இதற்கு நல்ல பதிலைத் தரவேண்டும். வேற்று மொழிகளை எல்லோரும் படிக்கவும் வேண்டும் அறிந்திருக்கவும் வேண்டும். அதற்காக எம்மொழியை மறந்து விடக்கூடாது.

*எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*

*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!*

*எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்*

*இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!*

என்பது பாரதிதாசனின் வாக்கு

தபீனா விவேகானந்தன்
தரம் 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுநாடக ஆக்கம்

# உப்பிட்ட வரை உள்ளளவும் நினை

**பாத்திரங்கள்**

1. *சேகர் - தந்தை*
2. *சுயாத்தா - தாய்*
3. *கீதா - மகள்*
4. *முகுந்தன் - மகன்*
5. *லட்சுமி - பக்கத்து வீட்டுக்காறி*

**காட்சி - I**

(காலையில் தோன்றும் கதிரவன் ஒளியால் களித்து விரியும் கமல மலர்களைக் கொண்ட இளம் தென்றல் வீசும் காவிரிப்பூம் பட்டினம். இது ஒரு அழகிய கிராமம். இங்கே ஓர் அழகிய குடிசை வீடு. அது தான் சேகரின் வீடு மிகவும் வறுமையிலே வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பம். இதோ)

இடம்:- சேகரின் வீடு

சேகர்:- சுயாத்தா............ சுயாத்தா............. எழுந்திரு!
(அவசர அவசரமாக அதிகாலையே எழுந்து வேலைக்குப் போவதற்காக வெளிக்கிடுகின்றார்.)

சுயாத்தா:- என்னங்கோ..... ஒருநாளும் இல்லாமல் இன்றைக்கு இவ்வளவு நேரத்திற்கு எழுந்து வெளிக்கிடுறீங்க?

சேகர்:- இன்றைக்கு மணியண்ணை வீட்ட கொண்டாட்டமாம். அவர் நேரத்துக்கு விறகு கொத்த வரச்சொன்னவர். ஒரே வருத்தம் வருத்தம் என்று இருந்தால் எங்கட நிலைமை என்னாகிறது......? அதுதான் நேரத்துக்கு......

சுயாத்தா:- ஓமுங்கோ.... நீங்கள் சொல்லுறதும் சரிதான். பிள்ளைகளும் ஒரே பரீட்சைக்காசு கேட்டுக் கொண்டு இருக்கினம். நானும் அவர்களை நாளைக்கு நாளைக்கு எண்டு சொல்லி அனுப்பிக் கொண்டே இருக்கிறன். ரீச்சரும் பேசப்போறா....
(கவலையுடன் சுயாத்தா கூறுகின்றாள்.)

சேகர்:- சுயாத்தா! நீ கவலைப்படாதே எங்கட நிலைமை ரீச்சருக்கு தெரியும் தானே. கொஞ்சம் பொறு நான் வேலைக்கு போட்டு விறகு கொத்திப் போட்டு வாறன். அதில கூலி வரும் தானே.... சரி பிள்ளைகளை எழுப்பு படிக்க அவர்கள் தான் எங்கட கஷ்ர துன்பங்களை எல்லாம் போக்க வேணும்.

சுயாத்தா:- ஓமுங்கோ அவர்கள் படித்து நல்ல நிலைக்கு வருவார்கள். சரி நீங்கள் கொஞ்சம் நேரத்தாலை வாங்கோ. பிள்ளைகள் எழும்பினால் பரீட்சைக் காசு கேப்பினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகர்:- சரி நான் போட்டு வாறன். எல்லாம் அந்த கடவுள் தான் பார்க்க வேணும். (கையை விரித்து மேலே பார்த்து சொல்லி விட்டு கிளம்புகின்றார்.)

சுயாத்தா:- கீதா.... கீதா.... எழுந்திரு! எழும்பிப் படிபிள்ள! தம்பியையும் எழுப்பு!

கீதா:- கொஞ்சம் பொறுங்கம்மா. கொஞ்ச நேரத்தால எழும்பிறன்.

சுயாத்தா:- எழும்பு பிள்ள.... நீங்கள் தானே எங்கட குடும்பக் கஷ்ரம் எல்லாத்தையும் பார்க்க வேணும். அப்ப நீங்க படித்தால் தானே....

கீதா:- ஓம் அம்மா நான் எழும்பி படிக்கிறன் அம்மா. தம்பி தம்பி.... எழும்பு! எழும்பிப் படி! அம்மா! நாங்கள் ரெண்டு பேரும் நல்லாப் படிப்பம் அம்மா....

சுயாத்தா:- பாவம் அப்பா.... இந்த வருத்தத்தோடையும் விறகு கொத்த போட்டார். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் காட்டுவமெண்டால் அதுக்கும் காசு இல்லை என்ன செய்யிறது.
(கவலையுடன் கண்ணீர் கண்களில் முட்டுகிறது)

கீதா:- அம்மா..... நான் படித்து ஒரு வைத்தியராகத் தான் அம்மா வருவன். அதுவும் இலவசமாக மருத்துவம் பார்க்கும் வைத்தியராகத் தான் அம்மா வருவன் அப்பத்தான் எங்கள மாதிரி இருக்கிற குடும்பம் வருத்த துன்பங்கள் இல்லாமல் சந்தோஷமாக இருக்கும்.

சுயாத்தா:- ஓம் கீதா. நீ சொல்லுற மாதிரியே நன்றாகப் படி.

முகுந்தன்:- அம்மா.... நான் ஆசிரியராக தான் அம்மா வருவன். எங்கட ரீச்சர் மாதிரி ஏழைப்பிள்ளைகளுக்கு உதவி செய்வன் அம்மா. இதுதான் என்ற கனவு அம்மா. (இருவரும் எழுந்து படிக்கின்றார்கள்.)

## காட்சி - 2

(இந்த கஷ்ரத்துக்குள்ளும் அதாவது வருத்தத்திற்குள்ளும் சேகர் தங்களுடைய பிள்ளைகளுக்காக வேலைக்கு விறகு கொத்த சென்றார். இன்னும் காணவில்லை.)

### இடம்:- சேகர் வீடு.

கீதா:- அம்மா 8.00 மணி ஆச்சு நேரம் போகுது. அப்பாவையும் காணேல.

சுயாத்தா:- ஓம் கீதா நேரத்திற்கு வாறன் எண்டு சொல்லிவிட்டு போனவர். இவ்வளவு நேரமும் காணேல என்ன நடந்ததோ தெரியேல பிள்ள.

முகுந்தன்:- அம்மா நேரம் போகுது அம்மா. அப்பா வரமாட்டார் போல. பரீட்சைக்காசுக்கு என்ன செய்கிறது. ரீச்சருக்கு என்ன சொல்லுறது எண்டே தெரியேல.

கீதா:- முகுந் வாடா இன்றைக்கு மட்டும் ரீச்சரிட்ட சொல்லுவம். அம்மா! நாங்க போட்டு வாறம். அப்பாவைப் போய் பாருங்கோ. என்ன நடந்ததோ தெரியேல போய் பாருங்கோ அம்மா.

முகுந்தன்:- சரி அம்மா நாங்க போட்டு வாறம்.

சுயாத்தா:- (கவலையுடன்) போட்டு வாங்கோ... (பக்கத்து வீட்டு படலையை தட்டுகின்றாள்.) லட்சுமி அக்கா.... லட்சுமி அக்கா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமி:- என்ன சுயாத்தாக்கா. ஏன் இவ்வளவு படபடப்புடன் நிக்கிறீங்க என்ன நடந்தது.

சுயாத்தா:- லட்சுமி பாவம் இவர் மணியண்ண வீட்ட ஏதோ கொண்டாட்டமாம். விறகு கொத்த போனவர்.

லட்சுமி:- சுயாத்தாக்கா இவ்வளவு வருத்தத்தோடயும் சேகர் அண்ணய விட்டனீங்களா விறகு கொத்த?

சுயாத்தா:- என்ன செய்யிறது. பிள்ளைகளும் பரீட்சைக்காசு கேட்டுக் கொண்டு இருக்கினம். ஒரே கஷ்ரமாக இருக்குது. சாப்பாட்டிற்கு கூட வசதியில்லை. பாவம் பிள்ளைகள் சாப்பிடாமல் பள்ளிக்கூடம் போட்டினம். (கவலையுடன்)

லட்சுமி:- சரி நேரம் போகுது நீங்கள் முதலில மணியண்ண வீடுவரைக்கும் போட்டு வாங்கோ. பிள்ளைகள் வந்தா நான் பாக்கிறன்.

சுயாத்தா:- சரி லட்சுமி நான் போட்டு வாறன் இப்பவே 12.30 ஆகுது. நீ இந்தா வீட்டு திறப்பை பிள்ளைகள் வந்தாக் கொடு என.... (படபடப்புடன் மணியண்ண வீட்ட செல்கின்றாள்.)

**காட்சி - 3**

(பாடசாலை முடிந்து வருகின்றார்கள் கீதாவும், முகுந்தும் மிகவும் களைப்புடன் வாடிப்போய் வருகின்றார்கள்.)

*இடம்:- லட்சுமியின் வீடு.*

கீதா:- அம்மாவக் காணேல வீடு பூட்டிக்கிடக்குப் போல.

முகுந்:- ஓம் அக்கா. அம்மா... அம்மா... (கூப்பிடுகிறான்)

கீதா:- தம்பி அப்பாவையும் காணேல. அப்பாக்கு என்னவும் நடந்துட்டுதோ தெரியேல.

முகுந்:- அம்மா... அம்மா.... (அழுது கொண்டு கூப்பிடுகிறான்)

லட்சுமி:- பிள்ளைகளே! வந்துட்டீங்களா? வாங்கோ. அம்மா அப்பாவ பாக்க போட்டா. உள்ளுக்கு வாங்கோ. (கூட்டிக் கொண்டு செல்கின்றாள்.)

கீதா:- லட்சுமி அக்கா. அம்மா என்ன சொல்லீட்டு போனவா...

லட்சுமி:- கீதாஉங்கட அம்மாவும், அப்பாவும் பாவம். நீங்கள் தான் படித்து ஓர் உத்தியோகம் பார்த்து அவர்களைப் பார்க்க வேணும்.

முகுந்:- ஓம் லட்சுமி அக்கா. நானும் அக்காவும் நல்லாப் படிக்கிறம்.

லட்சுமி:- சரி முதலில கை காலை கழுவி விட்டு வாங்கோ. காலேல இருந்து ஒண்டுமே சாப்பிடேல எண்டு அம்மா சொன்னவா. நான் கவலைப்பட்டனான். வந்து இருங்கோ நான் சாப்பாடு கொண்டு வாறன்.

கீதா:- தம்பி! பாத்தியாடா லட்சுமி அக்கா எவ்வளவு நல்லவா. (இருவரும் சாப்பிட்டுக் கொண்டு) லட்சுமி அக்கா நாங்கள் இந்த உதவிய ஒரு நாளும் மறக்கவே மாட்டம். எங்களிண்ட கஷ்டரத்தைக் கண்டு உதவி செய்த உங்களை நாங்கள் மறக்கவே மாட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகுந்:- அக்கா நேரமோ 3.00 ஆகுது. அம்மாவையும், அப்பாவையும் காணேல.

கீதா:- ஓமடா தம்பி (வாசலின் இடைவெளியிலே வீதியைப் பார்த்த வண்ணம் இருக்கின்றாள் கீதா)

லட்சுமி:- சரி சாப்பிடுங்கோ வயிறு நிறைய......

முகுந்:- அக்கா அம்மாவும், அப்பாவும் வாற மாதிரி இருக்கு.....

கீதா:- ஓமடா தம்பி..... (தம்பி துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடுகின்றான்)

லட்சுமி:- முகுந் அம்மாவும், அப்பாவும் வரட்டும். நீ இங்க வந்து சாப்பிடப்பா.

சேகர்:- சுயாத்தா.... லட்சுமி வீட்ட எங்கட பிள்ளைகள் நிக்கினம் வா.... (சுயாத்தா சேகரை கவனமாக பிடித்துக் கொண்டு வருகின்றாள்)

சுயாத்தா:- (லட்சுமி வீட்டிற்குள் இருவரும் செல்கின்றனர். பிள்ளைகள் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் விடுகின்றனர்.) லட்சுமி நாங்கள் உனக்கு என்ன கைமாறு செய்யப் போகிறோமோ தெரியேல.

லட்சுமி:- சுயாத்தாக்கா முதலில ரெண்டு பேரும் இருங்கோ...... சாப்பிட்டிட்டு அப்புறம் ஆறுதலாக கதைப்பம். (லட்சுமி சேகரின் குடும்பத்திற்கு விருந்தளிக்கின்றாள்.)

கீதா:- அம்மா! அப்பாக்கு என்ன நடந்தது அம்மா?

சேகர்:- என்ர விஷயத்தை விடு. சுயா முதலில் எமக்கு உதவி செய்த லட்சுமிக்கு நன்றி சொல்லு.

சுயாத்தா:- ஓமுங்கோ.... லட்சுமி நீ இன்றைக்கு செய்த உதவிய நாங்கள் ஒருபோதுமே மறக்க மாட்டம். நாங்கள் அனைவருமே உனக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

முகுந்:- அம்மா அப்பாக்கு..... (ஆவலுடன்)

சேகர்:- கொஞ்சம் பொறு தம்பி.... நானே என்ற பிள்ளைகள் பசி பட்டினியோட இருக்கப் போகுதுகள் எண்டு நினைக்க, லட்சுமி எங்களை ஆனந்தக் கண்ணீர் விட வைச்சுட்டாள்.

சுயாத்தா:- ஓமுங்கோ.... சரி கீதா அப்பாவுக்கு என்ன நடந்தது எண்டால்..... அப்பா மணியண்ண வீட்ட விறகு கொத்தேக்க மயங்கி விழுந்து போட்டார். அவர்கள் அப்பாவ படுக்க வைத்திருந்தார்கள். நான் போகேக்க தான் நித்திரையால எழுப்பினவா மணியண்ண விறகு கொத்தின கூலியையும் தந்து அப்பாக்கு மருந்து எடுக்க சொன்னவர். இது தான் நடந்தது.

கீதா:- அப்பா! நீங்கள் இனிமேலும் விறகு கொத்த போக வேணாம் அப்பா. எனக்கு பரீட்சை நடக்க போகுது அதில நான் சித்தியடைந்தால் நான் நினைத்த கனவு நினைவாகி விடும்.

லட்சுமி:- கீதா, முகுந் நீங்க ரெண்டு பேரும் நல்லா படியுங்கோ அம்மாவையும், அப்பாவையும் சந்தோஷமாக பாருங்கோ. (என புத்திமதி கூறுகின்றாள்.)

சுயாத்தா:- லட்சுமி... சரி நாங்க போட்டு வாறம். நீ இன்றைக்கு செய்த உதவியை நாங்க ஒரு போதுமே மறக்கமாட்டம். சரி போட்டு வாறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமி:- சரி போட்டு வாங்கோ.... (சந்தோஷத்துடன்)

**காட்சி - 4**

(இதோ இக்குடும்பத்தின் வறுமை நீங்கி சந்தோஷம் பெருகும் நாள்.)

**இடம்:- சேகர் வீடு.**

(சேகர் பத்திரிகை வாசித்துக் கொண்டு இருக்கின்றார். சுயா சமயல் செய்கின்றாள். கீதா பாடசாலை விட்டு சந்தோஷத்துடன் வருகின்றாள்.)

கீதா:- அம்மா... அம்மா.... எங்கயம்மா இருக்கிறீங்கள்? (சந்தோஷத்துடன் கையில் ஏதோ கொண்டு).

சேகர்:- என்னம்மா கீதா இவ்வளவு சந்தோஷமாக வாறாய். என்ன கையில வைச்சிருக்கிறாய்.

கீதா:- அப்பா நான் குறு நாடகம் எழுதினேனல்லோ அதற்குத் தான் முதல் பரிசு 10,000/= காசும், சான்றிதழும் தந்தார்கள்.

சேகர்:- (சந்தோஷத்துடன்) என்ர பிள்ள கெட்டிக்காறி. போய் அம்மாட்ட சொல்லு.

கீதா:- அம்மா... அம்மா....

சுயாத்தா:- என்ர பிள்ள கெட்டிக்காறி எனக்குத் தெரியும். கடவுளே! நீ எங்களை கைவிடேல அப்பா.

சேகர்:- சுயாத்தா இந்த 10,000/= யில அரைவாசியைக் கீதாண்ட பேரில வங்கில போடுவம். அரைவாசிய அவளிண்ட படிப்புச் சிலவுக்கு எடுப்பம். என்ன சொல்லுற?

சுயா:- ஓமுங்கோ... வாங்கில போட்டாலும் வட்டி வளரும்.

கீதா:- அம்மா தம்பிக்கு வகுப்பு நடக்குது. அவனும் நல்லாய் படிப்பான் எண்டு ரீச்சர் சொன்னவா.

சுயா:- நீயும் முகுந்தும் என்ற ரெண்டு கண்கள். எனக்கு தெரியும் என்ற பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். (பரீட்சை எழுதி முடிவுக்காக காத்துக் கொண்டு இருக்கின்றாள் கீதா. இரண்டு மாதங்கள் கடந்தன. இதோ வறுமை நீங்கி வசதியான குடும்பமே குதூகலம். பரீட்சை முடிவு வந்தது.)

கீதா:- அம்மா... அம்மா...! (சந்தோஷத்துடன் இனிப்புப் பண்டத்துடன் வீடு வருகின்றாள்.)

சுயாத்தா:- என்ன பிள்ள கையில இனிப்புப் பண்டம். என்ன....

கீதா:- அம்மா.... நான் பரீட்சையில சித்தியடைந்து விட்டேன். என் கனவு நனவாகப் போகிறது.

சேகர்:- என்ற புள்ள நினைச்ச மாதிரியே வைத்தியராக வரப்போகிறாள். கெட்டிக்காறி.

கீதா:- (இனிப்பை எடுத்து தானே தன்கையால் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தீத்தி விடுகின்றாள்.) அம்மா, தம்பி எங்க அம்மா?

முகுந்:- என்னக்கா பரீட்சையில் பாஸ் பண்ணீட்டியா? ரொம்ப ரொம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷம் அக்கா.

கீதா:- தம்பி நீயும் நன்றாகப் படிப்பாய். எனக்குத் தெரியும். நீ நல்ல ஒரு ஆசிரியராக வந்து எங்கள மாதிரி ஏழை மாணவர்களுக்கு உதவி செய்வாய்.

முகுந்:- ஓம் அக்கா.... (சந்தோசத்துடன்)

கீதா:- அம்மா.... வாங்கம்மா. இப்பவே லட்சுமி அக்காக்கு நான் இனிப்பு பண்டம் கொடுக்க வேணும். அவர்கள் தான் எங்கட இன்ப துன்பங்களுடன் கூட இருந்து உதவி செய்தவா. அவாவ நாங்கள் மறக்கவே கூடாது.

சுயாத்தா:- ஓம் பிள்ள லட்சுமி வீடு மாறினத்துக்கு இன்னுமே போகேல. சரி எல்லாரும் வெளிக்கிடுங்கோ போவம்.

சேகர்:- பிள்ளைகளே! எமக்கு நன்றி செய்தவரை நாம் ஒரு போதுமே மறந்து விடக்கூடாது.

சுயாத்தா:- சரி. வாங்கோ எல்லோரும் காருக்குள்ள போய் கதைப்பம்.

கீதா:- (இனிப்புப் பண்டங்களுடன்....) காருக்குள்ளே நான் ஏறிட்டன். வாங்கோ எல்லாரும்.

முகுந்:- அம்மா இப்ப எனக்கு பள்ளிக்கூடத்தில ரீச்சர் சொல்லித்தந்த திருக்குறள் ஞபாகத்துக்கு வருகுது அம்மா....

சுயா:- சொல்லண்டா பாப்பம்.

முகுந்:- அது தான் அம்மா... லட்சுமி அக்காவை நாங்கள் மறக்கவே கூடாது. ஏனென்றால் அவர்கள் எங்களுக்கு உதவி செய்தவா. எமக்கு தீமை செய்பவரை உடனே மறந்து விட வேண்டும்.

கீதா:- சொல்லண்டா அந்த திருக்குறளை....?

முகுந்:- "நன்றி மறப்பது நன்றன்று - நன்றல்லது
அன்றே மறப்பது நன்று".

சேகர்:- என்ற பிள்ள கெட்டிக்காறன். இந்த நேரத்தில நல்ல ஒரு திருவாக்கை கூறியிருக்கின்றான். (குடும்பமே சந்தோஷத்துடன் தமது வறுமையில் உதவிய லட்சுமியின் வீட்டிற்கு செல்கின்றனர். முகுந்தும் ஓர் ஆசிரியராக வந்தான். கீதா வைத்தியராக வந்தாள். கனவு நனவாகிவிட்டது. இருந்தும் அன்று தமக்கு செய்த உதவியை மறந்துவிடாது குதூகலத்துடன் சந்தோஷமாக செல்கின்றது இந்த குடும்பம்.)

நன்றி.

ஜீ.அபர்ணா.
A/L (2012)
கலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலத்தில் தோன்றிய ஆற்றுப்படை இலக்கியங்களின் பண்புகள்.

தென்னிந்தியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 1ம் நூற்றாண்டு தொடக்கம் 3ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி சங்ககாலம் ஆகும். இக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட பத்துப்பாட்டு நூல்களில் புறத்திணை மரபில் ஆற்றுப்படை என்பது ஓர் இலக்கிய வகையாக தோற்றம் பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். "ஆறு" என்பது "வழிநெறி" எனவும "படை" என்பது படுத்தல் எனவும் பொருள்படும் ஆகவே வழிப்படுத்தல், நெறிப்படுத்துதலே ஆற்றுப்படை ஆகும்.

தொல்காப்பியா தனது புறத்திணையிலே

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவனம் பெறா அர்க்கு அறிவுற் இச்
சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமும்"

என்ற நூற்பாப் பகுதியில் ஆற்றுப்படைக்கான இலக்கணத்தினை எடுத்துக் கூறியுள்ளார். அதாவது ஒரு வள்ளலிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடி பொருள் பெற்று வறுமையினால் வாடி வருந்துகின்ற ஏனைய கலைஞர்களுக்கு தாம் பொருள் பெற்ற மன்னனிடம் சென்று பொருள் பெற்று வறுமை நீங்கி வாழும் வகையில் வழிகாட்டுவதாக அமைவதே ஆற்றுப்படை ஆகும்.

ஆற்றுப்படை இலக்கியங்கள் ஐந்தில் திருமுருகாற்றுப்படை, மருகக்கடவுளின் புகழ்பாட ஏனையவை மன்னர் புகழ்பாடும் பண்புடையனவாகக் காணப்படுகின்றன. பெருநர்களை கரிகாலச் சோழ மன்னனிடம் ஆற்றுப்படுத்தும் பொருநராற்றுப் படையில் கரிகாலச் சோழனது பெருமைகள் கூறப்படுகின்றன. சிறுபாணர் என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்தும் சிறுபாணாற்றுப் படையில் நல்லியற் கோடான பெருமை பேசப்படுகின்றது. கூத்தர் என்னும் இசைக் கலைஞர்களை நன்னன் சேய் நன்னன் என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்தும் பெரும்கூத்தராற்றுப் படையிலும் நன்னனது பெருமை பேசப்படுகின்றது. பெரும்பாணர்களை இளந்திரயன் என்னும் மன்னனிடம் ஆற்றுப்படுத்தும் பெரும்பாணாற்றுப் படையில் இளந்திரைய மன்னன் புகழப்படுகின்றான். அவனது செங்கோற் சிறப்பை.

"அத்தஞ் செல்வோர் அலறத்தாக்கிக்
கைப்பொருள் வெளவுங்களவோர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று அவன் கடியுடைவியன்புலம்
உருமும் உரறாது அரவும் தப்பாது
காட்டுமாவும் உறுகண் செய்யா"

என்று கூறிச் செல்வதும் அவன் வீரத்தை "மள்ளர் மற்ற மறவர் மறவ" என மொழிவதும் அவன் புகழ்மொழிக்கு தக்க எடுத்துக் காட்டுக்களாகும்.

மன்னர்களையும், வள்ளல்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டுள்ளதனால் இவ்விலக்கியங்கள் பாடாண் திணையின் பாடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறே "பாடாண்" எனப்படுகின்றது. ஆற்றுப்படையில் போற்றத் தகுந்த உத்தமகுணம், கொடைச்சிறப்பு, வீரச் சிறப்பு, நல்லாட்சி, நாட்டு வளம், இரவலர்களுக்குப் புரக்கும் முறை, என்றவாறு மேற்கூறப்பட்ட பாட்டுடைத் தலைவர்களின் ஒழுக்காறுகளே கூறப்படுவதனை அவதானிக்கலாம்.

வர்ணனை மரபு சிறகுகட்டிப் பறக்கும் தன்மையையும் ஆற்றுப்படை இலக்கியங்களில் காண முடிகின்றது. எடுத்துக் காட்டாக திருமுருகாற்றுப் படையில் அமைந்த

"வேறுபல்துகிலின் நுடங்கி அகில் சுமந்து
ஆரமுழுதல் உருப்படி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கிண்டு
விண்பொரு நெடுவரைப்பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர் இறால் சிதைய நன்பல
..................................................................
இழுமென கிழிதரும் அருவிப்
பழமுதிர்ச் சோலை மலைகிழவோனே"

எனவரும் பாடல்களில் பழமுதிர்ச் சோலையின் புறச்சூழல் வர்ணிக்கப்படுவதனைக் குறிப்பிடலாம். இவ்விலக்கியங்களில் அதிகாரப்பட்டு நிற்கும் பொருளுக்கு இயைபாகவே வர்ணனை மரபு அமைந்துள்ளது. கலைஞர்களைப் புலவர்களிடம் கொடைபெற ஆற்றுப்படுத்துவதே அதிகாரப்பட்டு நிற்கும் பொருள் இதற்கு இசைவாக ஆற்றுப்படுத்தப்படும் வழியின் வர்ணனையும், புரவலர் பற்றிய வர்ணனையும், இரவலர் பற்றிய வர்ணனையும் அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாக பெரும் பாணாற்றுப் படையில் வழியின் வருணையும், பொருநராற்றுப்படையில் புலவலர் கரிகாலன் வளவனது சிறப்பை பகரும் வர்ணனையும், சிறுபாணாற்றுப்படையில் இரவலர் சார்ந்தவர்ணனைப் பண்பே பிற்கால இலக்கியங்களின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் பிரிக்க முடியாத அலகாக வர்ணனை மரபை மாற்றி விட்டது. எனவே தான் பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் "தமிழில் இந்த வர்ணனைப் போக்கின் நதிமூலமாக ஆற்றுப்படை மரபினைக்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார்.

காவிய லட்சணங்களைப் பேணும் பண்பையும் ஆற்றுப்படை இலக்கியங்களில் காண முடிகின்றது. அந்த வகையில் ஆற்றுப்படைகளில் புரவலர்கள் தன்னிகரில்லாத் தலைவர்களாகக் காணப்படுவதோடு நாடு, நகர வர்ணனைகளும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. ஆறுபடை வீடுகளும், வஞ்சி,மதுரை, உறந்தை, காஞ்சி முதலிய நகரங்களும் சேர, சோழ, பாண்டிய நாடுகளும் வர்ணிக்கப்பட்டுள்ளன

"இழுமென் புள்ளின் ஈண்டுகிளைத் அதொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழம்க் கூறும் பலா அப் போலக்
புலவக் கடல் உடுத்த வானஞ் சூடிய
மலர்தலை உலகத்துள்ளும் பலர்தொழ"

காஞ்சி நகரம் இருந்ததாக பெரும்பாணாற்றுப்படை கூறுவதை எடுத்துக் காட்டலாம்.

ஆற்றுப்படுத்தப்படுவோர் கலைஞர்கள் ஆகையால் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்ட பொருள்கள் சிறப்பிக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக சிறுபாணாற்றுப் படையில் யாழ் வர்ணனை, விறலியை அடிமுதல் முடிவரை வர்ணித்தல், பொருநராற்றுப்படையில் யாழின் அமைப்பு பாடியின் வனப்பு விளக்கப்படுதல் முதலியவற்றை குறிப்பிடலாம்.

ஈர்க்கிடை போகா ஏரிள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கெப்பூழ்
உண்டென உணரா உயவும் நடுவின்
வண்டிருப்பன்ன பல்காழ் அல்குல்

இரும்பிடித் தடக்கையின் செறிந்து திரள் குறங்கின் எனவரும் பெருநர் ஆற்றுப்படைப்பாடலில் பாடினியின் வனப்பு விபரிக்கப்படுவதனைக் காணலாம்.

சிறுபாணர்கள் ஆற்றுப்படுத்தப்பட்ட இலக்கியம் சிறுபாணாற்றுப்படை, பொருணாற்றுப்படை, போர்க்களம் பாடுவோர் ஏர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் ஆகிய மூவகைப் பெருநகரில் போர்க்களம் பாடுவோரை ஆற்றுப்படுத்துவதாக அமைந்த இலக்கியம் பெருநராற்றுப்படை, கூத்தரை ஆற்றுப்படுத்துவது கூத்தராற்றுப்படை இவ்வாறு ஆற்றுப்படுத்துவோர் பெயராலேயே இவ்விலக்கியங்கள் அமைந்திருக்கும் தன்மையையும் காணமுடிகின்றது.

ஆற்றுப்படுத்துவோர் மன உணர்வை அவர்கள் வறுமையினூடாகக் கூறப்படுவதனைக் காணலாம். அந்தளவிற்கு அவர்கள் மன உணர்ச்சி மிக்கவர்களாக விளங்கியுள்ளனர். எடுத்துக்காட்டுகள் பல உள்ளன. சிறுபாணாற்றுப்படையில் பாணனின் வீட்டினை வறுமை ஆட்டுகிறது. அவுர்களைச் சார்ந்து நாய்க்குட்டிகள் பால் குடிக்க வரும்போது குரைத்து வெருட்டுகின்றது. தாய்மையுணர்ச்சியை மிஞ்சிய வறுமை இங்கு காட்டப்படுகிறது. குடும்பத்தலைவி உணவிற்காகப் பெருமுயற்சி செய்து ஒன்றும் பெறமுடியாமல் குப்பையில் வேளைக்கீரை பிடுங்கி உப்பும் இல்லாமல் வேக வைக்கிறாள் யாராவது கண்டு விடுவார்கள் என்று தெருக்கதவு சாத்தப்படுகிறது. இங்குதான் தன்மான உணர்ச்சி கொப்பளிக்கப்படுகின்றது. அதாவது உப்பில்லாக்கீரையை உண்டோம் என்று பிறர் பரிகாசிக்கும் இழிமொழிக்கு ஆளாகாமல் இருக்கும் கலைஞர்களின் நிலையறிந்து உள்ளம் உவந்து பரப்பவர்களிடத்தே தான் இரங்கப்புறப்பட்டார்கள் சென்றபின் கைநீட்டி இரப்பதுமில்லை, வாயால் கேட்பதுமில்லை, எனவே கலையின் சிறப்பை உணர்ந்து கேளாமல் கொடுத்துப் போற்றும் வள்ளல்களை நாடியே சென்றார்கள் என்பதிலும் மான உணர்வு கொடி கட்டிப் பறக்கிறது.

ஆற்றுப்படுத்துவோரின் மான உணர்வைப் பேணும் கடமையுணர்வுடையவர்களாக வள்ளல்கள் விளங்குகின்ற தன்மையும் காண முடிகின்றது. அந்த வகையில் வள்ளல்கள் இரவலரின் உடலைச் சூழ்ந்துள்ள கந்தலை நீக்கி உயர்ந்த ஆடைகளை வழங்கினர். ஏனெனில் அவர்கள் அரச சபையில் கூனிக்குறுகி நிற்காமல் மானத்தோடு தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதனால் ஆகும். இதனை மேல்வரும் பொருநர் ஆற்றுப்படைப் பாடல் ஒன்று சான்றுபடுத்துகின்றது.

நுமகையதுகேளா அளவை ஒய்யெனப்ஷ
பாசிவேரின் மாசொடு குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னல் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கி

வள்ளல்களின் வள்ளண்மையைச் சிறப்பிக்கும் பண்புடையனவாகவும் ஆற்றுப்படை இலக்கியங்கள் விளங்குகின்றன. வள்ளல்கள், வாழ்க்கை வசதிகளையோ வயிற்றுப்பசியோ கலைஞர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். சபை நடுவே தலைகவிழா உயர் நிலையே விரும்புவர் என்ற உண்மையை உணர்ந்து ஒழுகும் நுண்ணறிவும் அதற்கிசைய நடாத்தும் பண்பாட்டுணர்வும் கொண்டவர்கள் எனவே தாகம் தீரு நறிய தேனினையோ பசியாற அறுசுவை உணவையோ வழங்காது. முதலிலே கந்தல் ஆடை நீக்கி புதிய ஆடையையே வழங்குகின்றனர். இவ்வாடைகள் மூங்கில்தோல் போன்ற மென்மையையும், ஒண்மையையும் உடையதாம், நுண்ணிய இழையுடையதாம், பூவேலைப்பாடுடையதாம் பால் ஆடை போன்றதாம் என்று கூறப்படுகிறது. இவற்றிலிருந்து கலைஞர்கள் முகம் கோணாதபடியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் படியாகவும் கலையுணர்வைப் போற்றும் படியும் கொடுக்கும் வள்ளண்மைச் சிறப்பை அவதானிக்க முடிகின்றது. இரவலர்களைத் தன் சுற்றம் போலவே தழுவினார்கள் கேளிர் போலக கொளல் வேண்டி அவ்வாறு செய்வதாக முடித்தாமக் கண்ணியார் பாடியுள்ளார் வழங்கி வழங்கி கவிழ்ந்த கையை உடையவர்கள் ஆனார்கள் இதனை மலைபடுகடாம் பின்வருமாறு கூறுகின்றது.

இலம்படுபுலவர் ஏற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழல் தொடிக் தடக்கை

புரத்தல் செய்வதோடு மிகுதியான அன்பையும் காட்டினார்கள் இரவலர்கள் காட்டும் அன்பிலும் புரவலர்கள் காட்டும் அன்பு மிகுதியானது. எடுத்துக் காட்டாக பொருநர் ஆற்றுப்படையில் உள்ள மேல்வரும் பாடலைச் சுட்டலாம்.

வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
கண்ணிற்காண நண்ணுவழி இர்இப்
பருகவன்ன அருகா நோக்கமோடு
உருகு பாலைபோல் என்பு குளிர் கொளீஇ

அன்போடு சுரக்கும் வள்ளண்மைச் சிறப்பிது மேலும் உணவளிக்கும் போதுதாமே இன்ன இன்ன உணவு நல்லவை என்று கலைஞர் விரும்புமாறு சொல்லிப் 'பேரன்போடு எதிரே நின்று உண்ணச் செய்கின்றனர். இதனைப் பின்வரும் பெரும்பாணாற்றுப்பாடல் அடி சான்றுபடுத்துகின்றது.

மகமுறை முகமுறைநோக்கி 'முகனமர்ந்து
ஆனா விரும்பின் தான்நின்று ஊட்டி

நேர் நின்று உபசரிக்கும் வள்ளண்மைச் சிறப்பிது

ஆற்றுப்படை இலக்கியங்கள் பெரும்பாலும் அகவற்பாவிலும் கலிப்பாவிலும் அமைந்துள்ளன. மொழிநடை சங்ககாலத்திற்கே உரித்தான தூய தமிழ் நடையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்களில் நெடுநல் வாடைபெறும் முக்கியத்துவம்

தமிழ் இலக்கிய வரலாறு என்பது ஒரு நீண்ட காலப்பகுதி ஆகும். உலகிலுள்ள பல வளம் பெற்ற மொழியைப் போன்று தமிழுக்கும் ஒரு நெடிய வரலாறு இருக்கிறது. நீண்ட பாரம்பரியத்திலுள்ள தமிழ் மக்கள் எவ்வாறெல்லாம் வாழ்ந்து இருக்கிறார்கள் என்பதைத் தமிழ் இலக்கியத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இயற்கையோடு இயைந்து மிகுந்த செம்மாந்த வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள். நெறி பிறழ்ந்து வாழத் தலைப்பட்ட போது நீதிகளைப் புகட்டியிருக்கிறார்கள். காவியங்களை வடித்துப் பல வரலாறுகளை மனதில் பதிய வைத்துள்ளார்கள். இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது. மக்களின் வாழ்க்கை முறை மாறும் போது இலக்கியத்தின் அமைப்பும் நாவல் பொருளும் மாறுவதைத் தமிழ் இலக்கிய வரலாற்றை அணுகும் போது அறிந்து கொள்ளலாம்.

எனவே தமிழ் என்றும் உயர் தனிச் செம்மொழி அமைப்பு அடிப்படையில் பார்த்தாலும் மிகவும் வளமுடையதாகக் காணப்படுகிறது. சங்ககாலம் நூல்களின் புதையல் போன்றது. சங்கப்புலவர்கள் நிலங்களை ஐந்தாக வகுத்து அந்நிலத்திற்குரிய ஒழுக்கத்தைப் பாடியமை சங்க இலக்கியங்களைத் தெளிவாக நோக்க உதவுகின்றன. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்பன சங்க இலக்கியங்களாக மேற்கணக்கு நூல்களாகக் கொள்ளப்பட்டன. சங்க கால மக்களின் ஒழுக்கங்களும், மனோபாவமும் செய்யுளுக்குப் பொருளாயமைந்தன. எனவே மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு அதனை அகத்திணை, புறத்திணை எனப் புலவர் வகுத்தனர். அகத்திணை காதல் ஒழுக்கத்தையும் புறத்திணை போர், வீரம், கொடை, நிலையாமை பற்றிப் பேசி நிற்கின்றன.

பழந்தமிழ்ப் பத்துப்பாட்டுள் ஏழாவதாக இலங்கும் இனிமை மிக்க நெடுநல் வாடை என்றும் நீடிய புகழ் மணம் பரப்பும் பொற்புடைய பாடலைப் புகன்றருளிய புலவர் பெருமான் நக்கீரர் இக்கவிஞர் தமிழ்ப் பெரும் கடவுளாகிய தண்ணருள் முருகனின் இன்னருளைப் பெற்ற பெருமையர் என்பது இவர் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை என்னும் நூலாற் புலனாகும். செந்தண்மை மிக்க அந்தணராய் சீரிய தமிழ் வீரியத்துடன் விளங்கிய பேரறிவாளன் நக்கீரர் என்பது செக்கவார்சபைப் பெருமான் சிவனோடு வாதித்து நெற்றிக்கண்ணும் வார்சடை காட்டினும் குற்றம் குற்றமே எனச் சாதித்த வெற்றித்திறனால் நக்கீரர் பெருமை புலனாகிறது.

பல்லாற்றானும் தலை சிறந்த நல்லாற்றல் படைத்த இந்நாவலர் கோமானாகிய நக்கீரர் நெடுநெல்வாடை என்னும் இத்தனி நெடும்பாட்டால் முடியுடைத் தமிழ்ப் பேரரசன் ஒருவரைப் பரவுகிறார். அவ் அரசனால் பெரிதும் ஆதிர்க்கப்பெற்ற கவிஞராகிய நக்கீரர் அவனது பேராற்றலைத் தம் சொல்லாற்றலால் இவ்வுலகினுக்கு எடுத்துகாட்டுகின்றார். இப்பாட்டால் புலவர் தம் புகழையும் தம்மைப் போற்றிய புரவலன் புகழையும் நிலவுலகில் நிலை பெறுமாறு செய்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுநெல்வாடையின் பாட்டுடைத் தலைவன் மாங்குடி மருதனார் பாடிய மதுரைக்காஞ்சிக்குரிய மன்னர்கோர்சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையோடு போர் செய்து அவனைச் சிறைப்படுத்தியவன் அன்றிச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பெருநன் என்போர் எழுவரையும் வென்ற திண்டிறல் வீரவேந்தன் நாட்டைக் காத்த காவலனும் நல்லிசைப் பாவலனும் ஆகிய பாண்டியன் நெடுஞ்செழியனது குறிப்பிடும் பாட்டே நெடுநெல்வாடையாகும். புலவர் நக்கீரரது நாவன்மையையும் பாவன்மையையும் விளக்கும் நெடுநெல்வாடை மாசிலா மகிழ்ச்சியைத் தரும் பாடலாகும்.

நாற்றிசைக் காற்றையும் வெவ்வேறு பெயர்களால் வழங்கும் நாம் வட திசையில் இருந்து வீசும் காற்றை வாடையென்று வழங்குகின்றோம். நக்கீரர் தம் பாட்டின் இடையில் இதனை வடந்தைத் தண்வளி என்றே வாயாரக் கூறி மகிழ்கிறார். ஆனால் வாடையென்றால் மூடுதற்குத் தடித்த ஆடையும் காய்தற்கு அழல் நெருப்பையும் ஆத்திரத்தோடு தேடும் இயல்புடைய நாம் அந்த வாடையை நல்வாடையென்றோ, நெடுநெல்வாடையென்றோ சொல்லி மகிழ எள்ளளவும் உள்ளம் கொள்ள மாட்டோம். ஆனால் தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பந்தரும் நெடுவாடையாகவும் வினை முடிக்கச் சென்ற தலைவனுக்கு இது நல்வாடையாகவும் தோன்றுவதால் இது நெடுநல்வாடை என்றும் பெயர் பெற்றது.

நெடுநெல்வாடையில் நக்கீரர் உள்ளத்தால் பெண்ணாக மாறி நின்று பேசுகிறார் தன்னைப் போன்ற பெண்ணொருத்தி (தலைவி) இன்னுயிர்க் கணவனைப் பிரிந்து பெரிதும் வருந்துகிறாளோ என்ற எண்ணத்தால் அவள் வருத்தம் தீரப்போர் கருதிச் சென்ற புரவலன், பெருத்த வீர வெற்றியுடன் இனிது போர் முடித்து மீள்வானாக! அதற்கு இறைவியே! நீ அருள் புரிய வேண்டும் என்றும் போர்த் தெய்வமாகிய கொற்றவை பால் வெற்றி வரம் வேண்டுகின்றாள்.

பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை இகழ்ந்து கூறிய இகலரசர் எழுவரையும் போரில் எதிர்த்து முறியடித்து வெற்றி பெறுவதற்குப் பெரும்படையுடன் தலையாலங்கானம் என்ற இடத்தை அடைந்தான். படைகள் தங்குதற்குப் பாசறை அமைத்தான். போர் நடந்து கொண்டிருக்கிறது. வெற்றியின் எல்லையை என்றும் அரசன் காணவில்லை

சித்திரை மாதத்தில் இடைப்பட்ட பத்து நாட்களில் கதிரவன் நிழல் சாயாமல் நேராக இயங்குகின்ற ஒரு நாளைச் சிற்பநூல் வல்லார் அரண்மனை அமைப்பதற்குரிய நாளாகக் குறித்தனர். உயர்ந்த மதில்கள் அமைக்கப்பட்டன. அம்மதில்கள் அமைந்த வாயில் ஆணிகளும் பட்டங்களுமாகிய பெரிய இரும்பாலே கட்டிச் சாதிலிங்கம் வழித்துப் பூசப்பெற்றது. இது அரசனின் மாளிகைச் சிறப்பாகும்.

கூதிர்காலம் என்பது மிகவும் முக்கியமான காலமாகும்.

காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல்ஷ
களைந்து கூதிர் நின்றன்றால் போதே

பெய்யும் மேகம் உலகெலாம் குளிரும்படியாகத்தான் கிடந்த மலையை வலமாகச் சுற்றி எழுந்த கார்காலத்து மழையைப் பெய்தது. அம்மழையால் விலங்குகள் மேய்தற் தொழிலை மறந்து ஒடுங்கின. மகளிர் குளிர்ச்சி மிகுதியால் தம் கூந்தலிடத்து மாலையிட்டு முடியராய், மங்கலமாகச் சில மலரிட்டு முடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினர். அதன் பொருட்டுத் தண்ணிய நறிய மயிர்ச் சந்தனமாகிய விறகிலே நெருப்பை உண்டாக்கி அதிலே கரிதாகிய வயிரத்தையுடைய அகிலையும், வெள்ளி கண்ட சருக்கரையையும் கூட்டிப் புகைத்துக் கூந்தலுக்கு ஊட்டினார்.

கல்லென்னும் ஓசையுடைய மழைத்துளிகளை வாடைக்காற்று எங்கும் பரப்புகையினாலே இளையோரும் முதியோரும் குவிந்த வாயையுடைய கரகத்தில் உள்ள தண்ணீரைக் குடியாராய்ப் பருத்தாற் போன்ற வாயையுடைய தூபமூட்டி இட்ட செந்நெருப்பின் வெம்மையை நுகர்ந்தனர். ஆடல்த் தொழிலை உடைய மகளிர் தாம் பாடுகின்ற பாட்டு யாழிசைக்கு இயையுமாறு நரம்பைக் கூட்டுதற்கு விரும்பினர். குளிர்ச்சியாலே தன்நிலை குலைந்த இனிய குரலாகிய நரம்பைப் பெரிய எழுகின்ற முலையின் வெப்பத்தே தடவிக்கரிய தண்டினையுடைய சிறிய யாழைப் பண்நிற்கும் முறையிலே நிறுத்தினர். கணவரைப் பிரிந்த தலைவி மிகவும் வருத்தமடைகிறாள் என்பதைக் கவிஞர் அழகாகக் கூறியுள்ளார்.

அரசியின் அந்தப்புர மாளிகைச் சிறப்பை நோக்கும் போது சோனகர் பண்ணின் சிறந்த வேலைப்பாடமைந்த பாவை தன்கையில் ஏந்தியிருக்கின்ற வியப்புடைய தகளி நிறையும்படி நெய்வார்க்கப்பட்டுள்ளது. அரியகாவலையுடையது. பல கட்டுக்களையுடையது. அக்கட்டுக்களின் நெடிய சுவர்கள் மலைகளைக் கண்டாற் போன்ற கருமையையும், திரட்சியையுமுடைய திண்ணிய தூண்களையுடையன. இப்படியாக அந்தப்புரம் சிறப்புற்றிருந்தது.

அரசியின் கட்டில் அமைப்பை நோக்குகையில் யானைத் தந்தாற் செய்த கட்டில் அக்கட்டிலின் கால்கள் சூல் முற்றியசைந்த இயல்பினையுடையராகிய மகளிரது பால்கட்டி வீங்கின மூலையை ஒப்பப் பக்கமுருண்டு திரண்ட குடத்தையுடையன. குடத்திற்கும் கட்டிலுக்கும் நடுவாகிய இடம் ஒ'ழுக மெல்லியதாய்த் திரண்டு உள்ளி முதல் போலும் வலியையுடைய கால்கள் அத்தகைய கால்களைத் தன்னிடத்தே தைத்துச் சமைத்துப் பேரள வெய்திய கட்டில் அதன்மேல் சிறுபூளை, செம்பஞ்ச, வெண்பஞ்சு, சேணம், உறுதூவி என்ற ஐந்தும் தன்னுள் இணைதல் அணைந்த படுக்கை மெல்லிதாக விரிந்து கிடக்கிறது. செங்கழுநீர் முதலியவற்றின் இதழ்கள் அப் படுக்கையின் மேல் விரிக்கப்பட்டுள்ளன.

அரசனைப் பிரிந்த அரசியின் நிலையானது மிக்க சோகமாயுள்ளது. நெடிய தாலி நாண் ஒன்ற மட்டும் அவளது கழுத்தில் கிடந்தது. சிறிய இடத்தையுடைய தாளுருவி அழுத்திய காதுகள் பெரிய ஒளியொழுகிய மகரக் குழையைக் கழற்றியமையால் சிறிதே தாழ்ந்துள்ளன. முன்பு பொன்னாற் செய்த வளையல் கிடந்து தழும்பியிருந்த, மயிர் ஒழுங்கு பட்டுக் கிடந்த முன்கையிலே வலம்புரிச் சங்கையறுத்துப் பண்ணிய வளையை அணிந்து காப்பு நாணைக் கட்டியிருந்தாள். வாளையினது பிளந்த வாயைப் போன்று முடக்கத்தை உண்டாக்கிச் சிவந்த நிறத்தையுடைய மடக்கென்றும் மோதிரத்தைச் சிவந்த தனத விரலிடத்தே இட்டிருந்தாள். முன்பு பூத்தொழிலையுடைய அவளது அல்குவில், அழகிய மாசு படிந்த நூலாற் செய்த புடைவையை உடுத்திருந்தாள். இப்படியாக அரசியின் நிலையை நெடுநெல்வாடை கூறுகிறது.

அடுத்த சேடியர்களது செயல்களைப் பார்க்கும் போது பிரிவாற்றாமையால் வருந்தும் பெருந்தேவிக்கு அருந்துயில் உண்டாகுவோமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி அவ்வரசியின் அழகிய அடியைத் தடவினர். இச் சேடியர்கள் மாந்தளிர் போன்ற நிறத்தையுடையவர்கள். அழகிய மூங்கில் போல் திரண்ட மெல்லிய தோளையுடையர் மெத்தென்ற தன்மையினையும் உடையவர்களாவர்.

நரைவிரா வுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ
குறியவும் நெடியவும் உணரபவ பயிற்றி
இன்னே வருகுவர் இன்துணையோர் என
உகந்தவை மொழியவும்

மேலும் செவிலித்தாய்மார் தலைவியின் துயரைக் கண்டு அவளுக்குத் தோற்றவுரைகள் கூறினர். இப்பொழுதே நினைக்கினிய துணைவர் வருகுவர் என்று அவள் மனதுக்கினிய சொற்களைச் சொல்லினர். அங்ஙனம் கூறவும் அதற்குப் பெருந்தாளாய்க் கோப்பெருந்தேவி பெரிதும் கலங்கினள்.

குடங்களைக் கடைந்து தைத்த சாதிலிங்கம் பூசின வலிய நிலையினையுடைய மேற்கட்டியிற் சேர்ந்த திரண்ட கால்கள் கட்டிற்கால்களோடு இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. திங்களோடு திரியாமல் நின்ற உரோகிணியைப் போல யாமும் பிரிவின்றியிருத்தலைப் பெற்றிலோமேயென்று இணைந்து கண்ணீர் சிந்தினாள். தலைவி இங்ஙனம் தனிமையோடு துன்புற்றுக்கிடக்கும் தலைவியைப்பார்த்து செவலியருள் ஒருத்தி தலைவன் இனிதே வெற்றி பெற்று வரவேண்டும் என திருமகளை வேண்டுகிறாள்.

ஒளி விளங்கும் பட்டத்துடன் பொலிவு பெற்ற போர்த்தொழிலைப் பயின்ற யானையின் நீண்டு திரண்ட பெரிய கை அற்று நிலத்தே புரளுமாறு யானையை முன்னர்க்கொன்ற அருஞ்செயற் பெருவீரருடைய வாளினாற் போழ்ந்த சீரிய புண்ணைக் கண்டு பரிகரித்தற்குத் தான் இருக்கின்ற இடத்திற்குப் புறம்பே போந்து புரலவன் திரி தருகின்றான். உடன் வரும் வீரன் கையில் தாங்கிய விளக்கில் எரிகின்ற பருத்த கொழுந்து வடதிசைக் கண்ணதாகிய குளிர்ந்த காற்று அடிக்குந்தோறும் அசைந்து தெற்கு நோக்கி எழுந்து சாய்ந்த தலையினையுடையதாய் எரிந்தது.

வேப்ப மாலையைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலைத் தாங்கிய படைத்தலைவன் வேந்தன் முன்செல்கிறான். அப்படைத்தலைவன் புண்பட்ட வீரரைப் புரவலற்க முறை முறையே காட்டுகின்றான். மணிகளைப் புறத்தே இடம்பெற்றுள்ள பெரிய அடிகளையுடைய யானைகளும் பக்கரைகழற்றப் பெறாத விரைந்த செலவினையுடைய குதிரைகளும் கரிய சேற்றைத் தெருவில் சிதறின.

செழியன் தன் இடத்தோளினின்றும் நழுவி வீழ்ந்த அழகிய மேலாடையை இடப்பக்கத்தே அணைத்துக் கொள்கிறான். வாளைத்தோளிலே கோத்த தறுகண்மையடைய வீரன் ஒருவனது தோளிலே வைத்த வலக்கையனாய் நடந்து செல்கிறான். விழுப்புண்பட்ட வீரர்முகம் மகிழ ஆறுதல் கூறினான். வெண்கொற்றக் குடையில் கட்டப்பெற்ற முத்துமாலை வாடைக்காற்றில் தவ்வென்னும் ஓசையடன் அசைந்தது. நடுயாமத்துப் பள்ளி கொள்ளாமல் சில வீரருடன் பாசறையிடத்துப் புண்பட்ட வீரரைப் பரிகரித்துக் கொள்ள இருக்கின்றான் வேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனாகிய பேரரசனைப் பிரிந்து கோப்பெருந்தேவி உள்ளங் குலைந்து வருந்துவதற்குக் காரணமான கூதிர்க்காலத்தைப் பற்றிக் கூறப்புகுந்த கீரரின் புலமை மெச்சத்தக்கது. இயற்கையோடு இயைந்த இந்நெடுநெல்வாடையை படிப்போர் நேரிலேயே இயற்கைக் காட்சிகளைக் காண்பது போல இப்பாடல் மூலம் காணுகின்றனர். பழந்தமிழரின் பண்புகளை இப்பாடல் மூலம் படம்பிடித்துக் காட்டுகிறார் கீரர். கூதிர்காலம் எப்படியிருக்கும் தலைவனைப் பிரிந்த தலைவி, இதனால் படும் வேதனைகள் பாசறையின் கண் இருக்கும் தலைவன் நற்செயல்கள் அதாவது

விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளையெடுத்து

என்பது தான் பறக் குடியிற் பிறந்த பெருவீரனது இயல்பு என்பதை இவ் அடிகள் மூலம் அறியலாம்.

வேம்புதலை யாத்த நோன் காழ் எ.்.க மொடு
முன்னோன் முறைமுறை காட்டப்பின்னர்

என்ற அடிகளில் மன்னன் வீரரை முகனமர்ந்து நோக்கி இன்னுரை பகர்ந்து செல்கிறான். படைத்தலைவனாகிய முன்னோன் இங்கும் அரசர்க்கு முதல்வனாகவே வேலைத்தாங்கி மிடுக்குடன் செல்கிறான். படைகள் அனைத்திற்கும் முன்னோன்.

நக்கீரர் இப்பாடலை முடிக்குந்திறன் வியந்து பாராட்டுதற்கரியதாகும். வேந்தன் பலரொடு முரணிய பாசறைத் தொழில் புலம்பொடு வதியும் நலங்கினர் அறிவைக்கு இன்னா அரும்படர்தீர விறல் தந்து இன்னே முடிகதில்லம்ம என்ற பாட்டை முடிக்கின்றார்.

அரசன் போரில் வென்று வெற்றி முழக்கொடு தன் நகர்ப்புகுந்து இன்னுயிர்த் தலைவிக்கு இன்பம் அளித்தான். என்று தம் வாயாற் சொல்லாமலேயே பாட்டைப் படிப்பார். தாமே உய்த்துணர்ந்து கொள்ளுமாறு வெற்றி பெற்றுத் திரும்புதற்குரிய விரும்புறு நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ்ந்தன என்பதை மட்டும் கூறி இறதி வெற்றியை உறுதிப்படுத்திய உயர் தமிழ்ப் புலவரின் பேரறிவை என்னென்பது.

பத்துப்பாட்டில் அகப்புறப்பாடலாக அமையும் இந்நெடுநல்வாடையைப் பாடிய நக்கீரர் என்றுமே பெருமைக்குரியவர். இவரது பாடல் மூலம் அக்கால வாழ்க்கையை இயற்கையோடு இணைத்துப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. அக்கால மக்களது வாழ்க்கை முறைகளைத் தெளிவான முறையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார் புலவர். நீண்ட நல்ல வாடைக் காற்றாக விளங்கும் நெடுநெல்வாடை நெடுநாள்கள் மக்கள் மனதில் நிலைத்து நிற்குமெனில் அதுமிகையல்ல.

திருமதி.வி.சடாட்சரம்
பேரவைப் பொறுப்பாசிரியர்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுக்குகள்

பளிச் பளிச்சென்ற மின்னல்கள் போல் புகைப்பட வெளிச்சங்களை கமராக்கள் கக்கிக் கொண்டிருக்க நறுமணத்துடன் புகைந்துகொண்டிருக்கும் ஊதுபத்திகளும் மாறி மாறி ஒருவர் கையிலிருந்து மற்றவர் கைக்கு மாறும் மெழுகுதிரியும், அதன்மூலம் ஒளிபெறும் விளக்குத் திரிகளையும் பார்க்கின்றபோது மங்கல விளக்கேற்றும் நிகழ்வு நடைபெற்று விழாநாயகன் மேடைக்கு அழைத்து வரப்பட்டு பட்டுக்கம்பளம் போன்ற கதிரையில் அமர்ந்திருக்க, அடிக்கடி தட்டப்படும் கைதட்டல்கள் ஒவ்வொரு விருந்தினர்களின் உரைநிறைவுற்றதைக் காட்டியது.

முற்போக்கு சிந்தனையுடைய இலக்கியவாதியின் நூலும், அவற்றிற்கான பாராட்டும், அது நடைபெறம் திகதியும் நடத்துபவர்கள் யார் என்பது பற்றிய விளம்பரப்பலகை போன்ற துணியினால் பெரிய பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டு இருந்த மேடையிலே விருந்தினர்கள் பட்டுவண்ணக் கதிரையில் இருந்த இன்றைய பாராட்டு விழாவை நடாத்திக் கொண்டிருந்தனர்.

ஆம் இன்றைய பாராட்டு விழாவிற்கு உரியவரான பிரபல முற்போக்கு இலக்கியவாதி திரு.ஏகாம்பரம் தான். சாதிக்கொடுமைகள் பற்றியும் அது எங்கட தேசத்திற்கும் எங்களிடமிருந்தும் வேரோடு அளிக்கப்படவேண்டும். என்ற கொள்ளையுடனான மிகத் தரமான நாவலை எழுதியமைக்காக அவருக்கு அண்மையில் பரிசு கிடைக்கப்பெற்று அவற்றையெல்லாம் பெருமையாக வாங்கி வந்தவர்தான் திரு.ஏகாம்பரம். இவர் சாதிக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை உடையவராக இருந்தமையால் இவருக்கு கொள்கையன் என்ற புனைபெயரும் உண்டு.

விழாவை நடாத்தும் செயலாளர் எழுந்து இப்போது எங்களுடைய விழாநாயகனும் கௌரவத்துக்குரிய பரிசுகளை தனது எழுத்துத் திறமையால் வாங்கியவரும் கொள்கையன் என்ற புனை பெயரை உடையவருமான எங்கள் விழாநாயகன் உங்களுக்கு உரையாற்றுவார் எனக் குறிப்பிட்டு அமர்ந்தார்.

ஏகாம்பரத்தார் மேடையில் பேசுவதற்கு எழுந்ததும் ஒரே கைதட்டல் மைக்கின் முன்னின்று பெருமையுடன் பேசத் தொடங்கினார். அனைவருக்கும் வணக்கம். இன்றைய இந்த விழா என்மீதும் எனது எழுத்தின்மீதும் முக்கியமான எனது கொள்கை மீதும் நீங்கள் கொண்டிருந்த மதிப்பைக் காட்டுகிறது. எங்களுடைய சமூகத்தில் புரையோடிப் போயிருக்கின்ற தீண்டாமை, சாதிப்பிரிவினைகள், தொழில் வேறுபாடுகள் என்பன ஒழிக்கப்பட வேண்டும். நாங்கள் யாவரும் ஓரினமே. பகவத் கீதையிலே கிருஷ்ணபகவான் கூட கூறியிருக்கிறார் ஒரு வைத்தியனின் தொழிலும் ஒரு தோட்டியின் தொழிலும் சமமானது. ஏனெனில் வைத்தியன் நோயை நீக்குகிறான். தோட்டி சமூகத்தில் உள்ள அழுக்கை நீக்ககிறான். தோட்டியாளன் சமூகத்தின் அழுக்கை நீக்காவிடில் எம்மிடையே நோய்கள் பெருகும். எனவே வைத்தியனைவிட மேலானவன் தோட்டிதான். எனவே தொழில்கள் யாவும் சமம். மனிதர்கள் யாவரும் சமம். எம்மிடையே சாதி என்ற புற்றுநோயை இன்றே ஒழிப்போம். இப்பவே ஒழிப்போம் என முழங்கினார். வானைப் பிளக்கும் கைதட்டல்களும், பூமாலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாடைகளும் குவியத் தொடங்கின.

சாதி ஒழிப்பு மன்னன் எங்கள் கொள்கையனின் நாவல், டானியலின் நாவலையும் விஞ்சி நிற்கிறது எனவும் சாதி ஒழிப்பு பற்றிய இவருடைய நாவல்கள் மேலும் வளர வேண்டும் எனவும் கூறிய செயலாளர் நன்றியுரையுடன் விழாவை முடித்து வைத்தார். ஏகம்பரத்தார் பொற்கிழியையும் பொன்னாடைகளையும் கழுத்தில் விழுந்த மாலைகளையும் ஏந்தியபடி பெருமையாக தனது வீட்டிற்கு போய் இறங்கினார்.

தான் இவ்வாறான பாராட்டு விழாக்களைப் பெற்றுச் செல்லும் போது மங்களம் வீட்டு வாசலில் சென்று அவரை அழைத்து வருவதுதான் இவ்வளவு காலமும் வழக்கம். அன்றும் தனது வீட்டிற்குச் சென்றவர் மோட்டார் சைக்கிள் கோனை அழுத்திய போதும் மங்களம் வெளியே வரவில்லை.

தான் கொண்டு வந்த பொருட்களை வைத்துவிட்டு மங்களத்தை தேடிக் குசினிக்குள் சென்றார். மங்களம் உம் என்ற முகத்தை தூக்கி வைத்துக் கொண்டிருப்பதை கண்டதும் ஊகித்து விட்டார். தன்னுடைய தயார் மங்களத்திற்கு ஏதோ கரைச்சல் கொடுத்திருக்க வேண்டுமென்று.

மங்களம் அம்மா சாப்பிட்டாவா? இல்லை அவ எனிமேல் சாப்பிடமாட்டாவாம் ஏனாம் உண்ணாவிரதம் இருக்கப் போறாவாமே தன்ரை மகளைத் தான் சாகிறத்துக்கிடையில பாாக்கவேணுமாம் அதுதான் நடக்காது அப்படியான எண்ணத்தைக் கைவிடச் சொல்லி அவவிட்ட ஏற்கனவே போட்டன்தானே நீங்க அவவின்ரை மகளோட விட்டிருந்தா எனக்கு இப்படிக் கரைச்சல்படுகிற வேலை இல்லைத் தானே. எங்கடை அம்மாவும் ஐயாவும் இந்த காலத்திலையும் தனிய இருக்கினம் தானே. அதுக்கு, அதுதான் அவவை ஒண்டில் தனிய இருக்க விட்டிருக்கலாம். எனக்கென்ன உங்கடை அம்மாவோடை கிடந்து மாரடிக்க தலையெழுத்தா?

மங்களம் மங்கையோட அம்மாவை விட்டாலோ இல்லாட்டி அம்மா தனிய இருந்தாலே மங்கை வந்து கொண்டாடுவாள் கொண்டாடினால் உங்களுக்கென்ன தோலுக்கையா பூரப்போகுது நீ இன்னும் உலகம் தெரியாத ஆளா இருக்கிறாய்

மங்கை தறுதலை பறையனை விரும்பி கலியாணம் செய்யாம இருந்திருந்தா இண்டைக்கு எங்கட சந்தியில முன்னுக்கு நிக்க விட்டிருப்பன் இல்லை நான் தெரியாமத்தான் கேக்கிறன் எத்தனையோ தலைமுறைக்கு முந்தி மங்கையின்ரை புருஷன்ரை ஆக்கள் பறைய வேலைசெய்தவை எண்டதுக்காக இப்பவும் அதைப் பெரிசுபடுத்திக் கொண்டிருக்கிறதால என்ன லாபம்? இஞ்சை பார் மங்களம் நீ வெளி உலகங்களுக்கு வெளிக்கிடாதபடியால உனக்கு நாலு பேர் எங்களை என்ன மதிப்பெடுப்பாங்கள் எண்டு தெரியேல்லை.

"என்னத்தையோ சொல்லுங்கோ அந்த மனிசியின்ர சீவனும் மங்கையைப் பார்க்காம அடங்க மாட்டுது. இண்டைக்கு எத்தினை நாளா தவிக்குது. உங்களுக்கு டாக்குத்தர் சொன்னது ஞாபகம் இல்லையா?" எனக் கோபமாகக் கூறிவிட்டு உள்ளே சென்றாள் மங்களம். "சீச்சீ! இந்த வீட்டில் மனுசர் ஒரு சந்தோஷத்தை அனபவிக்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலாது" என புறுபுறுத்தபடி உள்ளே சென்றார். தாயின் ஆசையை நினைக்க ஏகாம்பரத்துக்கு எரிச்சல்தான் மேலோங்கியது. தாயைப் பார்க்கவும் மனமற்று உள்ளே சென்றார். அப்போதுதான் மேசையின் மீதிருந்த இரு புத்தகத்திற்கான பிரதிகள் அவரின் கண்ணில்பட்டன.

அடடா இன்று நாலு மணிக்கு இந்நூலை எழுதியோர் வருவார்களே. இரண்டுக்கும் அணிந்துரை எழுதவேண்டிய தேவை இருந்தது. எனவே முகத்தைக் கழுவிவிட்டு நீண்டநேரம் சுவாமிப் படங்களை கண்மூடித் தியானித்து விட்டு வந்து அணிந்துரை எழுதத் தொடங்கினார். ஒரு நூலின் "தாயின் ஆசை" என்னும் சிறுவர் கதை மற்றையது "இருசாதிகளே வேறில்லை" என்னும் சிறுகதைத் தொகுதி. ஆகா அருமையான தலைப்புக்கள் என எண்ணிக்கொண்டவராய் அழகான சொற்களில் அணிந்துரைகளை எழுதத் தொடங்கினார். எம்மைப் பெற்று வளர்த்து பாராட்டிச் சீராட்டிய தாய் தந்தையரின் ஒவ்வொரு சின்னச்சின்ன ஆசைகளை நிறைவேற்ற வேண்டியது பிள்ளைகளின் கடமை. இவ்வாறான சிறிய ஆசைகளைக் கூட நிறைவேற்ற முடியாதுவிட்டால் நாங்கள் மனிதப் பிறவி எடுத்ததற்கே அர்த்தம் அல்லாது போய்விடும். அது அந்நூலின் நூலாசிரியர் மட்டுமல்ல அவரது எழுத்திலும் செயல்வடிவம் பெற்றுள்ளது என சிறப்பான அணிந்துரையை எழுதினார்.

கட்டிலிலே சாய்ந்து விட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த கனகம்மாவிற்கு தன்னுடைய பழைய நினைவுகள் கண்ணில் நிழலாடத் தொடங்கின. தன்ரை விருப்பப்படி கலியாணஞ் செய்த தன்ரை மகள் இண்டைக்கு ஒரு ஆசிரியராயும், மருமகன் ஒரு அதிபராயும் இருந்தும் சாதி என்ற ஒரு மாயை இன்னும் மண்ணைவிட்டு மறையாதபடியால இண்டைக்கு என்ரை பேரமக்கள் கூடப் பார்க்க வழியில்லையே.

கடவுளே என்ரை ஆம்பிள்ளைப்பிள்ளையை நம்பி வாழுற படியால என்னால ஒண்டும் செய்ய முடியாம இருக்கே. என்ரை புருஷன்ரை ஆசைதான் நிறைவேறாமப் போச்சு. எனி என்ரை ஆசையும் நிறைவேறாமத் தானே நானும் சாகவேணும் என நினைத்த கனகம்மாவின் கண்முன் கணவரின் மரணவீட்டுக் காட்சிகள் வரத் தொடங்கின. பாரிசவாதத்தால் படுக்கையில் கிடந்த தகப்பனை, தன்னுடைய தங்கை பார்த்து விடுவாளென எண்ணி, வைத்தியசாலையில் கூட அனுமதிக்கவில்லை. "ஏனெண்டா ஆஸ்பத்திரி பொது இடம். அங்க மங்கை வந்து தன்ரை தகப்பனைப் பார்ப்பாள். பறையனைக் கலியாணம் செய்தவள் என்ரை தகப்பனின்ரை மையத்தில்கூட முழிக்கக்கூடாது" என உறுதியாகக் கூறினார் ஏகாம்பரம்.

தன்னுடைய தாயையும் பார்த்து "உங்களுக்கு உங்கடை மகள்தான் தேவையெண்டா இல்லாட்டி அவள் உங்களோட கொண்டாடுகிறது என்றா உங்கடை ஆம்பிளைப்பிள்ளை செத்திட்டு எண்டு நினைச்சுக்கொண்டு போங்கோ" எனக்கூறிய ஆவேசவார்த்தைகளால் தன் மனத்து ஆசைகளை அடக்கிக் கொண்டார் கனகம்மா. தனது தந்தையின் மரண அறிவித்தலில்கூட மங்கையின் பெயர் இடம்பெறவில்லை. மகளைப் போட்டால் பின் மருமகனின் பெயர் போடவேண்டிவரும். பின் அவர் யார் அவரின் குலம் கோத்திரம், சாதி, சமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவேண்டிவரும். எனவே அந்த "பறைக்குடும்பமே வேண்டாம்" என எண்ணினார் ஏகாம்பரம்.

ஏகாம்பரத்தின் தந்தையின் ஆத்துமா சாந்தியடைய வேண்டும் என்று புண்ணிய நீரநிலைகளில் அஸ்தியைக் கரைத்தும், அந்தியேட்டியை சிறப்பான முறையிலும், இது என்ன விழாவா எனவும், தன்ரை தகப்பனில் எவ்வளவு பாசம், இப்பிடி ஒரு குடுத்து வைச்ச மனுசனா? என ஊரே போற்றும்படி அந்தியேட்டி செய்தார் ஏகாம்பரம். செத்த சீவனின்ரை இறுதி தவிப்புகளும், ஆசைகளும் நிறைவேறாமலேயே போனதை கனகம்மாவும் அவரின் கணவனும் மட்டுமே அறிவர். ஐயோ! என்ரை புருஷனுக்காவது நான் ஆறுதலா இருந்தன். எனி என்ரை நிலைமை என்ன? நானும் என்ரை பொம்பிள்ளைப் பிள்ளையைக் காணாமலா சாகப்போகிறேன்? அப்ப எனக்கு நெய்ப்பந்தம் பிடிக்க என்ரை பேரமக்களுக்கு உரிமை இல்லையா?

என்ரை பொம்பிளைப்பிள்ளை செய்த குற்றமென்ன? இல்லாட்டி என்ரை மருமகன்தான் செய்த குற்றமென்ன? அவருடைய தலைமுறையில் எத்தினையோ வருடத்திற்கு முந்தி ஆரோ சுத்திகரிக்கிற தொழில் பார்த்ததுக்காக இப்பவும் அவைய அந்தச் சாதியின்ரை பெயரால சொல்லலாமா? என்ரை மருமகனுக்கு கூட தன்ரை தலைமுறையில ஆரு அந்தத் தொழில் செய்ததெண்டே தெரியாது. இப்படியிருக்க ஏன் இந்த சமூகத்தில் இப்பிடியொரு பாடு. அழுக்கை நீக்கி நாங்க இருக்கிற இடங்களை சுத்திகரிக்கிற வேலை கேவலமா? இதுவரைக்கும் என்னால என்ரை சமூகத்தையோ அல்லாட்டி என்ரை மகனையே தட்டிக் கேக்கிற துணிவு எனக்கோ என்ரை புருஷனுக்கோ இல்லாமல் போச்சே.

இண்டைக்கு எப்பிடியும் என்ரை மகனிட்ட ஒரு முடிவு கேக்க வேணும் என எண்ணியபடியே தனது சேலைத்தலைப்பினால் கண்களையும், மூக்கையும் துடைத்தபடி ஏகாம்பரம் அறையில் இருந்து எழுதிக் கொண்டிருக்கும் இடத்திற்கு சென்றாள். அப்போதுதான் "சாதிகள் இரண்டொழிய வேறில்லை" என்ற சிறுகதைத் தொகுதிக்கு தான் எழுதிய அணிந்துரையை பலமாக வாசித்து சரி பிழைகளை அறிந்துகொள்வதில் இருந்தார்.

இன்றைய சமூகத்தில சாதி என்ற புற்றுநோயால் எமது சமூகம் நோயாளியாகிக் கொண்டிருக்கிறது. நாம் அனைவரும் ஓரினம். எங்களுக்குள் ஆண் சாதி, பெண்சாதி என்ற சாதிகள் வேறில்லை. தொழிலினை வைத்து சாதிகள் பரிக்கக்கூடாது. ஒரு தோட்டியின் தொழிலும் வைத்தியனின் தொழிலும் ஒன்று எனக் கீதையிலே கிருஷ்ணபரமாத்மா கூட கூறியுள்ளார். சாதிகள் ஒழிக்கப்படவேண்டும். இவ்வாறான சொல்லே எம் அகராதியிலும், அகங்களிலும் இருந்து அகற்றப்பட வேண்டும் என்ற எனது கொள்கையை இந்நூலின் ஆசிரியரும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார் என வாசிப்பின் ஒலியைக் கூட்டி வாசித்தார்.

"தம்பி ஏகாம்பரம் உன்னோட ஒரு அலுவல்" கதைக்க வேணும். தனது தாயார் எதைப்பற்றிக் கதைப்பார் என்பதை முன்பே அறிந்த ஏகாம்பரம். "என்ன அலுவல் எண்டு சொல்லுங்கோ எனக்கு கன வேலை கிடக்கு" தொண்டையில் இருந்து வார்த்தைகள் வெளியே வரமுன்னர் படபடப்பும் கண்ணீரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லொண்ணாத வேதனையுடனும் "என்ரை மங்கையைப் பார்க்க வேணும் எண்டு ஒரே தவிப்பாய் கிடக்கு. ஐயான்ரை சவத்திலும் முழிக்க அதுகள நீ விடேல்லை. உன்னையும் மீறி நான் அவளிட்ட போய்க் கதைச்சா நீ சாவன் எண்டு சொல்லிற. நான் எந்தப் பிள்ளையைப் பார்க்கிறது. "ரெண்டு பேரையும் பத்து மாதம் சுமந்து தானே பெத்தனான்".

"அவளின்ரை கதை என்னோடை கதைக்கக் கூடாது. அவளோட கொண்டாடினா நாளைக்கு என்ரை பிள்ளையளின்ரை நிலமை என்னாகிறது". "தம்பி அதுகள் இன்னும் நேசறிக்குப் போகாதா பாலகர்களின் எதிர்காலத்தைப் பாக்கிறாய்" "நான் என்ரை பிள்ளையள் வளர நல்ல இடத்தில கட்டிக்கொடுத்து கௌரவமாக இருக்க விரும்புறன்". "தம்பி எனக்கெண்டும் ஒரு ஆசை இருக்கு, என்னை மங்கை வீட்டைதான் விடாவிட்டாலும் எங்கையும் கோயில் குளத்திலகூப்பிட்டு எண்டாலும் அதுகளைப் பாக்கிறன் ராசா" என்றார் தன்னையும் மீறிவந்த அழுகையை அடக்கியபடி.


"முடிவாய்ச் சொல்லிப் போட்டன் சமூகத்தில நான் எந்த பெரிய ஒரு பேர் போன ஆள். நான் கொள்கைக்காக முழங்கினாலும் என்ரை எழுத்தை ஏற்றுக்கொள்ளாத சமூகம், நான் மங்கையோட கொண்டாடுறதை அறிஞ்சா என்னை ஏற்றுக்கொள்ளுமோ தெரியாது" "கொள்கைகள் ஒவ்வொன்றும் மேடையில பேசவும் எழுதவும் தான் சரி. அதை நடைமுறை வாழ்க்கையில பிரயோகிக்க ஏலாது. மங்கையோடயோ, அல்லாட்டி அந்தா பறைக்குடும்பமோடயோ கொண்டாடுற வேலையை வைச்சிருக்காதீங்க".

"என்னட்டை இனியும் இப்பிடி ஒரு கேள்வியைக் கேக்காதீங்க. உங்கட சவத்திலயும் மங்கையை முழிக்க விடமாட்டன். எனக்கொரு தங்கச்சி இருந்ததையே நான் நினைக்கிறேல்லை" எனப் பொரிந்து தள்ளினான் ஏகாம்பரம். புண்பட்ட மனதுடனும், ஆறாக வடியும் கண்ணீருடனும் வெளியே வந்தாள் கனகம்மா ஆச்சி. "ம்..... எத்தினை பாரதி தோன்றி என்ன? என்னத்தைச் சொல்லி என்ன? முற்போக்கு எழுத்தாளர் தோன்றி முற்போக்குச் சிந்தனையுடைய எத்தனை சரித்திரங்களைப் படைச்சாலும் எங்கட தலைவிதி மாறாது என எண்ணியவளாய். என்னுடைய சாவீட்டிலும் என்ரை மையத்திற்காக ஒரு சண்டை வேண்டாம்.என்ரை மகள் முழிக்காத என்னுடைய பிணத்தில ஒருவருமே முழிக்கக்கூடாது. சாதாரண நியாயமான ஆசைகூட நிறைவேறாமல் சாகப்போகும் என்னுடைய அஸ்தியை எத்தனை புனிதமான நதிகளில் கரைத்தாலும் என்ன? பகட்டிற்கான ஆண்டுத் திவசங்கள் எதற்கு என எண்ணியவளாய், திடமான முடிவோடு கண்காணத் தேசத்திற்கு நடந்தாள் கனகம்மா ஆச்சி கால்போகும் திசையில்.

திருமதி கஜநந்தினி வரதலோஜன்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி மறப்பது நன்றன்று

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு அமைய வைத்தீஸ்வரன் முன்றலில் நான்காவது முறையாக தமிழ் அலைகள் வெளிவர வழி செய்த எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானின் நல்லாசியுடனும் தமிழ் அலைகள் மறுபடியும் எழ வேண்டும் என்ற ஆக்கமும் ஊக்கமும் அளித்த கல்லூரி அதிபர், உப அதிபர், பொறுப்பாசிரியர் உதவி ஆசிரிய ஆலோசகர்கள் ஏனைய ஆசிரியர்கள் பேரவை உறுப்பினர்கள், ஆக்கங்களை வழங்கியவர்கள், விளம்பரதாரர்கள் அனுசரணையாளர்கள் ஆகியோருக்கும் குறுகிய நாட்களுக்குள் இம்மலரை அச்சிட்ட ஆகொழும்பு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் மற்றும் ஒத்தழைப்பு வழங்கிய பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது தமிழ்பேரவை சார்பில் மனமார்ந்த நன்றிதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.


**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**
**தமிழ்ப்பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2012

## உலகளாவிய மற்றும் உள்ளூர் பொதிகள் சேவை

யாழ் ⇄ கொழும்பு

கொழும்பு → மட்டக்களப்பு / திருகோணமலை / வவுனியா

வெளிநாட்டிலுள்ள உங்கள் அன்புக்குரியவர்களிற்கு உணவுப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள், ஆவணங்கள் என்பவற்றை குறைந்த கட்டணத்தில் விரைவாகவும்
பாதுகாப்பாகவும் அனுப்பிக்கொள்ள நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்.
எம்மிடம் ஒப்படைக்கப்படும் பொதிகள் ARAMEX இன் வேகமான சேவை
மூலம் நான்கு வேலைநாட்களில் உங்கள் உறவினர்களின்
முகவரியில் கையளிக்கப்படும்.

எமது விசேட முகவர் சேவைகள்

லண்டன், சுவிஸ், அவுஸ்ரேலியா, பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளுக்கு உங்கள் தேவைக்கேற்ப வீட்டு முகவரிக்கோ அல்லது எமது முகவர் நிலையங்களிலோ பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படும். அதேபோல் மேற்குறிப்பிட்ட எமது முகவர் நிலையங்களினூடாக யாழ் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் பொதிகளை எமது யாழ் கிளையினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாடுகளில் ஒன்லைனில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களை ARAMEX ஊடாக இலங்கையில் எந்த முகவரிக்கும் பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

உள்நாட்டில் இலங்கையின் எப்பாகத்திற்கும் பொதிகளை விரைவாகவும்
பாதுகாப்பாகவும் அனுப்பவும். பெற்றுக்கொள்ளவும் முடியும்.

# G.T.V ENTERPRISES (PVT) LTD.

*Importers, Exporters, Food Producers, Forwarding & Clearing Agents. Cargo Servicesa to all Countries by Air & Sea. Sri Lankan Airlines Cargo Agent*

VIJEYA ENTERPRISES — MAHARAJA FOOD PRODUCTS

No.18/3, Dr.E.A. Cooray Mawatha, Wellawatte, Colombo - 06
Tel : 011 2 360 926, 011 4654444 Fax : 011 2 361 139
E-Mail : infogtventer.com

**Branches:**

| | |
|---|---|
| No.170, Central Road, Colombo - 12 | Tel : 011 2 448 928 |
| No.288, George, D.De.Silva Mw, Kotahena, Colombo - 13 | Tel : 011 4378163 |
| No.G-2 146, Negombo Road, Wattala. (Pearl Park) | Tel : 011 2 938 152 |
| **NO.225, KASTHURIYAR ROAD, JAFFNA.** | **TEL : 021 222 4338** |
| **NO.272, K.K.S. ROAD, JAFFNA.** | **TEL : 021 222 4825** |
| No.37/4, Trinco Road Batticaloa. | Tel : 065 222 7982 |
| No.41, Orr's Hill, Uvarmalai, Trinco (Thenthamil Veethy Junction) | Tel : 026 222 1510 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ABBI MOTORS WORKS & SERVICE CENTER

## அபி உந்துருளி சீர்களமும் தூய்மிப்பகமும்



No.45 சிவன்வடக்கு வீதி. யாழ்ப்பாணம்.

Director - J.Jeyakanthan


# *SHIVAN MOTORS STORES*

**Distibutors For:**

**AKSO NOBEL PAINTS LANKA (PVT) LTD.**

**HAYLEYS ELECTRONICS LIGHTING (PVT) LTD.**

No.70/1 Manipay Road,
Jaffna, Srilanka.
Tel. +94 21 222 2763
+94 21 492 0545
Fax. +94 21 222 8647
Mobi +94 77 744 8131
+94 75 038 8388




Dulux let's colour


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபன் படமாளிகை
அன்
நியூ அலுமேனியம்
பிற்றிங் சென்ரர்

எம்மிடம் நீங்கள் விரும்பிடும்
வடிவங்களில் ஏற்ற தரங்களில்
அலுமினிய பிற்றிங் செய்து
பெற்றுக்கொள்ள,
படம் பிறேம் போடுதல்
என்பனவற்றை
மனத்திருப்தியுடன்
செய்து பெற்றுக்கொளளலாம்.

பிரவீணா
ஹாட்வெயார்

இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள்
மற்றும் விநியோகஸ்தர்
சீமெந்து, வன்பொருள், எலெக்ட்ரிக்கல்ஸ்,
அலுமினியம், கண்ணாடி, பிளைவூட், பெயின்ட்
மற்றும் இதர பொது வியாபாரிகள்

இல. ௰௮. கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : ௦௨௧ ௨௨௨ ௪௯௦௧
தொ.நகல் : ௦௨௧ ௨௨௨ ௪௯௰

துர்க்கா
நகைப்பூங்கா





இல. 256
கன்னாதிட்டிச்சந்தி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

SIVAKANESAN
Textiles





Wholesale & Retail Dealers
in Textiles
Specialist in Wedding Sarees





#41, Grand Bazaar,
Jaffna. Tel : 021 2220 2063



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saranka
Jewellery
சாரங்கா
நகைமாடம்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே : 021 222 6972


சிறி நதியா
நகைமாளிகை
56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2226744

Sree Nathiya
Digital Colour Lap
Laxan Plaza Building
No. 108A, Navalar Road, Jaffna.
Tel : 021 2228442

ஜெகன் களஞ்சியம்
475, காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5035

பலசரக்கு பொருட்கள்,
மிக்சர் தயாரிப்பு பொருட்கள்,
போன்றவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
வீட்டுக்கால் விநியோகஸ்தர்கள்

சண்முகம் சைவ
உணவகம்
10, கன்னாதிட்டி வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2228445


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IIS CITY CAMPUS

©STARWALT DESIGN

edexcel

HND

Higher National Diploma

in
Computing/
Business Management/
Civil Engineering/
Quantity Surveying

உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தர வல்ல சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறிகளில் உங்களை இணைத்து உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளுங்கள்

பலநூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள் காலடியையும் பதித்துக் கொள்ளுங்கள்

பட்டதாரி ஆக வேண்டும் என்ற
உங்கள் கனவை IIS
நனவாக்கி தருகின்றது

IIS
SUCCESS THROUGH KNOWLEDGE

200, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 8060 , FAX : 021 222 6933
WEB : iis.edu.lk, E-Mail : info@iis.edu.lk

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIGITAL ELECTRONICS

SHARP PHOTO COPIERS
(DIGITAL MULTI FUNCTIONAL SYSTERM)



Warranty For 01 Year Or
For 60,000 Copies

Free Services For 01st Year

*Authorized Dealer Of Brown & Company PLC*

**62/16, Stanley Road, Jaffna.**
**T.P :- 021 222 4040, 0776623824**



**SK+F** UK MHRA APPROVED **NovEx** Pharmaceuticals Limited

# Medical Shop

**NOVEX Pharamaceuticals Ltd.**
**No.07, Siebel Avenue,**
**Colombo - 05, Sri Lanka.**

Tel : +94 11 5511401
Fax :+94 11 4514270
Mobile :+94 77 7351107



# செல்லா
## திரையரங்கு

இராமையா செட்டியார் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
S.திருமாறன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dts ஒலிநயத்துடன் சொகுசு ஆசனங்கள்

அமைதியான சூழலில்

"A" தரச் சான்றிதழ் பெற்ற

ஒரே பட மாளிகை

யாழ் மண்ணில் 60ம் ஆண்டில்

(அகவையில்) காலடி பதிக்கும்




# மனோகரா சினிமா

யாழ்ப்பாணம்

T.P : 0212224086

உரிமையாளர்

குணரட்ணம் ஜெயந்திரம்

காட்சி நேரம்

10.30, 2.30, 6.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழில் MKகொழும்பு பிறிண்டேர்ஸ் 666 கே.கே.எஸ் வீதி,யாழ்.